கல்கி



KALKI டிசம்பர் 21, 1952 4 அணா



துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 184-50 TM

பொருளடக்கம்

மலர் 12 இதழ் 21 — 1952 டிசம்பர் 21 — நந்தன ௵ மார்கழி 7

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

உங்களை

எப்பொழுதும்

முன்னேற்றப்

பாதையில்

வைத்திருக்கும்

அன்றாட

முதலீடு

உங்கள் பணம் மேலும் மேலும் விருத்தியாவதை நீங்கள் விரும்புகிறீர்கள் — யார்தான் விரும்பவில்லை—அதுவும் அதிகப்படி பணத்துக்கு வருமான வரி இல்லை என்னும்போது. ஆகவே தேசிய சேமிப்புப் பத்திரங்களை வாங்கிக் கொண்டே இருங்கள். இன்றைய தினம் முதலீடு செய்யப்படுகிற பிரதி 100 ரூபாயும் பன்னிரண்டு வருடங்களில் 150 ரூபாயாகிறது.

உங்கள் பத்திரங்களை முழு காலத்துக்கும் அப்படியே வைத்திருந்தீர்களானால், அவைகள் வருடத்திற்கு 4. 1/6 சத விகித வட்டி அளிக்கின்றன. உண்மையிலேயே இது உயர்ந்த வட்டிதான்.

உங்களால் முடிந்ததையெல்லாம் வாங்குங்கள்; ஆனால் காலவரையறைக்குள் பணமாக மாற்றாதீர்கள்; ஏனென்றால் அவைகள் இன்னும் நல்ல வட்டி சம்பாதித்துக் கொண்டே இருக்கின்றன— மேலும் மேலும் அவை மதிப்பில் உயர்ந்து கொண்டே போகின்றன. நீங்களும் உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரும் எவ்வளவு சிறிய சேமிப்பைக் கொண்டும் கணிசமான தொகையை நாளடைவில் காணலாம்.

5, 10, 50, 100, 500, 1,000, 5,000 ரூபாய் மதிப்புகளில் இப் பத்திரங்கள் தபால் ஆபீஸ்களில் கிடைக்கும்.

அவ்வப்பொழுது திருத்தப்பட்ட 1944-ம் வருஷத்து தேசிய சேமிப்புப் பத்திர விதிகளின் படி வழங்கப் படுகின்றன.

பன்னிரண்டு வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள்

மேற்கொண்டு செய்திகளுக்காகவும் அல்லது இந்த முதலீட்டைக் குறித்த விதிகளுக்காகவும் "கார்டன் காஸில்", சிம்லா - 3 என்னும் விலாசத்திலுள்ள நாஷனல் ஸேவிங்ஸ் கமிஷனருக்காவது உங்கள் ராஜ்யத்தின் மாகாண நாஷனல் ஸேவிங்ஸ் ஆபீஸருக்காவது தயவுசெய்து எழுதிக் கேளுங்கள்.

AC 438 TM

கல்கி

மலர் 12

தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்.

இதழ் 21

தங்கக் கலைக்கு வெள்ளி விழா

சூடுங்காற்று அடித்தாலும் கடல் பொங்கி வந்தாலும் நம்மிடமிருந்து கொண்டு போக முடியாத செல்வம் ஒன்று செந்தமிழ் நாட்டில் இருக்கிறது. மாற்று அறிய முடியாத செழும் பசும் பொன்னை நிகர்த்த அந்த அற்புதச் செல்வந்தான் கர்நாடக சங்கீதக் கலை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றி வளர்த்த கலை. தியாகராஜரும் தீக்ஷிதரும் நாதப்பிரம்ம மயமாகி உபாசனை செய்த தெய்விகக் கலை. மகா வைத்திய நாதர் முதல் வீணை சாம்பசிவய்யர் வரையில் வித்வத் பரம்பரையில் வந்த மகான்கள் எத்தனையோ பேர் மெருகு அளித்து ஒளி வீசச் செய்த தங்கக் கலை.

பணக்காரர்கள்—ஏழைகள், படித்தவர்கள்—படியாதவர்கள், முதலாளிகள்—தொழிலாளிகள் என்ற வேற்றுமை இன்றி, சாதி வேற்றுமை சமய வேற்றுமை இன்றி, சமதர்ம அடிப்படையில் பொது உடைமையாக விளங்கும் செல்வம் ஒன்று உண்டு என்றால், அது நம் சங்கீதக் கலையாகிய செல்வந்தான்.

செல்வத்தில் புரளும் சீமான்களானாலும் இரும்புக் காது படைத்தவர்களாயிருந்தால் நமது சங்கீதமாகிய தங்கக் கலையை அவர்கள் அநுபவிக்க முடியாது.

பரம ஏழைகளா யிருந்தாலும் செவிபடைத்த பாக்கியசாலிகளா யிருந்தால் கர்நாடக சங்கீதத்தைக் கேட்டு மெய்மறந்து பரவசமடைவார்கள்.

மனிதர்களாய்ப் பிறந்தவர்களுக்குச் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறி வருவது இயற்கை. இந்த இரண்டு நிலைகளிலும் மனிதர்களுக்கு உற்ற துணையாக உதவக் கூடிய செல்வம் சங்கீதக் கலை.

மக்கள் சந்தோஷமாயிருக்கும் சமயங்களில் சங்கீதம் கேட்டால், அந்தச் சந்தோஷம் பன்மடங்கு அதிகமாகிறது.

துக்கம் நேர்ந்த சமயங்களில் சங்கீதத்தில் மனத்தை ஈடுபடுத்தினால் துக்கம் குறைந்து மறைந்து விடுகிறது.

இகத்தில் இவ்விதம் வாழ்க்கையின் சந்தோஷத்தை அதிகப்படுத்தியும், துக்கத்தை மறக்கச் செய்தும் உதவுகிற சங்கீதச் செல்வத்தைப் பரத்தில் இறைவனுடைய இணையடிகளை அடைந்து பேரின்பம் துய்ப்பதற்குரிய யோக மார்க்கமாகவும் நம் பெரியோர்கள் கருதி யிருக்கிறார்கள். ஞானம், பக்தி, கர்மம் என்னும் மூன்றுவித மோட்ச மார்க்கங்களுக்கும் சங்கீதக் கலை அரிய சாதனமாக உதவும் என்று அநுபவத்தில் கண்டு அருளியிருக்கிறார்கள்.

ஆனால், கடவுள் நம்பிக்கை யில்லாத நாஸ்திகர்களுக்கும், பரத்தில் நம்பிக்கையற்ற லோகாயதர்களுக்கும் கூடச் சங்கீதம் கைகொடுத்து உதவும் சகாவாக விளங்குகிறது. ஆஸ்திகர்கள் தெய்வப் பிரார்த்தனையில் அடையும் மன நிம்மதியையும் ஆறுதலையும் லோகாயதர்கள் சங்கீதத்தின் மூலமாகவே பெற்று உய்கிறார்கள்.

இவ்வளவு மகிமை வாய்ந்த கர்நாடக சங்கீதமாகிய கலைச் செல்வம் நமது பாக்கியவசத்தினால் விதேசி நாகரிக மோகம் என்னும் பெரும் புயல் காற்றினாலே கூடப் பாதகமடையாமல் தென்னாட்டில் நிலைத்து நின்று வருகிறது. ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வந்து அவர்களுடைய ஆட்சியை நிறுவிய பிறகு ஆங்கில நாகரிக மோகம் எத்தனையோ துறைகளில் நம்மை ஆட்கொண்டு விட்டது. நடை உடை பாவனைகள் மாறிவிட்டன; வழக்க பழக்கங்கள் மாறிவிட்டன; பேச்சு முறை மாறிவிட்டது. நம் பழைய இலக்கியச் செல்வங்களைக் கூடப் புறக்கணித்து விட்டோம். ஆனால் கர்நாடக சங்கீதத்தில் நம்மவர்களின் சுவையும் பற்றும் மட்டும் மாறாமல் இருந்து வருகின்றன. இது நமது பாக்கியம் என்பதோடு, கர்நாடக சங்கீதத்தின் ஜீவசக்தி எத்தகையது என்பதையும் நாம் நன்கு அறிந்து கொள்ள உதவுகிறது.

மகா வித்வான்களின் பரம்பரையில் வழி வழியாக வந்த வித்வான்களும், அவர்களுக்கு ஊக்கமளித்து வந்த ரஸிகர்களும் கர்நாடக சங்கீதத்தை வளர்த்து வந்திருக்கிறார்கள். நம் காலத்தில் சங்கீத சபைகள் முதலிய பல ஸ்தாபனங்களும் கர்நாடக சங்கீதத்தைப் போற்றி வளர்க்கும் துறையில் சிறந்த தொண்டு புரிந்திருக்கின்றன. அந்த ஸ்தாபனங்களில் தலை சிறந்து விளங்குவது மியூஸிக் அகாடமி என்று வழங்கும் சங்கீத வித்வத் சபை.

இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், 1927-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில், சென்னைமா நகரில் காங்கிரஸ் மகா சபை நடந்தது. அதையொட்டிச் சங்கீத விழா ஒன்று நடத்தினார்கள். அப்போது வித்வான்களும் ரஸிகர்களும் காட்டிய உற்சாகத்தைப் பார்த்த பின்னர், அவ்விதம் ஆண்டுதோறும் சங்கீத விழா நடத்தும் யோசனை சில பிரமுகர்களுக்குத் தோன்றியது. அதற்காக நிரந்தரமான ஸ்தாபனம் ஒன்று மியூஸிக் அகாடமி என்னும் பெயரால் நிறுவினார்கள். அத்தகைய சங்கீத வித்வத் சபையின் ஆதரவில் இந்த வருஷம் இருபத்தைந்தாவது தடவையாகச் சங்கீத விழா நடைபெறுகிறது. ஆகையால் இதை வெள்ளி விழாக் கொண்டாட்டமாக நடத்துகிறார்கள்.

வெள்ளி விழாவை முன்னிட்டு வழக்கத்தைக் காட்டிலும் அதிக தினங்கள் உற்சவம் நடைபெறுகிறது. வழக்கமாக டிசம்பர் 22-ந் தேதி விழாவைத் தொடங்குவார்கள். இந்த ஆண்டில் டிசம்பர் 19-ந் தேதி யன்றே விழா தொடங்கி விடுகிறது. நிகழ்ச்சிகளும் வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக ஏற்பாடாகி யிருக்கின்றன. தினந்தோறும் நாலு கச்சேரிகள் நடக்கின்றன. இளம் வித்வான்கள் அநேகர் இந்த வெள்ளி விழாவில் கச்சேரி செய்யும் வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். சங்கீத ரஸிகர்களுக்கு ஒரே கொண்டாட்டமா யிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

*   *   *

திங்கள் கலைக்கு நடைபெறும் இந்த வெள்ளி விழாக் கொண்டாட்டத்துக்குச் சங்கீத ரத்தினங்



ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்



மகா வித்வான் வீணை சாம்பசிவய்யர்

களுக்குள்ளே இணையற்ற வைரமாக ஜொலிக்கும் மகா வித்வான் வீணை சாம்பசிவய்யர் தலைமை வகிப்பது மிக மிகப் பொருத்தமாகும். ஏழு தலைமுறையாக நாதோபாஸனை செய்து வந்துள்ள வம்சத்தில் வந்தவர் ஸ்ரீ சாம்பசிவய்யர் அவர்கள். பொருளையும் புகழையும் நாடாமல் சங்கீதத்தினால் அடையக்கூடிய பெரும் பேறு சங்கீதமே என்று நம்பி அக்கலையைப் போற்றி வளர்த்தவர். ஸ்ரீ சாம்பசிவய்யர் வீணையின் கம்பிகளில் விரல்களை வைத்து வாசிக்கத் தொடங்கி விட்டாரானால், சாதாரண ஸ்வர ஒலிகளையோ சப்த ஜாலத்தையோ மட்டும் நாம் கேட்பதில்லை. சாக்ஷாத் சரஸ்வதி தேவியின் பாதச் சிலம்புகள் கலீர் கலீர் என்று சப்திப்பதைக் கேட்கிறோம். நந்தகோபாலன் நம் முன்னால் ஆடிக்கொண்டு வரும்போது அவனுடைய இடையில் சூடிய ஆடகப் பொற் கிண் கிணிகள் செய்யும் தேனிசையைக் கேட்கிறோம். நடராஜப் பெருமான் பொன்னம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடியபோது, கைகூப்பித் தொழுத தேவர் தேவியர்களின் ஜய கோஷ ஒலிகளைக் கேட்கிறோம்.

நாதோபாஸகரான வீணை சாம்பசிவய்யர் அவர்களின் தலைமையில் சங்கீத வித்வத் சபையின் வெள்ளி விழா நடைபெறுவது வித்வத் சபைக்கும் வெள்ளி விழாவுக்கும் சிறப்பு அளிப்பதாகும். சங்கீத ரஸிகர்களுக்கு இந்த வெள்ளி விழா ஓர் ஆனந்த கோலாகல விழாவாக இருக்கும். இந்த மண்ணுலகத்தையும் இதன் இன்ப துன்பங்களையும் மறந்து கந்தர்வ வித்யாதர உலகத்தில் வாழ்வதாகவே எண்ணிச் சங்கீத ரஸிகர்கள் குதூகலம் அடைவார்கள். நேரில் கண்டு கேட்டு இன்புற முடியாத ரஸிகர்களும் ஓரளவு வானொலியின் மூலம் நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்வார்கள்.

*   *   *

சங்கீத வித்வத் சபை ஆரம்பமானதிலிருந்து அதன் தலைவராயிருந்து வருகிறவர் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள். அறிவும் ஆற்றலும் படைத்த ஒருவர், ஏதேனும் ஒரு சிறந்த பணியை ஏற்றுக் கொண்டு அதில் முழு கவனமும் செலுத்தித் திறம்பட நடத்தி வெற்றி பெற்றதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், ஸ்ரீ கே. வி. கே.

அவர்களின் சங்கீத வித்வத் சபைப் பணியைக் குறிப்பிடலாம். சங்கீதம் உயர்ந்த கலைதான்; மாற்றில்லாத் தங்கத்தை யொத்த ஆனந்தக் கலைதான்; ஆயினும் அந்தக் கலை உலகிலும் மத மாற்சரியங்களுக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் எவ்வளவோ இடம் உண்டு. வேற்றுமை உணர்ச்சிகளும் பிரிவினைச் சக்திகளும் தலைவிரித்தாடும் நம் நாட்டில் இந்த நாளில் ஒரு ஸ்தாபனத்தை இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நல்ல முறையில் நடத்தி வெற்றி பெறுவது சுலபமன்று. அதற்கு எத்தனையோ திறமையும் பொறுமையும் சகிப்புத் தன்மையும் வேண்டும். சுயலாப நோக்கமின்றி நிஷ்காம்ய கர்மமாகத் தொண்டு செய்யும் மனப் பக்குவம் வேண்டும். பலரையும் அணைத்து அழைத்துச் சென்று வேலை வாங்கும் ஆற்றல் வேண்டும். இவ்வளவு உயர்ந்த பண்புகளையும் படைத்திருப்பதனாலேதான் ஸ்ரீ கே. வி. கிருஷ்ண சாமி ஐயர் அவர்கள் சங்கீதக் கலைக்கு இவ்வளவு அரிய தொண்டுகள் செய்ய முடிந்தது; சங்கீத வித்வத் சபையை இவ்வளவு மேன்மையான ஸ்தாபனமாக ஆக்கவும் முடிந்தது. முதிர்ந்த பிராயத்தில் உடல் தளர்ச்சியுற்ற நிலையில், சங்கீதக் கலைக்கு இத்தகைய சலிப்பில்லாத தொண்டு இயற்றிவரும் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களுக்கு, இந்த வெள்ளி விழாச் சந்தர்ப்பத்தில், நம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிருஷ்ணமேனன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்

சில காலமாக நமது மலையாளத்துச் சகோதரர்கள் பெரிய போடுகள் போட்டு வருகிறார்கள். அதிலும், மேனன்கள் போடும் போடு ஒரே சக்கைப் போடாயிருக்கிறது. பத்திரிகைகளில் எந்தப் பக்கம் புரட்டினாலும் யாராவது ஒரு மேனனின் பிரதாபங்கள் கண்ணில் படுகின்றன.

சர்தார் படேலின் தலைமையில் ஸ்ரீ வி. பி. மேனன் இந்திய சமஸ்தானங்களைப் படுத்தி வைத்த பாடு உலகம் அறிந்தது. இப்போது ஸ்ரீ கே. பி. எஸ். மேனன் தோழர் ஸ்டாலினை ஒரு கை பார்த்து விடுவதற்காக ருஷியாவுக்குப் போயிருக்கிறார். இன்னும் கேசவ மேனன், ராகவ மேனன், மாதவ மேனன், தாமோதர மேனன், குஞ்சு கிருஷ்ண மேனன், குட்டி கிருஷ்ண மேனன் முதலியோர் அரசியல் உலகத்தில் ஒவ்வொரு சமயம் பிரபலமடைந்து மக்களின் கவனத்தைக் கவர்ந்து வருகிறார்கள்.

இவர்கள் எல்லாரையும் பின்னுக்குத் தள்ளி விட்டுச் சமீபத்தில் ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் முன்னுக்கு வந்தார். கொரியாப் போரை முடித்து உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டி உலக சரித்திரத்திலேயே மேனன் புகழையும் நிலைநாட்டுவதென்று தீர்மானித்துக் கொண்டு முன் வந்தார்.

கொரியா யுத்தம் யார் யாரோ என்னென்னவோ முயற்சி செய்தும் முடியாமலிருப்பதற்குக் காரணம் யுத்தக் கைதிகள் விஷயமான ஒரு சாதாரண பிரச்னையாகும். இதை நல்லபடியாகவும் தர்ம நியாயமாகவும் தீர்த்து வைப்பதற்கு ஒரு யோசனை கூறினார். அதைக் கேட்டதும் உலகத்திலுள்ள அத்தனை இராஜ தந்திரிகளும் மூக்கின் மேல் விரலை வைத்து "இது நமக்குத் தெரியாமற் போயிற்றே!" என்று அதிசயப் பட்டனர். பிறகு, ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனின் யோசனையை ஒவ்வொருவராக ஆதரிப்பதற்கு முன் வந்தனர். கனடா முதன் மந்திரி மிஸ்டர் லெஸ்டர் பியர்ஸன் அதை உற்சாகமாக ஆதரித்தார். பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி அந்தோனி ஈடன் தமக்குக் கௌரவக் குறைவு என்று எண்ணி விடாமல் மேற்படி யோசனையை ஆதரித்தார். பிரான்ஸ, பெல்ஜியம், டென்மார்க், ஸ்வீடன்,— இப்படிப் பற்பல நாட்டுப் பிரதிநிதிகளும் ஆதரிக்க முன் வந்தனர். கடைசி கடைசியாக, அமெரிக்காவின் டீன் அக்கிஸனும் தம் ஆதரவைத் தெரிவித்தார். மொத்தம் ஐம்பத்துநாலு தேசங்களின் ஆதரவுடன் ஐக்ய நாடுகளின் மகாசபையில் ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனின் தீர்மானமும் நிறைவேறியது.

ஆனாலும் என்ன! யார் ஒப்புக் கொண்டால் கொரியா யுத்தம் முடிவடையுமோ அந்த இருவரும் ஒப்புக் கொள்ளவில்லை. ருஷியாவும் சைனாவும் "கிருஷ்ண மேனன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்று சொல்லிச் சமாதானக் கதவை இறுக்கித் தாள் போட்டு விட்டன. அது மட்டுமல்ல; இந்தியாவின் பிரதிநிதியான ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனுக்கு "அமெரிக்காவின் கையாள்" என்ற பட்டமும் சூட்டி விட்டன!

அதைப் பற்றி ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் சிறிதும் கவலைப்படவில்லை. "நான் அமெரிக்காவின் ஆள் இல்லை; சைனாவின் உண்மைத் தோழன்" என்று நிரூபிக்கப் பாடுபட்டு வருகிறார். தம்முடைய யோசனை வீணாய்ப் போனதற்குக் காரணம் சைனாவை ஐக்கிய நாடுகளின் சபையில் சேர்த்துக் கொள்ளாதது தான்! என்று சொல்லித் தம்மைத்தாமே தேற்றிக் கொண்டு போகிறார்.

ஆனால் நமக்கென்னமோ கொஞ்சம் ஏமாற்றமாய்த் தானிருக்கிறது. "ட்ருமனும், ஈடனும், ஸ்டாலினும், அக்கிஸனும் சாதிக்க முடியாத காரியத்தை நம் வி. கே. கிருஷ்ணமேனன் சாதித்து விட்டார்" என்று பெருமையுடன் மார்தட்டிக் கொண்டு சொல்லும் சந்தர்ப்பம் கிடைக்காமற் போய் விட்டதல்லவா!

அதுமட்டுமல்ல; தென் கொரியா பிரஸிடென்டு ஸிங்மென் ரீ என்பவர் "இந்திய சர்க்கார் எனக்கு எதிரி" என்று சொல்லும்படியாகவும் நேர்ந்து விட்டதல்லவா!

போனது போகட்டும். ஸிங்மென் ரீ வீணாகக் கவலைப்பட வேண்டியதில்லை. கொரியா யுத்தம் அப்படித் தடால் என்று நின்று விடாது. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஐஸன்ஹவர் நேரில் வந்து ஸிங் மென் ரீக்கு அபயப் பிரதானம் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். ஆகையால் கொரியா யுத்தம் நீடித்து நடக்கலாம். அமெரிக்காவும் ருஷியாவும் அவசர அவசரமாகக் கண்டு பிடித்து வரும் புதிய புதிய யுத்தக் கருவிகளையெல்லாம் இரு தரப்பாரும் பரீட்சை பார்க்கும் வரையில் கொரியா யுத்தம் நடந்து கொண்டிருக்கலாம். அந்தப் பரீட்சையின் முடிவில் என்ன ஆகப் போகிறதென்பதைப் பற்றி நாம் இப்போது ஏன் கவலைப்பட வேண்டும்!

அன்னை கண்ணீர் விடுகிறாள்

சோழ நாட்டில் விவசாயிகளும் ஏழை எளிய மக்களும் கடும் புயலினால் அடைந்த துன்பங்களைப் பற்றி நேயர்கள் இதற்குள் நன்கு அறிந்திருப்பார்கள். தனிப்பட்டவர்களைத் தாக்கிச் சேதம் விளைவித்த கொடுங் காற்று ஓர் அருமையான ஸ்தாபனத்துக்கும் பெருங் கேடு விளைவித்து விட்டது. வேதாரண்யத்தில் சர்தார் ஏ. வேதரத்தினம் அவர்கள் நடத்திவரும் கஸ்தூரிபா கன்யா குருகுலத்தைப் பற்றிக் "கல்கி"யில் படித்தது நேயர்களுக்கு நினைவிருக்கும். அன்னை கஸ்தூரிபாவின் புனிதப் பெயர் கொண்ட இந்த ஸ்தாபனத்துக்கு நேர்ந்த விபத்தைக் குறித்துச் சர்தார் வேதரத்தினம் எழுதியிருப்பதைக் கேளுங்கள்:—


"இந்த ஜில்லாவில் இதர இடங்களைக் காட்டிலும் வேதாரண்யத்திற்கும் இதைச் சுற்றியுள்ள பல கிராமங்களுக்கும் சேதம் மிகவும் அதிகம். இவ்வூருக்கு இரு புறமும் கடல் சமீபம். கடல் ஜலம் புரண்டு வந்து ஊரையே அழித்து விட்டதென்னலாம்.

"நம் கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலத்திலிருந்த எல்லாக் கட்டிடங்களும், ஒரு பக்காக் கட்டிடம் தவிர, தரை மட்டமாகி விட்டன. பதினொரு ஆசிரியைகள் குடியிருந்து வந்த ஆசிரியர் விடுதி, பொருள் காட்சி சாலை, விருந்தினர் விடுதி, 15 தறிகள் வேலை செய்யக் கூடியதும், துணிகளுக்குச் சாயம் அச்சுப் போட்டு வந்ததும், இரு பாய் தறிகள் நெய்து வந்ததுமான இவ்வருஷம் புதிதாகக் கட்டிய ஒரு பெரிய கட்டிடம், சமையல் அறை, சாப்பிடும் இடம், உக்கிராண அறை கொண்ட ஒரு பெரிய கட்டிடம், கருவி அறை, பாலர் வகுப்பு அறை, நோயாளி அறை, புத்தக நிலயம் கொண்ட ஒரு பெரிய கட்டிடம், கோசாலை இவை யாவும் நாசமாயின. குருகுலத்திலிருந்த 200 குழந்தைகளையும் ஆசிரியைகளையும் காப்பாற்றியதே தெய்வ யத்தனமாகி விட்டது. மரத்தடியில் தங்கக்கூட வழியில்லாமல் பெரிய மரங்களெல்லாம் வேரோடு சாய்ந்து விட்டன. சாதாரணமாக இந்தப் பெரிய ஸ்தாபனத்திலுள்ள 200 ஏழை, அனாதை, திக்கற்ற பெண் குழந்தைகளுக்கு உணவும், உடையும் அளித்துக் காப்பாற்றுவதற்கே திணறிக் கொண்டிருந்த எங்களைக் கடவுள் இவ்வாறு சோதித்திருக்கிறார். இந்த நஷ்டத்தைத் தாங்கக் கூடிய சக்தி எங்களுக்கில்லை."

இவ்வாறு தஞ்சை ஜில்லாவின் தலைசிறந்த தேசபக்தரான ஸ்ரீ ஏ. வேதரத்தினம் எழுதியிருக்கிறார். இருநூறு அனாதைக் குழந்தைகளைப் பராமரித்து ஆதாரக் கல்வியும் புகட்டி வந்த அருமையான ஸ்தாபனத்துக்கு நேர்ந்த கதியை அறிந்தால் வானுலகில் தெய்வமாக விளங்கும் அன்னை கஸ்தூரி பா அவர்கள் துயரக் கண்ணீர் பொழிவார் என்பதில் சந்தேகமில்லை.

சோழ நாட்டில் புயல் நிவாரணத்துக்கு உதவி இரட்டிக் கொடுக்க முன் வரும் அன்பர்கள், வேதாரண்யம் கன்யா குருகுலத்தையும் அதில் உள்ள இருநூறு அனாதைச் சிறுமிகளையும் நினைவு வைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

உதவியின் வேகம்!



கைத்தறி அபிவிருத்தித் திட்டங்களை விஸ்தரித்துத் துரிதப் படுத்துவதற்காக அகில இந்திய கைத்தறி போர்டு ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.



அத்தியாயம் 24

இளவரசியின் அவசரம்

இளவரசிகளை உபசரித்து வரவேற்றுப் பீடங்களில் உட்காரச் செய்த பிறகு அநிருத்தர் தாமும் அமர்ந்தார்.

"தேவி! என்னைப் பார்க்க வேணுமென்று சொல்லி அனுப்பினால் நானே வந்திருக்க மாட்டேனா? இவ்வளவு அவசரமாக வந்த காரணம் என்ன? சக்கரவர்த்தி சௌக்கியமாயிருக்கிறார் அல்லவா?" என்று கேட்டார்.

"சக்கரவர்த்தியின் தேக சுகம் எப்போதும் போலிருக்கிறது, ஐயா! ஆனால் மனதுதான் கொஞ்சமும் சரியாக இல்லை. நேற்று இரவு அடித்த கடும்புயல் தந்தையின் மனத்தை ரொம்பவும் பாதித்திருக்கிறது. இராத்திரியெல்லாம் அவர் தூங்கவில்லை. குடிசைகளில் வாழும் ஏழை எளிய மக்கள் என்ன கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதை எண்ணி அடிக்கடி புலம்பினார். பொழுது விடிந்தவுடன் தங்களைப் போய்ப் பார்க்கும்படி சொன்னார். புயலினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களுக்கெல்லாம் உடனே உதவி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாம். அதைத் தங்களிடம் சொல்லுவதற்காகவே முக்கியமாக வந்தேன்!" என்றாள் இளையபிராட்டி குந்தவை.

"தேவி! இந்த எளியவனால் என்ன செய்ய முடியும்? முதன் மந்திரி என்ற பெயர்தான் எனக்கு என்பது தங்களுக்குத் தெரியாதா? பெரிய பழுவேட்டரையர் இந்தச் சமயம் ஊரை விட்டுப் போயிருக்கிறார். பொக்கிஷத்தை இறுக்கிப் பூட்டிக் கொண்டுதான் போயிருப்பார். அவருடைய சம்மதமின்றிக் காலாந்தக கண்டரால் கூடப் பொக்கிஷ சாலையைத் திறக்க முடியாதே! கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களுக்கு நான் என்ன உதவி செய்ய முடியும்? வாசலில் பலர் வந்து காத்திருப்பதைத் தாங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் அவர்களைப் பார்ப்பதற்கே எனக்கு வெட்கமாயிருக்கிறது. அதனால்தான் வெளியில் செல்வதற்கே தயங்கிக் கொண்டிருக்கிறேன்" என்று அநிருத்தப் பிரம்மராயர் பஞ்சப் பாட்டுப் பாடினார்.

"ஐயா! அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம். என்னுடைய சொந்த உடைமைகள் அனைத்தையும் கொடுக்கிறேன். என் அன்னையும் அவ்விதமே கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். சக்கரவர்த்தியின் அரண்மனையில் உள்ள எல்லாப் பொருள்களையும் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம். தந்தை

அவ்விதம் சொல்லி அனுப்பினார்கள். ஏழைகளின் கஷ்டங்களுக்குத் தாற்காலிக சாந்தியாகவேனும் ஏதேனும் ஏற்பாடு செய்யுங்கள்......"

"தங்களுடைய சொந்த உடைமைகள் யானைப் படைக்குச் சோளப்பொரி கொடுத்ததாகவே இருக்கும். சோழ நாடு முழுவதும் நேற்றுப் புயல் அடித்திருக்கிறது. எங்கெங்கே என்னென்ன நேர்ந்திருக்கிறது என்ற செய்திகளே இன்னும் கிட்டவில்லை. இதோ நிற்கிறானே, என் பரமானந்த சீடன், இவன் பெரும் பயங்கரமான செய்தியைச் சொல்லுகிறான். கடல் பொங்கி எழுந்து கோடிக்கரை முதல் நாகைப்பட்டினம் வரையில் கடலோரமுள்ள ஊர்களை யெல்லாம் மூழ்கடித்து விட்டதாம்......!"

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அங்கிருந்த மூன்று பெண்களின் முகங்களும் பீதிகரமான மாறுதலை அடைந்ததை அநிருத்தர் கவனித்தார். உடனே அவர் தொடர்ந்து ஆறுதலாகக் கூறினார் :

"ஆனால் அதை நான் நம்பவில்லை. இவன் கூறுவது வெறும் வதந்திதான். புயலைக் காட்டிலும் வேகமாக வதந்தி பரவியிருக்கிறது. கடற்கரைப் பகுதியிலிருந்து செய்தி வருவதற்கே இன்னும் நேரமாகவில்லை. குதிரைமீது தூதர்கள் வந்தாலும் இன்று மத்தியானத்துக்கு மேலேதான் இங்கு வந்து சேர முடியும். இதற்கிடையில் நம்மால் செய்யக் கூடிய உதவிகளை யெல்லாம் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்."

இளைய பிராட்டி குந்தவை தன் மனக் குழப்பத்தைச் சிறிது சமாளித்துக்கொண்டு, "ஐயா! நாகைப்பட்டினம் பற்றிய வதந்தி என் காதிலும் விழுந்தது. அதைப் பற்றியும் தங்களிடம் பேசலாம் என்று வந்தேன். இப்போதுதானே சூடாமணி விஹாரத்துக்கு நாம் நிவந்தங்கள் அளித்து விட்டு வந்தோம்? விஹாரத்துக்கு விபத்து நேர்ந்தால், பாவம், அதில் உள்ள பிக்ஷுக்கள் என்ன செய்வார்கள்?" என்று கூறிவிட்டு, பூங்குழலி நின்ற இடத்தை நோக்கினாள்.

"ஐயா! இந்தப் பெண் இங்கே எப்படி வந்தாள்? கோடிக்கரைத் தியாகவிடங்கரின் மகள் பூங்குழலி அல்லவா இவள்?" என்று வினவினாள்.

"ஆமாம்; தியாக விடங்கரின் குமாரிதான். ஆனால் அவரைப் போல் சாது அல்ல. ரொம்பப் பொல்லாத பெண். தனக்குச் சம்பந்த மில்லாத காரியங்களில் தலையிட்டுத் தொந்தரவு விளைவிப்பவள்!" என்றார் முதன் மந்திரி.

இளைய பிராட்டிக்கு வேறு வித ஐயப்பாடு தோன்றியது. அருள்மொழியைப் பற்றி உளவு அறிவதற்காகத்தான் பூங்குழலியை இங்கே அநிருத்தர் தருவித்திருக்கிறாரோ? தந்திர வித்தைகளில் கைதேர்ந்த மந்திரியாயிற்றே? எப்படியிருந்தாலும் பூங்குழலியின் சார்பில் தான் இருக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு, "அப்படி யொன்றுமில்லையே? பூங்குழலி மிக நல்ல பெண் ஆயிற்றே! இங்கே, வா, அம்மா! முதன் மந்திரி ஏன் உன்பேரில் கோபமாயிருக்கிறார்? அவருக்கு ஏதேனும் தொந்தரவு கொடுத்தாயா?" என்றாள்.

பூங்குழலி சற்று நெருங்கி வந்து, "தேவி! முதன் மந்திரியையே தாங்கள் கேளுங்கள்! நான் முதன் மந்திரிக்குத் தொந்தரவு கொடுத்தேனா, அவர் எனக்குத் தொந்தரவு கொடுத்தாரா என்று கேளுங்கள்!" என்றாள்.

"ஓகோ! நீயும் கோபமாகத்தான் இருக்கிறாய்! இங்கே வா, பெண்ணே! என் அருகில் உட்கார்ந்து கொள்!" என்று கூறி இளையபிராட்டி பூங்குழலியைத் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டாள்.

"ஐயா! இந்தப் பெண்ணை எதற்காகத் தருவித்தீர்கள்? ஏதாவது முக்கியமான காரியமா?" என்று கேட்டாள்.

"அம்மணி! நான் இந்தப் பெண்ணைத் தருவிக்கவில்லை. இப்படி ஒரு பொல்லாத பெண் இருக்கிறாள் என்ற செய்தியே எனக்குத் தெரியாது. இவளாகவேதான்..." என்று அநிருத்தர் தயங்கினார்.

"தேவி! முதன் மந்திரி ஏன் தயங்குகிறார்? மிச்சத்தையும் சொல்லச் சொல்லுங்கள்!" என்றாள் பூங்குழலி.

"இவளாகவேதான் இவளுடைய அத்தையைத் தேடிக் கொண்டு வந்தாள்!"

"யார் இவளுடைய அத்தை? ஓகோ! சேந்தன் அமுதனின் அன்னையா? கோட்டைக்கு வெளியில் அல்லவா அவர்களுடைய வீடு இருக்கிறது?"

"இல்லை; அமுதனின் அன்னை இல்லை. இவளுக்கு இன்னொரு ஊமை அத்தை இருக்கிறாள். இளவரசி! தங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டிய செய்திதான். ஈழ நாட்டுக் காடுகளில் பித்துப் பிடித்தவள் போல் திரிந்து கொண்டிருந்த

ஊமை ஸ்திரீ ஒருவர் உண்டு. அந்த மாதரசியை இங்கே ஒரு முக்கியமான காரியத்துக்காக அழைத்து வர விரும்பினேன். அதற்காகப் பெரு முயற்சி செய்தேன். கடைசியில், வெற்றி கிட்டியது. அந்தச் சமயத்தில்......"

குந்தவை தேவி சொல்ல முடியாத பரபரப்பை அடைந்து, "உண்மையாகவா? அந்தப் பெண்மணி இப்போது இங்கே இருக்கிறாளா? நான் உடனே பார்க்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே பீடத்தை விட்டு எழுந்தாள்.

"மன்னிக்க வேண்டும், தேவி! வெற்றி கிட்டும் சமயத்தில் இந்தப் பெண் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாள்!" என்றார் முதன் மந்திரி.

குந்தவை மிக்க ஏமாற்றத்துடன் திரும்பவும் உட்கார்ந்து, "பூங்குழலி! இது உண்மை தானா? என்ன காரியம் செய்து விட்டாய்?" என்றாள்.

"தேவி! என் அத்தையை அழைத்து வருவதற்கு முதன் மந்திரி கையாண்ட முறையைக் கேளுங்கள். அப்போது என் பேரில் குற்றம் சொல்ல மாட்டீர்கள்!" என்றாள் பூங்குழலி.

பிறகு, முதன் மந்திரி நடந்தவற்றைச் சுருக்கமாகக் கூறினார்.

கேட்டுக் கொண்டிருந்த இளைய பிராட்டி, "அப்படியானால், இந்தக் கோட்டைக்குப் பக்கத்திலேதானே எங்கேனும் இருக்க வேணும்? தேடிப் பார்க்கலாமே?" என்றாள்.

"நல்ல வேளையாகத் தேடிப் பார்க்க வேண்டிய அவசியம் கூட இல்லை. சேந்தன் அமுதன் குடிசையில் இன்று காலையில் பார்த்ததாக என் சீடன் சொல்லுகிறான்" என்றார் முதன் மந்திரி.

"அப்படியானால், ஏன் வீண் கால தாமதம்! மற்றக் காரியங்கள் எல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். நாமே போய் அழைத்து வருவோம். தாங்கள் வருவதற்கில்லாவிட்டால் நான் போய் வருகிறேன். வானதி! புறப்படு. போகலாம்!" என்றாள்.

ஆழ்வார்க்கடியான் அப்போது குறுக்கிட்டு, "தேவி! சற்று யோசித்துச் செய்ய வேண்டும். புதிய மனிதர்கள் கூட்டமாய் வருவதைக் கண்டால் அந்த அம்மாள் மிரண்டு ஓடத் தொடங்கி விடலாம். பிறகு, புயலைப் பிடித்தாலும் அந்த அம்மணியைப் பிடிக்க முடியாது!" என்று சொன்னான்.

"ஆம், திருமலை சொல்லுவது சரிதான். நம்மைப் பார்த்ததும் பூங்குழலியின் அத்தை மிரண்டு ஓடத் தொடங்கி விடலாம். நமது பிரயத்தனமெல்லாம் வீணாகி விடும்! நீ என்ன யோசனை சொல்கிறாய், திருமலை!" என்று முதன் மந்திரி கேட்டார்.

"இந்தப் பெண்மணியையே போய் அழைத்து வரும்படி சொல்லுங்கள். இந்த உலகத்தில் அந்த மாதரசியைக் கட்டுக்குள் வைக்கக் கூடியவர்கள் இரண்டே பேர்தான்! அவர்களில் இந்தப் பெண் ஒருத்தி!"

"இன்னொருவர் யார்?" என்று முதன் மந்திரி கேட்டதற்கு, ஆழ்வார்க்கடியான் சிறிது தயங்கி "இன்னொருவர் கடலில் முழுகி விட்டதாக ஊரெல்லாம் வதந்தியாயிருக்கிறது!" என்றான்.

குந்தவை தேவி அதைக் கவனியாதவள் போல், பூங்குழலியைப் பார்த்து, "கரையர் மகளே! உடனே போய், உன் அத்தையை இங்கே அழைத்து வா! அவளுக்கு இங்கே ஒரு கெடுதியும் நேராது. மிக முக்கியமான காரியமாக உன் அத்தையை உடனே நான் பார்க்க வேண்டியிருக்கிறது! எனக்காக இந்த உதவி செய்வாய் அல்லவா?" என்றாள்.

"ஆகட்டும், அம்மா! முயன்று பார்க்கிறேன். ஆனாலும் முதன் மந்திரி இப்படிப்பட்ட உபாயத்தைக் கடைப் பிடித்திருக்க வேண்டியதில்லை. முன்னாலேயே எனக்குத் தெரிந்திருந்தால்......"

"ஆமாம்; விஷயங்களை மறைத்து வைப்பதில் இம்மாதிரி அசந்தர்ப்பங்கள் நேரத்தான் நேருகின்றன. அதை நானே உணர்ந்து வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன். சீக்கிரம் அத்தையை அழைத்துக்கொண்டு வா! அதற்குப் பிறகு இன்னொரு முக்கியமான வேலை உனக்கு இருக்கிறது!" என்றாள் இளையபிராட்டி.

"திருமலை! நீயும் இந்தப் பெண்ணோடு போய் விட்டு வா! கோட்டை வாசல் வழியாக நீங்கள் வருவதில் ஏதேனும் சிரமம் இருந்தால், நமது அரண்மனைக்கு வரும் இரகசிய வழியில் அழைத்துக் கொண்டு வா!" என்றார் அநிருத்தர்.

பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் போன பிறகு, குந்தவை முதன் மந்திரியைப் பார்த்து, "ஐயா! வாசலில்

வந்து காத்திருப்பவர்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி அனுப்பிவிட்டு வாருங்கள். மிக முக்கியமான காரியங்களைப் பற்றித் தங்களிடம் ஆலோசனை கேட்க வேண்டியிருக்கிறது!" என்றான்.

"இதோ வந்து விடுகிறேன். தாயே! எனக்கும் தங்களிடம் பேச வேண்டியிருக்கிறது!" என்று சொல்லி விட்டு அநிருத்தர் சென்றார்.

இத்தனை நேரமும் மௌனமாக இருந்த வானதி, "அக்கா! பூங்குழலிக்கு இன்னொரு முக்கியமான காரியம் என்ன வைத்திருக்கிறீர்கள்? மறுபடியும் நாகைப் பட்டினத்துக்கு அனுப்பப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம், வானதி! நீ வீணாகக் கவலைப் படாதே! பொன்னியின் செல்வனுக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்து விடாது."

"நானும் அவளுடன் நாகைப்பட்டினத்துக்குப் போகிறேனே, அக்கா!"

"நீ போய் என்ன செய்வாய்? உன்னைக் காப்பாற்றுவதற்கு வேறு யாராவது வேண்டுமே?"

"அந்த ஓடக்காரிக்கு என்னைக் கண்டால் பிடிக்கவே யில்லை, அக்கா!"

"எப்படியடி அவள் மனதை நீ கண்டு பிடித்தாய்?"

"என்னுடன் அவள் பேசவே இல்லை!"

"நீயும் அவளோடு பேசவில்லை; அவளும் உன்னோடு பேசவில்லை."

"நான் அடிக்கடி அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் என்னை ஒரு தடவை கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. அவளுக்கு ஏதோ என் பேரில் கோபம்!"

"ஆமாமடி, வானதி! இந்த நாட்டில் உள்ள கலியாணமாகாத கன்னிப் பெண்களுக்கெல்லாம் உன்பேரில் கோபமாய்த் தானிருக்கும். அதற்காக நீ வருத்தப்படுவதில் பயனில்லை" என்று சொன்னாள் இளையபிராட்டி குந்தவைதேவி.

அத்தியாயம் 25

அநிருத்தரின் குற்றம்

முதன் மந்திரி தம் அரண்மனை ஆசார வாசலில் காத்திருந்தவர்களைப் பார்த்துப் பேசி அனுப்பி விட்டு விரைவிலேயே திரும்பி வந்தார்.

"அம்மணி! ஏதோ என்னால் முடிந்த வரைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். புயலினால் நேர்ந்த சேதங்களை அறிந்து வர நாலா பக்கமும் ஆட்களை அனுப்பியிருக்கிறேன். சின்னப் பழுவேட்டரையருக்கும் சொல்லி அனுப்பியிருக்கிறேன், நம் இருவரின் பொறுப்பிலும் பொக்கிஷ சாலையைத் திறந்து விட வேண்டும் என்று."

"ஐயா! பெரிய பழுவேட்டரையரின் மாளிகையை யொட்டி நிலவறைப் பொக்கிஷம் ஒன்று இருக்கிறதாமே! அதில் கணக்கில்லாத பொருள்கள் குவிந்து இருப்பது உண்மையா? பெரிய பிராட்டி ஒரு தடவை சொன்னார்கள்."

"அதைத் திறந்தால் அதிலுள்ள பொருளைக் கொண்டு ஆயிரம் பெரிய கோவில்கள் புதிதாய்க் கட்டலாமே என்று அந்த அம்மாளுக்கு எண்ணம். நான்கூட அந்த நிலவறைக்குள் போனதில்லை, அம்மா! அதற்குள் ஒரு தடவை போகிறவர்கள் உயிரோடு திரும்புகிறதில்லை" என்றார் முதன் மந்திரி.

"அது போகட்டும், ஐயா! அந்த ஊமைத் தாயை இவர்கள் அழைத்துக் கொண்டு வந்து விடுவார்களா? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய் விடுமோ என்று எனக்குக் கவலையாயிருக்கிறது" என்றாள் குந்தவை.

"தாயே! அந்த மாதரசியைப் பற்றித் தங்களுக்கு என்ன தெரியும்? எப்படித் தெரிந்தது? தாங்கள் ஏன் அவளைப்பற்றி இவ்வளவு பரபரப்பு அடைந்திருக்கிறீர்கள்......?" என்றார் அநிருத்தர்.

"ஐயா! சில தினங்களுக்கு முன்பு சக்கரவர்த்தியே என்னிடம் அந்த மாதரசியைப் பற்றிச் சொன்னார்."

"என்ன? அவள் உயிரோடிருப்பதாகச் சொன்னாரா, என்ன?"

"இல்லை, ஐயா! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னார். அவள் இறந்து போய் விட்டதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறார். அதனாலே தான் அவருடைய சித்தம் கலங்கிப் போயிருக்கிறது. அந்த ஊமைத் தாய் கடலில் விழுந்து இறந்து போய் விட்டதாகத் தாங்கள்தானே தெரிந்து கொண்டு வந்து என் தந்தையிடத்தில் சொன்னீர்களாம்? பின், அந்த

மாதரசி உயிரோடிருக்கும் செய்தி தங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"தங்களை அதே கேள்வி கேட்க வேண்டும் என்று எண்ணினேன். தங்களுக்கு எப்படித் தெரிந்தது, தேவி?"

"அதற்கென்ன, சொல்லுகிறேன். வாணர் குலத்து வீரர் ஈழத்துக்குப் போய்த் திரும்பி வந்தாரே, அவர் முதலில் சொன்னார். பிறகு, என் தம்பி அருள்மொழி..." என்று கூறிவிட்டு, குந்தவை தன் தவறைத் தானே உணர்ந்தவள் போல் வாயைக் கையினால் பொத்திக் கொண்டாள்.

"தேவி! இளவரசர் அருள்மொழிவர்மரைப் பற்றித் தாங்கள் என்னிடம் சொல்ல விரும்பவில்லையென்றால், சொல்ல வேண்டாம். தாங்கள் அந்தப் பெயரைக் குறிப்பிட்டதை நான் அடியோடு மறந்து விடுகிறேன்."

"இல்லை, ஐயா! தங்களிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுவது என்ற எண்ணத்துடனேயே வந்தேன். விஷயங்களை மூடி மறைத்து வைப்பதினால் தீமைதானே தவிர நன்மை ஒன்றுமில்லை என்பதைக் கண்டு கொண்டேன். நேற்றிரவு எனக்கு அது நன்றாய்த் தெரிந்தது. ஐயா! என் இளைய சகோதரனைக் கடல் கொண்டு போய் விடவில்லை. பொன்னியின் செல்வனைச் சமுத்திரராஜன் காப்பாற்றிக் கரையில் சேர்த்தார். அவன் இப்போது நாகைப்பட்டினத்திலுள்ள புத்த விஹாரத்தில் இருக்கிறான். அவனைப் பார்ப்பதற்காகவே நான் நாகைப்பட்டினம் போயிருந்தேன். ஆனால் தங்களுக்கு இது எல்லாம் தெரியும் என்று எனக்கு ஒரு சந்தேகம் உண்டு."

"தாங்கள் சந்தேகித்தது நியாயமே. ஆனால் தேவி, தெரிந்ததாக நான் காட்டிக் கொள்ளவில்லையே! வேறு யாருடைய காரியத்தில் தலையிட்டாலும் தங்களுடைய காரியத்தில் தலையிடுவதில்லை என்று வைத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய ஆட்களுக்கும் அவ்விதமே கட்டளையிட்டிருக்கிறேன். தாங்கள் செய்வது எதுவும் உசிதமாகத்தான் இருக்கும் என்பது என் நம்பிக்கை. நானும் மலையமானும் கொடும்பாளூர் வேளானும் அடிக்கடி பேசிக்கொண்டிருக்கிறோம்: 'இளையபிராட்டி மட்டும் ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால், இந்த அகில உலகத்தையும் சோழர்களின் வெண் கொற்றக் குடையின் கீழ்க் கொண்டு வந்து தனியரசு செலுத்தி ஆண்டு வருவாள்' என்று."

"அந்த மாதிரி எண்ணம் எனக்கு இருந்தது உண்மைதான். நான் பெண்ணைப் பிறந்திருந்த போதிலும் என் சகோதரர்கள் மூலமாக அந்த மனோரதம் நிறைவேறும் என்று ஆசையுடன் இருந்தேன். அந்த ஆசையை இப்போது விட்டு விட்டேன், ஐயா! இராஜ்ய விஷயங்களில் பெண்கள் தலையிடவே கூடாது என்று முடிவு செய்து விட்டேன். பாருங்கள்! என் சகோதரனை நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இருக்கும்படி செய்தேன். அதன் விபரீத பலனைப் பாருங்கள்!"

"ஒன்றும் நேர்ந்து விடவில்லையே, தாயே! பொன்னியின் செல்வனை நடுக்கடலில் காப்பாற்றிய சமுத்திர ராஜன் இப்போது கரையில் பத்திரமாயிருக்கும் போது தீங்கு விளைத்து விடுவானா?"

"ஐயா! தாங்கள் உடனே என் தந்தையிடம் வந்து இவ்வாறு தைரியம் சொல்லுங்கள்."

"ஆகா! சக்கரவர்த்திக்குத் தெரியுமா, என்ன? இளவரசர் சூடாமணி விஹாரத்தில் இருக்கும் செய்தி!"

"நேற்று இரவுதான் சொன்னேன். சொல்லும்படியாக நேர்ந்து விட்டது."

"ஆகா! இன்னும் கொஞ்ச நாள் சொல்லாமலிருந்தால் நன்றாயிருந்திருக்கும். தாங்கள் செய்திருந்தது மிக நல்ல ஏற்பாடு என்று நினைத்தேன். தேவி! சோழ நாடு முழுதும் ஒரே கொந்தளிப்பாயிருக்கிறது. நேற்று அடித்த புயல் காரணமாக வெளியில் ஏற்பட்ட கொந்தளிப்பு, சில நாளாகவே சோழ நாட்டு மக்களின் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கிறது. மதுராந்தகர் மீதும் பழுவேட்டரையர்கள் மீதும் ஜனங்கள் ஒரே கோபமாயிருக்கிறார்கள். சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்திருப்பதாக எண்ணுகிறார்கள். இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கப்பல்கள் அனுப்பப் பட்டதையும் அறிந்திருக்கிறார்கள். இளவரசரைப் பழுவேட்டரையர்கள்தான் கடலில் மூழ்கடித்து விட்டதாகப் பலர் நம்புகிறார்கள். இச்சமயத்தில் இளவரசர் இந்த நாட்டில் இருப்பது தெரிந்தால் மக்கள் கொதித்து எழுவார்கள். இளவரசரின் தலையில் இப்போதே மணிமகுடத்தைச் சூட்டி விட வேண்டும் என்று பெருங் கிளர்ச்சி செய்வார்கள். பழுவேட்டரையர்களும் சண்டைக்கு எப்போது முகாந்தரம் ஏற்படும் என்று காத்திருக்கிறார்கள். கொடும்பாளூர் பெரிய வேளார் பெரும்படை

திரட்டிக் கொண்டு தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். தேவி! சோழ நாட்டில் இரத்த வெள்ளம் ஓடப் போகிறது என்று அஞ்சுகிறேன். இந்தப் பெரிய சாம்ராஜ்யம் சகோதரச் சண்டையினால் அழிந்து விடுமோ என்று பயப்படுகிறேன். அப்படி ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமென்று அல்லும் பகலும் ஸ்ரீரங்கநாதரைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்."

"என்னுடைய பிரார்த்தனையும் அதுவேதான், ஐயா! என் சகோதரர்கள் இந்த சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் ஏறவேண்டுமென்ற ஆசையை நான் விட்டு விட்டேன். என்னைப் பொறுத்தவரையில், மதுராந்தகனுக்கே முடி சூட்டுவதில் இப்போது எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை."

"தங்களுக்கு ஆட்சேபமில்லை, தாயே! ஆனால் மக்களுக்கு ஆட்சேபம் இருக்கிறதே! சக்கரவர்த்தி இன்னும் பல்லாண்டு இவ்வுலகில் வாழ வேண்டும். ஆனால் விதி வசத்தினால் அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டதென்றால், அன்றைய தினமே இந்தச் சோழ நாடு முழுதும் ரணகளமாகி விடும்......"

"ஐயா! அத்தகைய துர்க்கதி விரைவிலேயே நேர்ந்து விடுமோ என்று எனக்குப் பயம் அதிகமாகியிருக்கிறது. நேற்றிரவு சக்கரவர்த்தியின் நிலை மிக்க கவலைக்கிடமாகி விட்டது. அதனாலேதான் அவரிடம் பொன்னியின் செல்வன் பத்திரமாயிருக்கிறான் என்று சொல்ல வேண்டியதாயிற்று. ஆனால், சொல்லியும் அவர் நம்பவில்லை! அவருக்கு நான் வெறுமே ஆறுதல் சொல்வதாக எண்ணிக் கொண்டார். பல வருஷங்களுக்கு முன்னால் மாண்டுபோன 'பழிகாரி'யின் ஆவி அவருடைய புதல்வர்களின் மீது பழி வாங்குவதாக எண்ணிப் பிரமை கொண்டு பிதற்றுகிறார்......"

"அந்தோ? கடவுளே! என்ன விபரீதம்? நேற்று இரவு நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்!"

"அதற்காகத்தான் வந்தேன், ஐயா! சொல்லித் தங்களிடம் யோசனை கேட்பதற்காகவே வந்தேன். முன் கடவை சுந்தர சோழர் மருத்துவ சாலை ஏற்படுத்துவதற்காக நான் வந்த சமயத்தில், சக்கரவர்த்தி எனக்கு அந்தப் பழைய வரலாற்றைக் கூறினார். ஈழ நாட்டை அடுத்த தீவில் தாம் ஒதுங்க நேர்ந்தபோது, கரையர் மகள் ஒருத்தி தம்மைக் கரடிக்கு இரையாகாமல் காப்





பார்த்தது பற்றிச் சொன்னார். பின்னர் அத்தீவிலேயே சில மாத காலம் சொப்பன சொர்க்க லோகத்தில் வாழ்வது போல் அந்தப் பெண்ணுடன் வாழ்ந்திருந்ததைப் பற்றிச் சொன்னார். பின்னர் இந்தத் தஞ்சை புரிக்கு அவர் அழைத்து வரப்பட்டதையும், இளவரசராக முடி சூட்டப் பட்டதையும் கூறினார். அரண்மனை வாசலில் கூடி யிருந்த கூட்டத்தின் மத்தியில் கரையர் மகளைப் பார்த்ததையும், ஆருயிர் நண்பராகிய தங்களை விட்டு அவளைத் தேடிக் கொண்டு வரச் சொன்னதையும், தாங்கள் தேடிப் போய்த் திரும்பி வந்து அவள் கடலில் விழுந்து இறந்தாள் என்று தெரிவித்ததையும் கூறினார். அது முதல் அடிக்கடி அந்தக் கரையர் மகள் ஆவி வடிவத்தில் வந்து தம்மைத் துன்புறுத்துவதாகவும் சமீப காலத்தில் அவள் வருகை அதிகமாகி யிருப்பதாகவும் சொன்னார்....''

''தேவி! அதை யெல்லாம் நீங்கள் நம்பினீர்களா?''

''தந்தை கூறிய வரலாறு அவ்வளவு அதிசயமா யிருந்தபடியால் என் மனமும் மிக்க குழம்பி விட்டது. இறந்து போனவளின் ஆவி வந்து தந்தையைத் தொந்தரவு படுத்துவது சித்தப் பிரமையா யிருக்கலாம் என்று நினைத்தேன். பிறகு யோசித்துப் பார்க்கப் பார்க்க வேறு சில ஐயங்கள் உண்டாயின. வானதி ஒரு நாள் இரவு சக்கரவர்த்தியின் கூக்குரலைக் கேட்டு விட்டுப் போய்ப் பார்த்தாள். பழுவூர் இளையராணி மாதிரி ஓர் உருவம் மன்னரின் எதிரில் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு மூர்ச்சித்து விழுந்தாள். அதுமுதல் அந்தக் கரையர் மகளுக்கும் இந்தப் பழுவூர் இளைய ராணிக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. வல்லவரையரும் அருள்மொழியும் கூறியதிலிருந்து அது உறுதியாயிற்று. ஐயா! நந்தினி தேவி ஒருவேளை அந்தக் கரையர் மகளின் புதல்வியா யிருக்க முடியுமா?''

''தங்களைப் போலவே நானும் ஊகிக்கத்தான் முடியும், தாயே! உருவ ஒற்றுமையைப் பார்த்தால் அப்படித்தான் கருதவேண்டி யிருக்கிறது. ஆனால் அதிலிருந்து மட்டும் நிச்சயிக்க முடியுமா? ஒருவேளை கரையர் மகளின் கடைசித் தங்கையாகக்கூட நந்தினி தேவி இருக்கலாம். இதையெல்லாம் பற்றி நிச்சயமாகத் தெரிந்தவர்கள் இப்போது மூன்று பேர்தான் இருக்கிறார்கள்......''

''அவர்கள் யார், சுவாமி!''

"ஒருவர்தான் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி. அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒரு இரகசியம் இருந்து வேதனை செய்து வருகிறது. ஆனால் அது இன்னதென்பதை அவராகச் சொன்னாலொழிய, நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள இயலாது. மகானாகிய கண்டராதித்தர் காலமாகும் தறுவாயில் பெரிய பிராட்டி அதை அவரிடம் கூறினார் என்பது எனக்குத் தெரியும். கண்டராதித்தர் என்னிடம் சொல்லத் தொடங்கினார். இரண்டு வார்த்தை சொல்வதற்குள் அவருடைய மூச்சு நின்று விட்டது......"

"மற்ற இருவரும் யார், ஐயா?"

"மற்ற இருவரும் பேசத் தெரியாத ஊமைகள்; சேந்தன் அமுதனின் அன்னையும் பெரியன்னையுந்தான். இவர்களில் சேந்தன் அமுதனுடைய அன்னையிடமிருந்து நாம் ஒன்றும் தெரிந்து கொள்ள இயலாது. செம்பியன் மகாதேவியிடம் அவள் அளவிலாத பக்தி உள்ளவள். அந்தத் தேவி உயிரோடிருக்கும் வரையில் இவள் ஒன்றும் தெரிவிக்கமாட்டாள். ஆகையினால்தான் அவளுடைய தமக்கை மந்தாகினியை ஈழநாட்டிலிருந்து அழைத்து வருவதற்கு நான் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தேன்..."

"ஆகா! அந்தக் கரையர் மகளின் பெயர் மந்தாகினியா? அவள் உயிரோடிருப்பது தங்களுக்கு எப்போது தெரிந்தது?"

"தேவி! இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அது எனக்குத் தெரிந்த விஷயந்தான்."

"என்ன? என்ன? இருபத்தைந்து வருஷங்களாகத் தெரிந்துமா, என் தந்தையிடம் தாங்கள் சொல்லவில்லை? ஐயோ! அவள் இறந்து விட்டாள் என்ற எண்ணத்தினால் என் தந்தை எத்தனை மனோவேதனைக்கு உள்ளானார் என்பதெல்லாம் தங்களுக்குத் தெரியாதா?"

"தெரியும், தாயே! தெரியும்."

"தெரிந்துமா அவரிடம் உண்மையைச் சொல்லாதிருந்தீர்கள்?"

அநிருத்தர் ஒரு நெடிய பெரு மூச்சு விட்டார். அவர் உள்ளத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது என்பதை அவருடைய முகம் எடுத்துக் காட்டியது. பின்னர் அவர் கூறினார்:—

"தேவி! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் நான் ஒரு குற்றம் செய்தேன். முதன் முதலாக அதை இப்போது தங்களிடந்தான் சொல்லுகிறேன். கரையர் மகளைத் தேடி வரும்படி தங்கள் தந்தை என்னை அனுப்பினார் அல்லவா? விரைவாகக் குதிரை மீது செல்லும் ஆட்களுடன் நானும் போனேன். கோடிக்கரை போய்ச் சேர்ந்தோம். அங்கே கொந்தளித்துக் கொண்டிருந்த கடலில் அவள் கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து விழுந்து விட்டாள் என்பதை அறிந்தோம். அந்தப் பயங்கரக் காட்சியை நேரில் பார்த்தவர்கள் சொன்னார்கள். தியாகவிடங்கரே நடுங்கிய குரலில் நாக்குழறக் கூறினார். அதைத்தான் நானும் தஞ்சாவூருக்கு வந்து என் நண்பரிடம் தெரிவித்தேன்......"

"இதில் தங்கள் குற்றம் என்ன, ஐயா?" என்றாள் குந்தவை.

"குற்றம் இதுதான்! கரையர் மகள் கடலில் விழுந்தாளே தவிர, அதிலே முழுகிச் சாகவில்லை. அத்தகைய கொந்தளித்த கடலில் படகு விட்டுக் கொண்டு வந்த வலைஞன் ஒருவன் அவளைக் கண்டெடுத்துப் படகில் ஏற்றிக் காப்பாற்றி விட்டான். கோடிக் கரைக்கு வெகு தூரத்துக்கு அப்பால் அவன் வந்து கரையேறினான். திரும்பி வரும் வழியில் நான் அந்தக் கரையேறும் படகைப் பார்த்தேன். அதில் இருந்த பெண் யார் என்பதையும் தெரிந்து கொண்டேன். அந்தப் படகுக்காரனிடம் நிறையப் பணம் கொடுத்து அவளைப் பத்திரமாக இலங்கைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்படியும் அங்கேயே இருக்கும்படியும் கூறினேன். அவனும் சம்மதித்துச் சென்றான். நான் திரும்பித் தஞ்சைக்கு வந்து கரையர் மகள் கடலில் விழுந்து மாண்டு விட்டதாகக் கூறினேன். தங்கள் தந்தைக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டு தான் மனமறிந்து அத்தகைய குற்றத்தைச் செய்தேன். அந்தக் குற்றம் இத்தனை காலத்துக்குப் பிறகு இப்படி ஒரு விபரீதமான விளைவை உண்டாக்குமென்று எதிர்பார்க்கவில்லை..."

இளைய பிராட்டி குந்தவை அப்போது குறுக்கிட்டு, "ஐயா! தாங்கள் செய்தது குற்றமாயிருந்தாலும் என் தந்தைக்கு நன்மை செய்யும் எண்ணத்துடனேயே செய்தீர்கள். பிறகு, அக்கரையர் மகளைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டு வந்தீர்களா?" என்று கேட்டாள்.

"ஏன்? அடிக்கடி கேள்விப் பட்டுத்தான் வந்தேன். இளவரசப் பட்டம் சூட்டிக் கொண்டதும் சுந்தர சோழர் மதுரைப் போர் முனைக்குப் போனார். நான்

காசி க்ஷேத்திரத்துக்குச் சென்றேன். சில ஆண்டுகள் அங்கேயே தங்கி வேதாகம சாஸ்திரங்கள் பயின்று விட்டுத் திரும்பி வந்தேன். அப்போது பழையாறையில் ஈசானபட்டரின் தந்தை அந்தக் கரையர் மகளோடு அந்தரங்கமாக உரையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு வியந்தேன். அவர் ஒரு அதிசயமான செய்தியைச் சொன்னார். அந்தக் கரையர் மகள் பெரிய பிராட்டியின் அரண்மனைத் தோட்டத்தில் வந்து சில நாள் தங்கியிருந்ததாகவும், இரட்டைக் குழந்தைகள் பெற்று அங்கேயே போட்டுவிட்டு ஓடிப் போனதாகவும் கூறினார். எப்போதாவது நினைத்துக் கொண்டு குழந்தைகளைப் பார்ப்பதற்காக அவள் இரகசியமாக வருவதுண்டு என்றும் தெரிவித்தார். குழந்தைகள் என்ன ஆயின என்று கேட்டேன். அவர் சொல்ல மறுத்து விட்டார். அது செம்பியன் மாதேவிக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் என்றும் கூறினார். நானும் அதைப் பற்றி அதிகம் தெரியாமலிருப்பது தான் நல்லது என்று சும்மா விட்டு விட்டேன். தேவி! அருள்மொழி குழந்தைப் பிராயத்தில் காவேரி நதியில் விழுந்து விட்டபோது, அவனைக் காவேரி அன்னை காப்பாற்றினாள் என்று எல்லாரும் சொல்லுவார்கள் அல்லவா? அப்படிக் காப்பாற்றியவள் உண்மையில் கரையர் மகள்தான் என்று என் மனத்தில் அச்சமயமே தோன்றியது......"

"தங்கள் உள்ளத்தில் தோன்றியது உண்மைதான், ஐயா! அருள்மொழி ஈழ நாட்டில் அந்த மாதரசியைப் பார்த்து விட்டு வந்து அவ்வாறுதான் சொன்னான். ஆனால் இந்த விந்தையைக் கேளுங்கள்! என் தந்தை என்ன எண்ணுகிறார் தெரியுமா? கடலில் விழுந்து இறந்த கரையர் மகள்தான் ஆவி வடிவத்தில் வந்து தம் மக்கள் மீது பழி வாங்குவதாக எண்ணுகிறார். நேற்றிரவு வெளியில் கடும் புயல் அடித்தபோது என் தந்தையின் உள்ளப் புயலும் வேகத்தை அடைந்தது. இரவு முழுதும் அவர் தூங்கவே இல்லை. என்னையும் தூங்க விடவில்லை. பழைய கதைகளையெல்லாம் மறுபடி சொன்னார். 'கடலில் விழுந்து இறந்த அந்தப் பழிகாரிதான் இப்போது என் பேரில் பழி வாங்குகிறாள். அவள்தான் என் அருள்மொழியைக் கடலில் மூழ்க அடித்துக் கொன்று விட்டாள்! கரிகாலனையும் அவள் பழிவாங்காமல் விடமாட்டாள்!' என்று அடிக்கடி அலறினார். 'என் ஒரு மகனாவது உயிரோடிருக்கும்போது என்னைக் கொண்டுபோக மாட்டாயா, யமனே!' என்று கதறினார். அவருக்கு எவ்வளவோ நான் சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. அதன் பேரிலேதான் நாகைப்பட்டினம் புத்த விஹாரத்தில் அருள்மொழி வர்மன் பத்திரமாயிருப்பதைப் பற்றி அவரிடம் சொல்ல வேண்டி நேர்ந்தது......"

"அதற்குப் பிறகு சக்கரவர்த்தி சிறிது ஆறுதல் அடைந்தாரா?"

"அதுதான் இல்லை. அதன் பிறகு சித்தப் பிரமை இன்னும் அதிகமாகி விட்டது. முதலில் அச்செய்தியை அவர் நம்பவே இல்லை. ஆனால் நானே நேரில் பார்த்துவிட்டு வந்தேன் என்று சொன்ன பிறகு நம்பினார். ஏன் அவனை அழைத்துக் கொண்டு வரவில்லை என்று கேட்டார். குளிர் சுரத்துக்குப் பிறகு பிரயாணத்துக்கு வேண்டிய உடல் பலம் வரவில்லை என்றும், விரைவில் அழைத்துக் கொண்டுவர ஏற்பாடு செய்வதாகவும் கூறினேன். ஆனால் அவனை இப்போது இங்கு அழைத்து வருவதால் இராஜ்யத்தில் ஏற்படக்கூடிய குழப்பத்தைப் பற்றியும் இலேசாகச் சொன்னேன். இதைக் கேட்டதும் அவருடைய மனப்போக்கு வேறு விதமாகத் திரும்பி விட்டது. 'இந்த இராஜ்யந்தான் என் பிள்ளைகளுக்கு யமனாக ஏற்பட்டிருக்கிறது. இராஜ்யம் அவர்களுக்கு இல்லையென்று தீர்ந்தால் என் புதல்வர்கள் உயிரோடு சுகமாயிருப்பார்கள். அதற்காகத்தான் அவர்களை இங்கு அழைத்து வர இவ்வளவு அவசரப்படுகிறேன்!' என்றார். திடீரென்று இன்னொரு பீதி அவர் மனத்தில் குடிகொண்டது. உக்கிரமான புயல் காற்றினால் நேற்றிரவு அரண்மனையெல்லாம் கிடுகிடுத்துப் போயிற்று. ஒரு தடவை பேரிடி இடித்து ஓய்ந்ததும் என் தந்தை வெறி கொண்டு விட்டார். 'மகளே! அருள்மொழியை இனி நான் பார்க்கப் போவதில்லை. கீழைக் கடலில் தோன்றும் புயற் காற்றுக்களையும் சுழிக் காற்றுக்களையும் பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும். இன்று அடிக்கும் புயலினால் கடற்கரையில் தென்னை மர உயரம் அலைகள் எழும்பும். உள் நாட்டில் வெகு தூரம் கடல் பொங்கி வந்து மூழ்க அடிக்கும். காவேரிப் பட்டினத்தை அன்றொரு நாள் கடல் கொண்டதுபோல் நாகைப் பட்டினத்தையும் கொண்டு போனாலும் போய் விடும். அதிலும் கடற்கரைக்கும் கால்வாய்க்கும் மத்தியில் உள்ள புத்த

விஹாரம் ஒரு நாளும் தப்பிப் பிழைக்காது. அந்தப் பழிகாரி கரையர் மகன் கடலில் என் மகனைக் கொண்டு போக முடியவில்லை. அதற்குப் பதிலாக கரையிலேயே வந்து என் மகனைக் கொல்லப் போகிறான்! நான் போய் இதோ அவனைத் தடுத்து என் மகனைக் காப்பாற்றப் போகிறேன்' என்று கதறிக் கொண்டு எழுந்திருக்க முயன்றார். அந்த முயற்சியில் தளர்ச்சியுற்றுப் படுக்கையில் விழுந்தார். ஐயா! அப்போது என் தந்தை விம்மி அழுத குரலைக் கேட்டால் கல்லும் மலையும் உருகி விடும்!'' என்றாள் இளைய பிராட்டி. அவளுடைய கண்களில் அப்போது தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

தேசிய இளைஞர் முன்னணி

நான் 'கல்கி'யில் சிதம்பரம் இளைஞர் காங்கிரஸ் தலைவர் எழுதிய கடிதத்தையும் படித்தேன். நகர காங்கிரஸ் தலைவரின் கடிதம் தலையங்கம் பகுதியில் வெளியாகியிருந்ததே அதையும் படித்தேன்.

'இளைஞர் காங்கிரஸ்' என்ற ஸ்தாபனம் காங்கிரஸின் எதிர்ப்பு அணி அல்ல. இளைஞர்களுக்குத் தாய் ஸ்தாபனத்தில் போதுமான இடம் அளிக்கவில்லை. அதன் காரணமாகவே பல இளைஞர்கள் மற்ற ஸ்தாபனத்திற்கு இழுக்கப்படுகிறார்கள் என்ற நிலைமையை உணர்ந்து ஏற்படுத்தப்பட்டது தான் இளைஞர் காங்கிரஸ்.

இளைஞர் காங்கிரஸ் எங்களூரில் ஆரம்பிக்கப்பட்டுச் சரியாக முக்கால் ஆண்டுகூட ஆகவில்லை. அதற்குள் அவர்கள் ஆதரவில் பல சிறந்த பேச்சாளர்களைக் கொண்ட பல கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன என்பது ஊரறிந்த உண்மை. இதெல்லாவற்றையும் விட, காங்கிரஸ் கூட்டங்களுக்கு மக்கள் வருவதில்லை என்று பிரசாரம் செய்து வந்த மாற்றுக் கட்சியினர் தலை தொங்கப் போட்டுக் கொள்ளும் நிலையில் மக்கள் திரள் திரளாக வரச் செய்த பெருமை இளைஞர் காங்கிரஸாருக்குத்தான் உண்டு. இன்றைக்கு மக்கள் காங்கிரஸைப் பற்றிய நல்லெண்ணத்தை மறுபடி கொண்டு வருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் 'இளைஞர் காங்கிரஸ்' ஸ்தாபனம்தான், எங்களூரைப் பொறுத்தவரையில்.

சிதம்பரம்
1-12-52

கோ. பானுசிம்ஹன்

●

நடந்த பொதுத் தேர்தலின் முடிவுகளிலிருந்து காங்கிரஸ் மக்களிடம் சரிவர வேலை செய்யவில்லை என்று தெரிய வந்தது. ஆங்காங்கேயுள்ள நகர காங்கிரஸ் கமிட்டிகள் எதிர்க்கட்சியினரின் கோயபில்ஸ் பிரசாரத்தைத் தடுக்கவோ, மறுக்கவோ, மாற்றவோ, தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகையால் எங்களைப் போன்ற தேசிய எண்ணங் கொண்ட வாலிபர்கள் சிலர் இனிமேல் காங்கிரஸ் கமிட்டிகளை நம்பிப் பிரயோஜனமில்லை என்ற முடிவுக்கு வந்தனர். அதன் பயனாகத்தான் இம் மாதம் 5-11-52 ல் '' தேசிய இளைஞர் காங்கிரஸ் '' என்ற ஸ்தாபனத்தை நெல்லையில் ஆரம்பித்தோம். திருப்பூர் எஸ். எம். வின்ஸெண்ட் அவர்களைக் கொண்டு எங்கள் சங்கத்தைத் திறக்கச் செய்து பல சிறந்த பிரசாரகர்களைக் கொண்டு உயர்ந்த எண்ணங்களை மக்களிடையே புகட்டி, எதிர்க் கட்சியினரின் பொய்ப் பிரசாரத்தை முறியடித்து வந்துள்ளோம். சராசரி மாதத்தில் இரண்டு பொதுக் கூட்டங்களாவது நடத்தி வருவதற்குத் திட்டம் இட்டுள்ளோம்.

திருநெல்வேலி
29—11—52

எஸ். ஜி. முத்துசாமி
காரியதரிசி

இவ்வூரில் 2-10-52 இளைஞர் காங்கிரஸ் டாக்டர் வி. வி. எஸ். கிருஷ்ண மூர்த்தி அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டது. காந்திய வழியில் மக்களுக்குச் சேவை புரியவும், காங்கிரஸ் கொள்கைகளைப் பிரசாரம் செய்யவும் இந்த இளைஞர் காங்கிரஸ் துவக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 25 அங்கத்தினர் உள்ளனர். மேலும் அங்கத்தினர்கள் சேர்த்துக் கொண்டு இருக்கிறோம். ஓர் வாசகசாலையும், ஓர் நூல் நிலையமும் ஏற்படுத்துவதாக முடிவு செய்துள்ளோம். அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்து வருகிறோம். அக்டோபர் 2உ ஆரம்ப விழாவும் காந்தி ஜெயந்தியும், நவம்பர் 14-ந் தேதி நேரு ஜெயந்தியும் நடத்தினோம்.

தொச்சியம்
10-12-52

காரியதரிசி
எஸ். சங்கரன்

●

தேசத்தின் விடுதலைக்காக அரும்பாடு பட்ட திரு வாஞ்சி ஐயர் அவர்கள், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஆகிய இருவர் பெயரால் 'வாஞ்சி - சிதம்பரம் இளைஞர் மன்றம்' என்ற இந்தச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது.

தியாகராய நகரைச் சுற்றிலும் இருக்கும் குடிசை வாழ் மக்களுக்குக் கல்வியறிவு உண்டாக்குவதும், நல்லதோர் சூழ்நிலை ஏற்படுத்திக் கௌரவமாகவும், தூய்மையாகவும் அவர்கள் வாழ்வதற்கு வழி செய்வதும், காந்திஜியின் கொள்கைப்படி அவர்களுக்குக் கைத்தொழில் முதலிய குடிசைத் தொழில்களைக் கற்றுக் கொடுப்பதும் இம் மன்றத்தின் நோக்கங்கள்.

நவம்பர் மாதம் 30ந் தேதி சங்கத்தின் சார்பில் வ. உ. சிதம்பரம் பிள்ளை நினைவு நாள், தியாகராய நகரில் கொண்டாடப் பட்டது. அன்று காலை 400 பேர்களுக்கு மாம்பலம் வெ-விஷ்ணு ஆலயத்தில் அமுது அளிக்கப் பட்டது. சேரிகளில் வாழும் சிறுவர்களுக்குக் கல்வி அறிவு ஏற்படுத்துவதற்காகக் கடந்த இரண்டு மாதங்களாகப் பஸ்லுல்லா தெரு, 12-ம் நெம்பரில் இலவச இரவு பாடசாலை நடத்தி வருகின்றோம். 45 இளைஞர்கள் மிக்க ஊக்கத்துடன் படித்து வருகின்றனர். சேரிகள் தோறும் அவர்களுக்குச் சுகாதாரமும், கல்வியின் அவசியமும், சூழ்நிலையை எப்படித் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் அறிவிக்கப்படுகின்றன. எங்கள் முயற்சி பயனடைந்தமைக்குத் தியாகராய நகரில் வால்மீகித் தெருவைச் சார்ந்த குடிசைகள் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கி வருகின்றன.

இளைஞர்களுக்குத் தேசியத்தில் பற்றும், சமூக சேவை செய்வதற்கு ஆர்வமும் கொடுப்பதற்குத் தலைவர்களும், அரசாங்கமும் நகராண்மைக் கழகமும் முன் வந்து எமக்கு ஊக்கத்தை அளிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தியாகராய நகர்
12—12—52

கி. நாராயணன்
காரியதரிசி.

தமிழ்க் களஞ்சியம்

டி.கே.சி

16. நகைப்பு வேறு கேடா!

நாட்டுப் புறங்களில் பல குருவிகளைப் பார்க்கிறோம். அவைகளில்த் தூக்கணாங்குருவி ஒன்று.

தூக்கணாங் குருவிக்கு விசேஷ அமைப்போ, அழகோ ஒன்றுமில்லை. ஆனால் அது கட்டுகிற கூடோ அற்புதத்திலும் அற்புதம்,

கூட்டின் வடிவம் ஏக தேசம் கோமாளிக் குல்லாவைப் போலிருக்கும். உச்சியைத் தென்னை மட்டையின் முனையில்த் தொங்க விட்டிருக்கும்.

அடிப்பாகம் திறந்ததாக இருக்கும். அதன் வழியாக மேலே போய்ப் பாதி அளவில் அமைத்த தட்டில் முட்டையிடும், அடை காக்கும், குஞ்சுகளுக்கு வசதி செய்யும். எல்லாம் அந்த இடைத் தட்டில்த்தான்.

பொதுவாக, தென்னோலையின் விளிம்பிலுள்ள நரம்பை எடுத்துத்தான் கூட்டைப் பின்னிக் கட்டுகிறது.

மழை பெய்தால் ஒரு துளி தண்ணீர் உள்ளே பிரவேசியாது. காற்றில்ப் பிய்ந்தும் போகாது. குஞ்சுகளுக்கு வாய்ப்பான வீடுதான்.

குஞ்சுகளுக்கு ஆகாரமாகப் புழுக்களை எடுத்துக் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம். பகலில்த்தான் புழுக்களை எடுக்கும். குஞ்சு இருக்கிறதோ இல்லையோ, வழக்கம் பிரதானமானதால் புழுக்களை எடுத்துக் கூட்டுக்குள்ச் சில வேளை வைத்துவிடும்.

மின்மினிப் புழுவைப் பல இடங்களில் இரவில் நாம் பார்க்கிறோம். பகலில்ப் பிரகாசம் தெரியாது. சாமான்யப் புழுவாய்த் தோன்றும். சாமான்யப் புழு என்றே எண்ணித் தூக்கணாங் குருவியும் அதை எடுத்துக் கொண்டு போய்க் கூட்டுக்குள் வைத்து விடும், மின்மினிப் புழு என்று குருவிக்கும் தெரியாதுதான் பகலில்.

மழை காலத்தில்ச் சில வேளை ஒரு கூட்டை எடுத்து வீட்டுக்குள்ளோ வராந்தாவிலோ நாம் தொங்க விடுவோம்; ஒரு காட்சிப் பொருளாக. மின்மினிப் புழு இருப்பது அப்போது தெரிய வரும்.

'மழை காலம் அல்லவா, ஒரே இருட்டாய் இருக்குமே, ஏதோ துணைக்காக விளக்கு வைத்துக் கொள்ளுவோமே என்று எண்ணிக் குருவி மின்மினிப் புழுவை வைத்துக் கொள்ளுகிறது' என்று சொல்லத் தோன்றும் நமக்கு.

இனி கவிக்கு வருவோம்.

* * *

மழை ஒரே அடியாய் அடித்துக் கொண்டிருக்கிறது. விடுகிற பாடாய் இல்லை. பார்த்தது இரவாகிய (கன்னல்) கருங் குருவி. நாமும் ஒரு மின்மினிப் புழுவை எடுத்து வைத்துக் கொள்ளுவோமே என்று எண்ணியது. அதற்கேது மின்மினிப் புழு!

கன்னல்எனும் கருங்குருவி
ககனமழைக்கு ஆற்றாது
மின்னல்எனும் புழுவெடுத்து
விளக்கேற்றும் கார்காலம்

ஏதோ துணைக்காக விளக் கேற்றி வைத்துக் கொண்டதாம் இரவு. இனி:

மழை காலத்தில் நாயகனுடன் இருக்க வேண்டும் என்பது ஐதிகம். நாயகனாகிய மாவலி வாணன் அயல் நாட்டுக்குப் போயிருக்கிறான். ஒவ்வொரு நாளும் அவனை எதிர்பார்த்த வண்ணமாய் இருக்கிறாள் நாயகி. மழை காலம் நெருங்கி விட்டது.

இன்று மழையே ஆரம்பித்து ஓரே கொட்டாய்க் கொட்டிக் கொண்டிருக்கிறது. மின்னல் வேறு ஒரு திசையிலிருந்து இன்னொரு திசைக்கு வெட்டிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. மணி பத்தாய் விட்டது. நாயகன் வரவில்லை.


இந்த நிலையில் நாயகியின் தோழிகள் வந்து இல்லாத கதைகளைச் சொல்லிக் கும்மாளி அடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாயகி அவர்களோடு கலந்து கொள்ள முடியவில்லை. தோழிகள் நாயகியைப் பார்த்து, ''ஏன் இப்படிச் சோர்வாய் இருக்கிறாய்?'' என்று கேட்கிறார்கள். நாயகி தன் வருத்தத்தையும் எரிச்சலையும் சொல்லித் தீர்க்கிறாள்.

இந்த நிலையைத்தான் இந்த இதழ் அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார் நமது சித்திரக்காரர்.

கன்னலெனும் கருங்குருவி
கனமழைக்(கு) ஆற்றாது
மின்னலெனும் புழுவெடுத்து
விளக்கேற்றும் கார்காலம்
மன்னவனும் தென்மதுரை
மாவலிவா ணனைப்பிரிந்திங்(கு)
என்ன இருப்(பு) என்ன பிழைப்(பு)
என்ன நகைப்(பு) இன்னமுமே!

[கன்னல்: இரவு; கன்னலெனும் கருங்குருவி: இரவாகிய கருங் குருவி; கன மழை: வானத்தில் இருந்து பொழியும் மழை; மன்னவனும் தென்மதுரை மாவலி வாணன்: மதுரைக்கு அதிபதியாய் உள்ள மாவலி வாணன்.]

காதல் வெறியானது வானத்தையே ஒரு அணைப்பு அணைத்துப் பேசுகிறது. அதில் தனி ரஸம்.

படித்துப்  பாருங்கள்!

ஸ்தோத்ராணி

சுமார் எழுநூறு வருஷங்களுக்கு முன்பு நம் புண்ணிய பாரத பூமியில் அவதரித்த ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸ்ரீ விசிஷ்டாத்வைத சம்பிரதாயத்துக்கு இணையற்ற சேவை செய்திருக்கிறார். அம்மகா புருஷர் வடமொழியில் இயற்றிய ஸ்தோத்திரங்கள் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. மேற்படி ஸ்தோத்திரங்களில் அடங்கி யிருக்கும் ஸ்லோகங்கள் பக்திப் பனுவல்கள்தான் என்றாலும், வேதத்தின் உட்பொருளையும், உபநிடதங்களின் தாத்பர்யங்களையும் தாங்கிக் கொண்டு விளங்குகின்றன. இந்நூலில் அடங்கி யிருக்கும் இருபத்தெட்டு ஸ்லோகங்களும், ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை ஆசிரயிப்பவர்களுக்குச் சிறந்த பொக்கிஷம் என்றே கூற வேண்டும்.

கிடைக்குமிடம்: ஸ்ரீ வேதாந்த தேசிக சம்பிரதாய சபா, 1/277, தியோதர் ரோடு, பம்பாய்-19. விலை: ரூ. 3-8-0.

நித்திய ஒழுக்கம்

கல்லார்க்கும், கற்றவருக்கும், காணுதவர்க்கும் கண்டவர்க்கும் கடவுளாக விளங்கும் அருட்பெருஞ் ஜோதியை அகக்கண்ணால் அறிந்து ஆத்மானுபூதி பெற்ற வள்ளலார் ஸ்ரீராமலிங்க ஸ்வாமிகள், நம் சாதாரண வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுக்க முறைகளைப் பற்றியும் அருளி யிருக்கிறார். அவற்றை, இந்நூல் மனிதனின் அன்றாட அலுவல்களைக் காலைக்கடன் முதலாகச் சகல ஒழுக்கங்களையும் பற்றித் தெளிவாகக் கூறுகிறது.

பிரசுரம்: எழுத்தாளர் அச்சகம், பதிப்பகம் லிமிடெட், 31, காரணீசுவர் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15; விலை அணு 8.

தந்தையும் மகளும்

ஒரு வாரத்துக்கு ஏழு நாள் என்று கூறுகிறார்களே, அதற்குக் காரணம் என்ன? நீரில் நீந்த முடிகிறது, ஆனால் காற்றில் பறக்க முடியவில்லையே, ஏன்? பிராணவாயு இல்லாமல் உயிர் வாழும் பிராணி உண்டா? தண்ணீர் இல்லாமல் உயிர் வாழும் பிராணி உண்டா? தண்ணீர் இல்லாமல் ஐஸ் செய்ய முடியுமா? வைரம் அதிக பளபளப்பாக இருப்பதற்குக் காரணம் என்ன? பழங்களும் காய்கறிகளும் அழுகிப் போகின்றனவே, ஏன்? மனிதர்களைத் தவிர வேறு எந்தப் பிராணியாவது சிரிப்பது உண்டா? கொள்ளி வாய்ப் பிசாசு இருப்பதாகக் கூறுகிறார்களே, அது உண்மைதானா? — இத்தமாதிரி இருநூற்றுக்கு மேற்பட்ட கேள்விகளும், அந்தக் கேள்விகளுக்கு ஏற்ற பதிலும் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன. பெற்றோர்கள் கையில் இந்த நூல் இருந்தால் குழந்தைகளின் கேள்விகளைக் கண்டு மிரள வேண்டிய அவசியமில்லை. எந்தக் கேள்வியா யிருந்தாலும் 'டாண் டாண்' என்று பதில் சொல்லி விடலாம்.

ஆசிரியர்: பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை எம். ஏ., பி. எல்.,

பிரசுரம்: காந்தி நிலையம்; தியாகராயநகர், சென்னை-17; விலை: ரூ. 3-0-0.

DREAM WOVEN


உண்ண உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் உடுக்க உடை. ஆயினும் ஆடை நெய்யும் தொழில் கலையழகும் சேர்ந்த தொழிலாக நம் நாட்டில் பண்டைக் காலமுதல் இருந்து வந்திருக்கிறது. நம் நாட்டுக் கைத்தறிச் சேலைகளின் தலைப்புகளிலும் உடலிலும் கைத்தறி நெசவாளர்கள் புரியும் கலையம்சம் பொருந்திய வேலைப் பாடுகளைக் கண்டு வியக்காதவர்கள் இல்லை. அத்தகைய தொழிலாளர் இன்று பஞ்சத்தினாலும் பட்டினியினாலும் நலிகின்றனர். ஒருபுறம் கலையார்வமும் மற்றொரு புறம் வறுமையும் அவர்களைப் பாடாய்ப் படுத்துகின்றன. இந்தச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு, சென்னை சர்க்காரின் அபிவிருத்தி இலாக்கா காரியதரிசி ஸ்ரீ ஜே. எம். லோபோ பிரபு ஐ. ஸி. எஸ். ஆங்கிலத்தில் நல்லதோர் ஓரங்க நாடகம் எழுதி யிருக்கிறார். அதில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொருவரும் இன்று நாம் கண்முன் பார்க்கும் மக்களாகவே இருக்கின்றனர். அதுவே, இந்த நாடகத்துக்குத் தனிச் சுவையை அளிக்கிறது.

கிடைக்குமிடம்: சூப்பரின்டெண்டெண்ட், சென்னை சர்க்கார் அச்சகம், சென்னை; விலை ரூ. 1.

மக்கட் கரு வளர்ச்சி

சின்னஞ் சிறு விதையிலிருந்து ஒரு செடி வளருவதும், கண்ணுக்குப் புலனாகாத அண்டம் ஒன்றிலிருந்து மனிதன் தோன்றி வளருவதும் மிகவும் ஆச்சரியமானவை. மற்றப் பிராணிகள், தாவரங்கள் இவற்றின் உற்பத்தி, வளர்ச்சி முதலியவற்றைப் போலவே மனித இனத்தின் உற்பத்தியும், வளர்ச்சியும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். அந்த ஆச்சரியமான மானிட இன உற்பத்தியையும் வளர்ச்சியையும் பற்றி இந்நூலில் விஞ்ஞான முறையில் ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்:—மா. ஏகாம்பரநாதன்; கிடைக்கும் இடம்: எம். சுவாமிநாதன், 4, பெஸன்ட் ரோடு, கோபாலபுரம், சென்னை 6. விலை ரூ. 2—8—0.



லலிதா

காலை வேளைக்குரிய லலிதா ராகத்தின் உருவகப்படத்தை மேலே காணலாம். மிகுந்த வேதனையுடன் காதலர்கள் பிரிவதையும் இரவும் பகலும் பிரிவதையும் சங்கேத பாஷையில் அது வெளியிடுகிறது.

பருவங்களுடனும் பகல் - இரவின் குறிப்பிட்ட காலங்களுடனும் இணைந்து வருவது இந்திய ராகங்களின் தனிச் சிறப்பு. ஒவ்வொரு ராகமும் அந்தந்த வேளையின் ரசம் அல்லது பாவத்தை வெளியிடும் சாதனமாகும்.

தினசரி இரவிலும் பகலிலும் அந்தந்த நாழிகைக்கு ஏற்ப ராகங்கள் உருவகப்படுத்தப்படுகின்றன. அகாலத்தில் பாடும் ராகங்களுக்கு ஜீவன் போய்விடுமாம்.

தேனீர்

இரவு பகல் எந்த வேளையிலும், எந்த நிலையிலும் தேனீர் உற்சாகம் அளிக்கிறது.



1. இன்பமும் துன்பமும்

"அறஞ் செய விரும்பு. அறம்—தருமம்; செய-செய்ய; விரும்பு - ஆசைப்படு. தருமம் செய்ய ஆசைப்படு. ஆறுவது சினம். ஆறுவது......" என்று இழுத்துக் கொண்டே கால்ச் சட்டைப் பையிலிருந்த மிட்டாய்ப் பொட்டலத்திலிருந்து ஒரு மிட்டாயை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு மேலும் படிக்க ஆரம்பித்தான் வரதன்.

"...ம்...ஆறுவது-தணிவது; சினம்...ம்..." சினத்திற்கு அர்த்தம் சொல்வதற்குள், வாசலிலிருந்து எழும்பிய ஓர் அவலக் குரல் முட்டுக் கட்டை போடவே, ஆத்திச் சூடியைக் கை நழுவவிட்டு நிமிர்ந்து பார்த்தான் வரதன்.

"......ஐயா! ஒரு பிடி சோறு தருமம் போடுங்களேன்......!" என்று கேட்டு விட்டுப் பங்களா வாசலில் நின்றிருந்த பிச்சைக்காரப் பையன் பஞ்சப் பாட்டுப் பாடினான். வரதன் அந்தப் பரதேசிப் பையனைப் பார்த்தான். மறு கணம்...?

"......ஏற்பது இகழ்ச்சி. ஏற்பது-பிச்சை எடுப்பது; இகழ்ச்சி-கேவலமானது ...ம்..." என்று பிச்சைக்காரனைப் பார்த்துச் சொல்லிக் கொண்டே கழுத்தைச் சாய்த்து நீட்டி அப்பாவின் அறையைச் சாடையாகப் பார்த்தான், வரதன். அவனுடைய அப்பா அப்போதுதான் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தார். வரதன் 'சட், புட்' என்று சரியாக அமர்ந்து சுறு சுறுப்பாகப் பலத்த குரலில் படிக்க ஆரம்பித்தான்.

"......ஐயம் இட்டு உண். ஐயம்-பிச்சை: இட்டு-கொடுத்து; உண்-சாப்பிடு; பிச்சை கொடுத்துச் சாப்பிடு......" மேலும் படிப்பதற்குள், அப்பா வரதனிடம் வந்துவிட்டார்.

"என்னடா; படிக்கிறாயா......?"

"படிக்கிறேன் அப்பா......!"

"மலை வீதி வரைக்கும் போய்விட்டு வருகிறேன். அப்படி இப்படி நகராமல் படித்துக்கொண்டிருக்கவேண்டும். தெரிந்ததா...?"

"சரிதான் அப்பா......!"

ஒன்றிரண்டு நிமிஷங்களுக்குள் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினார் அப்பா. பிச்சைக்காரனும் அலுத்துப் போய் அந்தப் பங்களாவை விட்டு நகர்ந்து விட்டான்.

வரதன் உட்கார்ந்திருந்த வராந்தாவிலிருந்த சோபாவில் ஆத்திச் சூடி மட்டுந்தான் இருந்தது; ஆனால், வரதனைக் காணோம்!

எங்கே போனான், அவன்......?

இது என்ன கூத்து! வரதன் எதற்காக அந்தப் பங்களாவின் கைப்பிடிச் சுவர் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறான்? அங்கிருந்து அவன் யாரை அவ்வளவு கவனமாகப் பார்க்கிறான்!

"சிரிக்கவா......?"

"உம், கொஞ்சமாகச் சிரி......"

உள்ளம் பூரிக்க உதட்டைப் பிரித்து உல்லாசப் புன்னகை காட்டி நின்றான் ராஜா.

"உம்......பேஷ்! இந்த அழகோடேயே ஒரு விநாடி அப்படியே, அசையாமல் நில்!..."



"ஒன்! டு!......த்ரீ! ......க்ளிக்!......"

போட்டோவின் பித்தானைத் தட்டி விட்டு விட்டு "முடிந்தது!" என்று கூறிக்கொண்டே மெல்ல நிமிர்ந்தாள் சரசா.

"முடிந்ததா?......போட்டோவில் நான் அழகாக விழுந்திருப்பேனா......?" என்று கேட்டுக் கொண்டே, வியர்த்துக் கொட்டியிருந்த முகத்தைச் சட்டைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே, சரசாவின் அருகில் வந்தான் ராஜா.

"ஒன்றும் பயப்படாதே! ராஜா வீட்டுப் பிள்ளை மாதிரி இருப்பாய்" என்று அன்பு தொனிக்கச் சொல்லிக் கொண்டே காமிராவை மூடினாள் சரசா.

பிறகு அவள் "அது சரி......உன்னைப் போட்டோ பிடித்தேனே......எனக்குக் கூலி எதுவும் கிடையாதா......?" கொஞ்சிச் சிரித்துக் குதூகலமாய்க் கேட்டுக் கொண்டே மூடிய காமிராவைத் தோளில் மாட்டிக் கொண்டு மெல்ல நடந்தாள் சிறுமி சரசா.

ராஜா சிரித்தான். சிரித்துக் கொண்டே அவளைத் தொடர்ந்தான்.

"கூலியா வேண்டும்......? ரொம்ப சரி! இந்தா...கூலி..." கால்ச் சட்டைப் பையில் சரக்கென்று கையை விட்டு, எதையோ எடுத்து, சரசாவிடம் நீட்டினான், ராஜா. அவனுடைய மூடியிருக்கும் கையை ஆவலுடன் பார்த்தாள், சரசா.

"என்னடா, அது......?"

"உனக்குக் கூலி! உம், பிடி!"

சரசா, அழகாகச் சிரித்துக் கொண்டே முன் பக்கம் விழுந்து புரண்ட பின்னலைப் பின்னால் தள்ளிக் கொண்டு கையை நீட்டினாள். ராஜா, அவள் கையைப் பிடித்துத் தன் கையிலிருந்ததை அவள் கையில் திணித்தான். சரசா, தன் மான் விழிகளைக் காலைத் தாமரையாய் மலர்த்திக் கொண்டு, தன் கையைத் திறந்து பார்த்தாள்.

அவள் கையிலிருந்தது என்ன......? பட்டாணிக் கடலை!

ராஜாவைப் பார்த்து, சரசா சிரித்தாள்.

சரசாவைப் பார்த்து, ராஜா சிரித்தான்.

"இதுதான் கூலியா...?"

"ஏன்? இந்தக் கூலி போதாதோ?"

"போதாது, இன்னும் கொஞ்சம் கொடு" என்று கொஞ்சிக் கொஞ்சிச் சொல்லிக் கொண்டே, தன் பவள வாயை 'ஆ......!' வென்று திறந்து, பட்டாணிக் கடலையை வாயருகில் கொண்டு போனாள் சரசா.

"சரசா......!"—என்று ஒரு குரல் எங்கிருந்தோ வந்தது.

சரசாவும், ராஜாவும் இந்தத் திடீர் குரலைக் கேட்டதும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள்.

தோட்டத்தின் மதில் சுவரின் மீதிருந்து 'தொப்...!' என்று குதித்து, எழுந்து, அவசர அவசரமாக வந்தான், வரதன்.

ஒரு கணம் மௌனம்.

வரதன் அருகில் வந்தான்.

"என்ன சரசா! என்ன சாப்பிடுகிறாய்?"

"பட்டாணிக் கடலை......" என்று சொல்லிக்கொண்டே கையைத் திறந்து காட்டினாள் சரசா, முகத்தைச் சுளித்துக் கொண்டே.

"சேச்சே!......தென் அமெரிக்காவிலுள்ள ஒரு வகைத் தவளை, குட்டியாக இருக்கும் போது பத்து அங்குல நீளமிருக்குமாம்; பெரிசாக ஆக இரண்டரை அங்குலமாகச் சுருங்கி ரொம்பச் சின்னதாகப் போய்விடுமாம்; அது போலத்தானே இருக்கிறது உன் சங்கதியும்! வர வர உன் புத்தி ஏன்தான் இப்படிச் சின்னதாகப் போகிறதோ! போயும் போயும் தும்பும் தூசியும் மண்டிய தெருவில் விற்கும் பட்டாணிக் கடலையையா தின்பது? வீசி எறி அதை! இந்தா, இதைச் சாப்பிடு!" என்று சொல்லிக் கொண்டே தன் அருமைச் சிநேகிதி சரசாவுக்கென்று பத்திரமாகவும், அக்கறையாகவும் எடுத்து வந்த சாக்லெட்டைக் கால்ச் சட்டைப் பையிலிருந்து அலுங்காமல் எடுத்து, சரசாவிடம் நீட்டினான், வரதன்.

சரசா வரதனைப் பார்த்தாள்.

வரதன், சரசாவைப் பார்த்தான்.

ராஜா, இருவரையும் மாறி மாறிப் பார்த்துப் பதுமையாக நின்றான். அவனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது! பின்னே...? பட்டாணிக் கடலை அவனுடையது ஆயிற்றே! ரோஷம் வராதா என்ன?

ஒரு விநாடி நேர மௌனம் நிலைக்குப் பின் "எனக்குச் சாக்லெட்டும் வேண்டாம், ஐஸ் கிரீமும் வேண்டாம்! என் ராஜா கொடுத்த இந்தப் பட்டாணிக் கடலை அவ்வளவு கேவல மானதா என்ன?" என்று வெறுப்புடன் படபடவென்று பேசிவிட்டுப் பட்டாணிக் கடலையை வாயில் போட்டுக் கொண்டாள் சரசா.

"உங்கள் வீட்டில் வேலை பார்த்து வயிறு வளர்க்கும் இந்த ராஜாப் பயலைவிட, நான் அவ்வளவு கேவலமாகி விட்டேனா, சரசா?" என்று சரசாவைப் பார்த்துச் சஞ்சலத்துடன் கேட்டான் வரதன்.

"உன்னை யார் இப்போது கேவலம் என்று சொன்னார்கள்? நான் சொன்னேனா? அல்லது ராஜா தான் சொன்னானா? நீயே கேவலமாகப் பேசி, நீயே கேவலமாகி விடுகிறாய்! எனக்கு நீயும் சிநேகிதன்; இவனும்தான் சிநேகிதன். நீதான் ராஜாவை 'வேலைக்காரப் பையன், அப்படி இப்படி என்றெல்லாம் கேவலமாகப் பேசுகிறாய்!' பள்ளிக்கூடத்தில் 'ஏழை என்றும், அடிமை என்றும் எவனு மில்லை ஜாதியில், இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே!' என்று வீரமோடு பாடிப் பரிசுதான் பெற்றாய்! ஆனால் பிரயோஜனம்...? சுத்த பூஜ்யம்! டேய் வரதா, இனிமேல் இப்படியெல்லாம் பேசிக்கொண்டு இங்கே வரவே வராதே! அப்படிப்பட்டவன் சிநேகிதம் எனக்குத் தேவையில்லை! டேய், ராஜா! வாடா போவோம்!" என்று குட்டி எரிமலையாகக் குமுறிப் பேசிவிட்டு பங்களாவை நோக்கி 'விர்'ரென்று நடந்தாள் சரசா.

திகைத்துப் பிரமித்து நிற்கும் வரதனை ஒரு தினுசாகப் பார்த்துக் கொண்டே ராஜாவும் சரசாவுடன் கூடவே போனான்.

'ஹூம், ஹிமய மலைக்கும் பரங்கி மலைக்கும் வித்தியாசம் தெரியாத முட்டாள்! அந்த வேலைக்காரப் பையனுக்கு எதிரில் என்னை எவ்வளவு இழிவாகப் பேசி விட்டாள்! அவளுக்கு என் மீது ஏன் இவ்வளவு வெறுப்பு? மூன்று நாள்கூடப் பள்ளிக்கூடத்தில் எனக்குக் கோகோ சாக்லேட் கொடுத்தாளே! அவள் கொடுத்த சாக்லேட்டை நான் வேண்டாம் என்றதற்கு அவள் எத்தனை அன்புடனும், அக்கறையுடனும் கோபித்துக் கொண்டாள்? இன்று ஏன் இவ்வளவு சிடுசிடுப்பு? அந்த ராஜாப் பயல் என்மீது ஏதாவது கோள் சொல்லி யிருந்தாலும் இருப்பான். அப்படித்தான் அவன் என்மீது கோள் சொன்னாலும் சரசா அதை எப்படி நம்பலாம்? இதுவரைக்கும் அவள் மனம் நோக நான் அப்படி யொன்றும் இரட்டை வால்த்தனம் பண்ணவில்லையே!' என்று தன் வீட்டு வராந்தாவிலுள்ள சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டு, ஏதேதோ எண்ணி மனம் புகைந்து கொண்டிருந்தான் வரதன்.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. இருள் எட்டிப் பார்த்தது. அந்தச் சமயத்தில் 'பூம்...! பூம்...!' கொஞ்ச தூரத்திலிருந்து கிளம்பிய மோட்டார்க் காரின் ஹாரன் சப்தம் அந்தி நேரத்து இளங் காற்றோடு இளங் காற்றாய்க் கலந்து வந்து கேட்டது.

மறு விநாடி?

"இயல்வது கரவேல்! ஈவது விலக்கேல்!" என்று சோபாவின் கீழ் விழுந்து இத்தனை நேரமும் காலில் மிதிபட்டுக் கொண்டிருந்த ஆத்திச் சூடியை எடுத்து வைத்துக் கொண்டு நாலரைக் கட்டைச் சுருதியில் உரக்கக் கத்திப் படிக்க ஆரம்பித்தான் வரதன்.

சிறிது நேரத்தில் வராந்தா வாசலில் கார் வந்து நிற்பதற்கும், காரிலிருந்து இறங்கிய வரதனின் அப்பா, வரதனின் எதிரில் வந்து நிற்பதற்கும், வராந்தாவிலுள்ள மின்சார விளக்குகள் 'குப்' என்று எரிவதற்கும் சரியாக இருந்தன!

"...என்னடா வரதா, படிக்கிறாயா...?"

"படிக்கிறேன், அப்பா!"

"சரி, படித்துக் கொண்டிரு..."

"சரியப்பா...!" வரதன் ஆத்திச்சூடி புஸ்தகத்தை ஆத்திரமாக அழுத்திப் பிடித்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான். (தொடரும்)

யாழ்ப்பாணம் பட்ட பாடு

—கொழும்பு, டிசம்பர் மீ, 10வ.

யாழ்ப்பாண மக்களுக்கு இது மிக மிகப் பயங்கரமான சோதனைக் காலம். சமீபத்தில் தமிழ்நாட்டில் சூறாவளிக் காற்றடித்துப் பெரும் பொருட் சேதங்களையும் உயிர்ச் சேதங்களையும் விளைவித்ததைப்போல யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் அதே புயல் பிரமாதமான சேதங்களை உண்டு பண்ணிவிட்டுப் போயிருக்கிறது. அங்கு ஒரு செடிகொடி பாக்கியில்லை. அவ்வளவையும் வாயுதேவனும் வருண பகவானுமாகச் சேர்ந்து ஒருவர் மாற்றி ஒருவராகப் போட்டி போட்டுக் கொண்டு பலகாரம் செய்து விட்டார்கள்.

நூற்றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெல் வயல்களில் இடுப்பளவுக்குக் கடல் நீர் நுழைந்து பயிர் பச்சைகள் சர்வநாசமாகிவிட்டன. முதல்நாளிரவு குலை குலையாகக் காய்த்துத் தொங்கிய வாழைத் தார்கள் மாயமாய் மறைந்து விட்டன. யாழ்ப்பாண மக்களின் ஜீவனத் தொழிலா யிருந்த புகையிலை, வெங்காயம், மிளகாய் ஆகிய பயிர்த் தொழில்கள் அடைந்த சேதம் சொல்லத்தரமன்று. கரையூர்ப் பகுதியில் நூற்றுக்கணக்கான மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் தங்கள் படகுகளையும் வலைகளையும் வீடுகளையும் இழந்து நிர்க்கதியாகத் தவிக்கிறார்கள்.

மொத்தச் சேதம் ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்குமென்றும் ஏழை எளிய ஜனங்களே அதிக கஷ்டத்துக்கு உள்ளாகி யிருக்கிறார்கள் என்றும் யாழ்ப்பாணத்தின் சமீப சரித்திரத்தில் கண்டும் கேட்டுமிராத அளவு அழிவும் நாசமும் ஏற்பட்டுள்ள தென்றும் நேரில் பார்த்தவர்கள் கூறுகிறார்கள். கடல் பொங்கியதால் கரையோரப் பகுதியிலிருந்த அனேகம் குடியிருப்பு ஸ்தலங்களையெல்லாம் சமுத்திரம் விழுங்கிவிட்டதென்று சேதமுற்ற பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்த மந்திரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

கடல் நீர் புகுந்த வயல்களைச் சீர்திருத்தி மறுபடி விவசாயம் செய்ய மாதக் கணக்காகுமென்று அதிகாரிகள் மதிப்பிட்டிருக்கின்றனர். இரவுவரை நிம்மதியுடனிருந்த நூற்றுக்கணக்கான யாழ்ப்பாணக் குடும்பங்கள் வீடு வாசல்களையும், தோட்டம் துரவுகளையும் சூறாவளிக்குப் பறி கொடுத்து நிர்க்கதியான நிலைமையில் தவிக்கிறார்கள். ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேல் பறிகொடுத்துப் பரிதவிக்கும் மக்களுக்குக் கஷ்ட நிவாரணமளிக்க அரசாங்கம் மூன்று லட்ச ரூபாய் ஒதுக்கி யிருக்கிறது! பொது ஜன ஆதரவும் அனுதாபமும் இருந்தாலொழிய யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணமளிக்க முடியாதென்ற நம்பிக்கையுடன் 'வீரகேசரி' காரியாலயம் ஐயாயிரம் ரூபாயுடனும், 'லேக்ஹவுஸ்' பத்திரிகைகள் ஆயிரம் ரூபாயுடனும் நிவாரண நிதிகளைத் தனித் தனியே ஆரம்பித்துப் பண வசூல் செய்து, உடனுக்குடன் யாழ்ப்பாண அரசாங்க ஏஜண்டுக்கு அனுப்பி வருகின்றன. சிங்கள நண்பர்களும் இந்த நிதிக்குத் தாராளமாகப் பண உதவி புரிந்து வருகிறார்கள்.

சிற்க. தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள புயல் சேதம் இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்களுக்கு மிகுந்த கவலையை உண்டுபண்ணி யிருக்கிறது. தமிழ் நாட்டுடன் சரியான தபால் போக்குவரத்து இல்லாதது இந்தக் கவலையை மேலும் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது.


தோட்டத்து வீராங்கனைகள்

பெண்கள் ஒரு இலட்சியத்துக்காகப் போராடக் கிளம்பி விட்டால் அவர்கள் வெற்றி பெறுவதைப்பற்றி ஜோஸ்யம் கேட்கத் தேவையில்லை என்று சென்ற வார இலங்கைக் கடிதத்தில் ஜோஸ்யம் சொல்லப்பட் டிருந்தது. அதேபோல தேயிலைத் தோட்ட இந்தியப் பெண் தொழிலாளர் கண்ணாடி வளையல் அணியும் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக ஆரம்பித்த போராட்டம் பரிபூரண வெற்றியுடன் முடிந்து விட்டது.

ஹொல்லுகல என்ற தேயிலைத் தோட்டத்திலே தான் இந்தப் போராட்டம் சிறிய தோரணையில் ஆரம்பித்தது. கண்ணாடி வளையல்கள் அணிந்து வரும் பெண்களுக்கு வேலை கொடுப்பதில்லையென்று தோட்ட முதலாளி பிடிவாதம் செய்யவே மற்றும் இரண்டு தோட்டங்களுக்கும் போராட்டம் பரவி ஒரு பெரிய போராட்டமாக வளரும் அறிகுறிகள் தென்பட்டன. இதன்பிறகு தோட்ட முதலாளிமார் சங்கம் பணிந்து விட்டது. கலகலவென்று முழங்கை வரை பல வர்ணக் கண்ணாடி வளையல்கள் அணிந்து பெண்தொழிலாளர் நேற்று முதல் எப்பொழுதும் போல மீண்டும் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கப்பட்ட காலத்திற்குச் சம்பளம் கொடுப்பதா இல்லையா என்ற பிரச்னையை ஒரு மத்தியஸ்தரைக் கொண்டு தீர்த்துக் கொள்ளுவதென்று இப்பொழுது முடிவாகி யிருக்கிறது. —ரஜனி.

இலங்கை ஊவரெலியா ஜில்லாவில் ராகலையைச் சேர்ந்த நடுக்கணக்கு பஜாரிலிருக்கும் பிரபல கம்பெனியாகிய 'சஞ்சீவினி'யில் மானேஜரும் அதே ஜில்லா பிட்ரு எஸ்டேட்டில் (Pedro Estate) வசிக்கும் திரு பி. ராமசாமி கங்காணி அவர்களின் புதல்வருமான திரு. ராம. இராமு அவர்கட்கும் மேற்படி ஜில்லாவைச் சேர்ந்த காக்கொல்லைத் தோட்டத்தில் (Ovakela Estate) வசிக்கும் திரு காளிக் கங்காணி அவர்களின் புதல்வி செல்வி மல்லிகாவுக்கும் 1-12-52 தேதியன்று மணமகன் இல்லத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. அதுபோது அன்பர்களிடமிருந்து ஏராளமான வாழ்த்துக்களும் பரிசுகளும் மணமக்களுக்கு வழங்கப்பட்டது. வாழ்க மணமக்கள்!




SWASTIK
777 Superfine
SOAP



பாலுவின் தந்தை

பி. எஸ். மணி

பங்களாவுக்கு எதிர்த்தாற் போலிருந்த திடலில் ஒரு குடிசையிருந்தது. அந்தக் குடிசை வாசலில் நாலைந்து சிறுவர்கள் கூடி நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் கவனத்தையும் கருத்தையும் கவர்ந்தவை ஒரு பெரிய நாயும் அதன் அழகான நாய்க் குட்டிகளும் தான். அவர்கள் அந்தச் சின்னஞ்சிறு நாய்க் குட்டிகள் ஒன்றின் மேல் ஒன்று விழுந்து விளையாடுவதையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தனர்.

பங்களா வீட்டுப் பையனான பாலு "டேய், முனியா! எனக்கொரு நாய்க்குட்டி கொடு!" என்று அதிகாரத் தொனியில் கேட்டான்.

"சாமி! உங்களுக்கு நாய்க்குட்டி கொடுத்தால் எசமான் கோவிச்சுக்குவாரு. எங்க அப்பா மூந்திக்கூட நம்ம வீட்டிலே நாய் வளர்க்கலாமான்னு கேட்டதற்குப் பெரிய ஐயா எப்படிக் கோவிச்சுக்கிட்டாங்க, தெரியுமா? நான் நாய்க்குட்டி கொடுக்க மாட்டேன்" என்றான் பாலு வீட்டு வேலைக்காரனின் மகன் முனியன்.

"டேய், பாலு! உங்கப்பாவுக்கு நாய் என்றால் சிம்ம சொப்பனம். அன்றைக்கு ஒரு நாயைக் கண்டு பயந்து அவர் நாலு காத தூரம் ஒதுங்கிச் சென்றது எனக்கல்லவா தெரியும்?" என்று கேலியாகக் கூறினான் பாலுவின் நண்பன் கிட்டு.

பாலுவுக்குத் தன் நண்பர்கள் முன்னிலையில் கிட்டு தந்தையை அவமானமாகக் கூறியது மிகுந்த ரோசத்தை உண்டாக்கியது.

"போடா! என் அப்பாவுக்கு நாயைக் கண்டால் ஒன்றும் பயமில்லை. நீங்கள்தான் தெரியாமல் உளறுகிறீர்கள்!" என்றான் பாலு கோபத்தோடு.

"அப்படியானால் தைரியமாக உன் வீட்டில் ஒரு நாய்க் குட்டியை வளர்த்து வா, பார்க்கலாம்!" என்று விருப்புடன் கூறினான் கிட்டு. பாலுவைப் பார்த்து.

"பாருடா! என் அப்பா நாயைக் கண்டால் பயப்படுவதில்லை என்பதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன். எங்கள் வீட்டிலேயே ஒரு அழகான நாய்க் குட்டியை வளர்க்காவிட்டால் என் பெயர் பாலு இல்லை!" என்று மார் தட்டிப் பேசிவிட்டு அவன் வீட்டை நோக்கி ஓடினான். தன்னுடைய சபதத்தை உடனே நிறைவேற்றிக் காட்ட வேண்டும்

என்ற எண்ணம் அவனை வீட்டினுள் விரைந்து செல்ல வேகம் கொடுத்தது. அவன் முகம் அவமானத்தினுலும் ஆத்திரத்தினுலும் வாடிச் சுருங்கிப் போய் இருந்தது.

வீட்டினுள் ஓடி வந்த பாலு நேராகத் தன் தகப்பனரின் அறையினுள் நுழைந்தான். அவன் தகப்பனர் ராகவன் ஆபீஸ் பைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். கண்கள் கலங்க, வாடி வதங்கிய முகத்துடன் அவர் அருகே நெருங்கிய பாலு, "அப்பா!" என்று தயங்கியபடியே கூப்பிட்டான்.

"கண்ணு! என்னடா வேணும்?" என்று அன்புக் குரலில் வினவினர் ராகவன்.

"அப்பா! நம்ம வீட்டிலே நாய்க் குட்டி வளர்க்கணும் என்று ஆசையாயிருக்கு, அப்பா!" என்ருன் பாலு குழைவுடன்.

நாய் என்ற வார்த்தையைக் கேட்டதுமே சாந்தமும் மௌனமும் குடி கொண்டிருந்த ராகவனுடைய முகத்தில் கோபக் கனல் பறந்தது. "நம் வீட்டில் நாய் வாசமே கூடாது. எது வேண்டுமானுலும் வாங்கித் தருகிறேன். நாய் வளர்க்க மட்டும் நான் இடங் கொடுக்க மாட்டேன்" என்று பட பட வென்று பொரிந்து தள்ளினர் அவர்.

இன் முகத்துடன் இனிய சொற்களையே அவரிட மிருந்து கேட்டறிந்த பாலுவுக்கு அவருடைய ஆத்திரம் மிகுந்த வார்த்தைகள் அளவற்ற துயரத்தை யளித்தன.

"அப்பா!" என்று மறுபடியும் கெஞ்சினுன் பாலு. அவனுடைய கெஞ்சுதலுக்குச் சிறிதும் அவர் மசிந்து விடவில்லை. பாலு தொங்கிய முகத்துடன் அங்கிருந்து சென்று விட்டான். தோல்வியினுல் அவன் உள்ளம் சோர்ந்து போயிருந்தது. அதோடு நண்பர்கள் எல்லாம் தன் எண்ணம் பலிக்காததைக் கண்டு எள்ளி நகையாடுவார்களே என்ற ஏக்கம் அவனைச் சித்திரவதை செய்தது. 'அப்பா ஏன் நாய்க்குட்டி வளர்க்க மறுக்கிருர்? தன் நண்பன் கூறியதைப்போல் உண்மையாகவே அவருக்கு நாயிடம் பயந்தானே?... இருக்காது! நானே நாயின் அருகில் பயப்படாமல் நின்று விளையாடுகிறேனே? அவ்வளவு பெரியவர் பயப்படுவாரா? பின் அவர் மறுக்கக் காரணம்......?' இப்படிப் பலவிதக் கேள்விகள் எழுந்து அவன் மூளையைக் குழப்பின. அவைகளுக்கு விடை காண முடியாமல் தவித்துப் போய்ப் பங்களாவின் ஒரு மூலையில் அசந்து போய் உட்கார்ந்தான். அவன் சோர்ந்த முகத்தை அவனுடைய இரு கைகளும் தாங்கிக் கொண்டன. கண்கள் கண்ணீரைப் பொல பொலவென்று உதிர்த்தன.



வேலைக்கார வேலுவின் மகன் முனியன் பாலுவைத் தேடிக் கொண்டு வந்தான். "சின்ன ஐயா, உங்களை எங்கெல்லாம் தேடுவது? சமையல்கார ஐயா உங்களைச் சாப்பிடக் கூப்பிடுகிருரு" என்ருன் அவன்.

பாலு கோபத்துடன், "போடா! நான் ஒன்றும் வரவில்லை. எனக்குப் பசிக்கவில்லை என்று போய்ச் சொல்லு" என்று கூறி அவனை அங்கிருந்து விரட்டினுன்.

"சின்ன ஐயாவுக்கு நாய்க் குட்டி கொடுக்கவில்லைங்கிற கோபந்தானே? அதனுலே தானே என்னை விரட்டுறீங்க? பெரிய ஐயா கிட்டே பாட்டு வாங்க வேண்டாமென்று..." என்று கூறுவதற்குள்ளேயே பாலு, "என்னைத் தொந்தரவு செய்யாதே! இனிமேல் நீ என்னிடம் பேச வேண்டாம்!" என்று ஆத்திரத்தோடு மொழிந்தான்.

"அப்படியானுல் இனி என்னிடம் பேச மாட்டீங்களா? நாமிருவரும் சின்ன வயசிலிருந்து ஓடி விளையாடியதை மறந்துட்டீங்களா? என்னை உங்க சகோதரனுக நடத்துகிறேன்னு சொன்னீங்களே! அந்த வார்த்தை தண்ணீரிலே எழுதின எழுத்தைப் போலத் தானு?" என்று கண்களில் நீர் மல்கக் கேட்டான் முனியன்.


அதைக் கேட்டதும் பாலுவின் பிஞ்சு உள்ளம் கரைந்து விட்டது. "முனியா! என்னை மன்னித்துவிடு. அப்பா நாய் வளர்க்கக் கூடாதுன்னு சொன்னதிலே ஆத்திரமடைந்து உன்னிடம் கோபமாகப் பேசி விட்டேன். அதைத் தவருக எண்ணுதே!" என்ருன் அவன்.

"சின்ன ஐயாவிடம் இவ்வளவு நாள் பழகி விட்டு உங்கள் குணத்தைத் தெரிந்துகொள்ளாமலிருப்பேனு?......நீங்க தினம் என் குடிசைக்கு வந்து நாய்க் குட்டியோடு விளையாடுங்க" என்று அன்போடு ஆறுதல் கூறினுன் முனியன்.

"வேண்டாம், முனியா! அப்பாவுக்குத் தெரிந்தால் என்னைக் கோபித்துக் கொள்வார்" என்ருன் பாலு. அவன் குரல் கம்மியிருந்தது. அவன் மனம் அப்பாவின் கோபத்துக்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் தவித்தது. பாலுவின் தந்தை ராகவனின் ரௌத்ராகாரத்துக்கும் ஆத்திரத்துக்கும் நான்கு வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சாதாரண சம்பவந்தான் காரணம் என்பது பச்சிளம் பாலகனுன பாலுவுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை யல்லவா?

நான்கு வருஷங்களுக்கு முன் ராகவன் ஒரு நாள் தன் தம்பி ரகுவுக்குப் பெண் பார்ப்பதற்காகப் போயிருந்தார். ரகு அழகாக சில்க் ஷர்ட்டும், சரிகை வேஷ்டியும் அணிந்து பெண்ணைப்

பார்க்க வந்திருந்தான். பெண் வீட்டுத் தோட்டத்துக்குள் அவர்கள் நுழைந்தபோது ரகுவைச் சுற்றிச் சுற்றி ஒரு பெரிய நாய் வந்து கொண்டிருந்தது.



ரகு அந்த நாயிடமிருந்து தப்புவதற்காகச் சிறிது விரைவாக நடக்க ஆரம்பித்தான். அந்த முரட்டு நாய் அயல் மனுஷர்கள் நுழைவதைத் தடுப்பதற்காக அவன் சரிகை வேஷ்டியைப் பிடித்திழுத்தது. வேஷ்டி 'டர்' என்று கிழிந்து விட்டது. ரகுவுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. கீழே கிடந்த குச்சியை யெடுத்து வீசியெறியப் போனான். அடுத்த நிமிஷம் அந்த நாய் அவன்மேல் பாய்ந்து சில்க் ஷர்ட், வேஷ்டி யெல்லாம் நன்றாகக் கிழித்து விட்டது. பின்னால் வந்த ராகவன் அதைக் கண்டு கோபமடைந்து தன் இடுப்பிலிருந்த பெல்டைக் கழற்றி நாய் சுருண்டு விழும்படி வெளுத்து வாங்கின பிறகு தான் அவர் ஆத்திரம் சிறிது தணிந்தது. பெண் வீட்டார் தங்களைச் சரியாக வரவேற்காதது குறித்துக் கோபமடைந்து தன் தம்பியைப் பெண்ணைப் பார்க்க வேண்டாமென்று கூறி அழைத்து வந்து விட்டார். அதற்குப் பிறகு தம் தம்பியின் கல்யாணத்துக்கு இடையூறாயிருந்த நாயைக் கண்டாலே ராகவனுக்குப் பிடிக்கவில்லை. அதன்மீது அவருக்கு அளவு கடந்த வெறுப்பு உண்டாயிற்று. இத்தகைய துவேஷம் ராகவனுடைய மனத்தில் குடிகொண்டிருக்கையில் பாலு நாய்க்குட்டி வளர்க்க வேண்டும் என்று கூறினால் அவருக்குக் கோபம் வராமலிருக்குமா, என்ன?

* * *

அன்று ராகவன் ஆபீஸ் காரியமாக அயலூருக்குச் சென்றிருந்தார். பாலுவுக்குத் தன் வீட்டில் நாயைக் கட்டிப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை மிகுந்திருந்தது. அதோடு தன் தகப்பனார் அயலூருக்குச் சென்றிருக்கும் சமயத்தில் அதை நிறைவேற்றிக் கொள்ள அவன் மனம் விழைந்தது.

அவன் அன்று மத்தியானமே முனியனின் குடிசைக்குச் சென்று ஒரு நாய்க்குட்டியை வாங்கி வந்தான். முனியன் முதலில் நாய்க்குட்டியைக்கொடுக்க மறுத்தான். ஆனால் பாலு, தகப்பனார் ஊரிலிருந்து திரும்பி வருவதற்குள் அந்நாய்க் குட்டியைத் திருப்பித் தந்து விடுவதாக வாக்களிக்கவே, முனியன் அரை மனதோடு அதற்குச் சம்மதித்தான்.

பாலு அந்நாய்க் குட்டியைத் தனது அறை வாசலில் கட்டிப் போட்டான். அதற்கு அடிக்கடி ரொட்டியும் பாலும் கொண்டு வந்து கொடுத்தான்: அந்நாய்க்குட்டி வயிறு நிரம்பியதால் ஆனந்தம் தாங்க முடியாமல் துள்ளிக் குதித்தது. ஒவ்வொரு தடவை அது துள்ளிக் குதிக்கும் பொழுதும் பாலுவும் உற்சாகத்தில் கைகொட்டி ஆரவாரம் செய்தான்.

நாய்க் குட்டியுடன் விளையாடும் ஆனந்தத்தில் தன் தந்தை வந்தால் கோபித்துக் கொள்வாரே என்ற எண்ணம் அவனுக்கு எழவில்லை. இரண்டு நாள் கழித்து ராகவன் அயலூரிலிருந்து அன்று மாலை திரும்பிய பொழுது பாலு தோட்டத்தில் ஒரு நாய்க் குட்டியுடன் குதித்துக் கொம்மாளமடிப்பதைக் கண்டார். அவருக்கு வந்த ஆத்திரத்துக்கும், கோபத்துக்கும் அளவில்லை. முகத்தில் கோபக்கனல் தெறிக்க ஓடிப்போய்ப் பாலுவின் கையைப் பிடித்திழுத்துத் தள்ளினார். நாய்க்குட்டியை அப்படியே இரண்டு கையால் ராகவன் தூக்கிக் கொண்டார். பாலு 'ஐயோ!' என்று அலறிக் கீழே விழுந்ததையும் கவனிக்காமல் அவர் விடுவிடென்று தெருப்பக்கம் சென்றார். அவர் அச்சமயத்தில் ருத்ரமூர்த்தியாகவே விளங்கினார். நாய்க் குட்டியைத் தாங்கிய அவருடைய கைகள் வெடவெட வென்று நடுங்கின. அவருடைய முகம் அளவு கடந்த துவேஷத்தையும் வெறுப்பையும் கக்கியது.

பங்களாவின் வாசலை ராகவன் நெருங்கிய போது ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

எதிர்த்த குடிசையில் தன் குட்டிகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த பெரிய நாய் ராகவனின் கையில் தன் அருமைக் குட்டியிருப்பதைக் கண்டதும், தன்னுடைய குட்டிக்கு ஏதோ ஆபத்து என்று கருதி ஓடி வந்தது. ஆம்! பெற்ற மனத்தின் தவிப்பை எப்படி விவரிக்க முடியும்? தன் குட்டியைக் காப்பாற்ற ஆக்ரோஷத்துடன் அவர் மேல் பாய்ந்தது. ராகவன் அலறிப் புடைத்துக் கொண்டு நாய்க் குட்டியைப் பொத்தென்று கீழே போட்டு விட்டார். அடுத்த நிமிஷம் தன் அருமைக் குட்டிக்கு நேர்ந்த விபத்தைக் குறித்து ஆக்ரோஷமடைந்த பெரிய நாய் அவர் காலை 'லபக்'கென்று பிடுங்கி விட்டது. அவ்வளவுதான்; ராகவன் வலி பொறுக்க

'யார் சொன்னாலும் உங்கள் எஜமான் கேட்பார், கொஞ்சம் சொல்லேன்!



எனக்கு அவரால் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது!''

''இன்ன எஜமான் சொன்னால் எதுவும் அப்படியே நடந்து விடுங்க!''

''அப்படியா? எங்கே இருக்கிறார் இன்ன எஜமான்? அவரை நான் பார்த்துப் பேசலாமா?''

''தொட்டிலிலே தூங்குகிறார். இரண்டு வயசுப் பிள்ளையாச்சே அவர்!''

முடியாமல் 'ஹோ' என்று அலறிய வண்ணம் கீழே சாய்ந்தார்.

அவருடைய அலறலைக் கேட்டுக் குடிசையிலிருந்து வேலுவும் முனியனும் ஓடி வந்தார்கள். ராகவனை அவர்கள் அப்படியே தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் சென்றனர். டாக்டருக்கு உடனே ஆள் பறந்தது.

டாக்டர் வந்து ராகவனைப் பரிசோதித்துப் பார்த்தார். அவர் பல இன்செக்ஷன்கள் செய்து காலிலும் ஏதோ மருந்தை வைத்துக் கட்டினார். டாக்டர் கொடுத்த மருந்தின் அபார சக்தியினால் ராகவன் வெகு சீக்கிரத்திலேயே கண் விழித்து விட்டார்.

அவர் கண் விழித்தபோது எதிரே வேலைக்கார வேலு நின்று கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அவர் முகத்தில் கோபம் தொனிக்க, "வேலு! உடனே அந்தப் பைத்தியம் பிடித்த நாயையும், அதன் குட்டிகளையும் நாய் வண்டியில் ஏற்றி அனுப்பிவிடு. என் சகோதரன் ரகுவின் உடையை நாசப்படுத்திய அதே பைத்தியக்கார நாய்தான் என்னையும் கடித்து விட்டது. இனி அவைகள் என் கண் முன்னே தெரிந்தால் உன் முதுகுத் தோலை உரித்து விடுவேன்!" என்றார்.

"ஆகட்டும், எசமான்! உடனே கார்ப்பரேஷன் நாய் வண்டிக்கு ஏற்பாடு பண்ணி அவைகளை அனுப்பி விடுகிறேனுங்க" என்று பயந்த குரலில் பதிலளித்தான் வேலு.

வேலுவின் பதில் அவருக்குச் சிறிது கோபத்தைத் தணித்தது. "பாலு எங்கே? அவனை அழைத்து வா!" என்றார் ராகவன்.

"எசமான்! பாலு ஐயாவுக்குக் கடுமையான ஜுரமுங்க. படுக்கையிலே படுத்திருக்காங்க. டாக்டரு அவரைத் தான் பார்த்து மருந்து கொடுத்துக்கிட்டு இருக்கிறாரு. முனியனைக் கவனிக்கச் சொல்லியிருக்கிறேன்..."

"என்ன, பாலுவுக்கு ஜுரமா? அதை ஏன் நீ முதலிலேயே சொல்லவில்லை?"

"நீங்க படும் அவஸ்தையிலே அதைச் சொல்ல வேண்டாமென்று......" என்று மென்று விழுங்கினான் வேலு.

ஏதோ ஒரு உணர்ச்சி உந்தித் தள்ள சடக்கென்று படுக்கையிலிருந்து எழுந்தார் ராகவன். பாலுவின் அறைக்கு அவர் நொண்டியபடியே நடந்து சென்றார். தன்னுடைய ஆத்திரத்தினால் தன் செல்லப் பிள்ளைக்கு என்ன ஆபத்தோ என்ற பயம் அவரை அக்கஷ்ட நிலையிலும் நடக்கத் தூண்டியது.

பாலு படுக்கையில் முக்கி முனகியவாறு படுத்திருந்தான். அவன் முகம் பயத்தினாலும் ஜுர வேகத்தினாலும் வெளிறிப் போயிருந்தது. டாக்டர் அவன் உடலைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். முனியன் கண்களில் கண்ணீர் சோர பாலுவுக்கருகே நின்று கொண்டிருந்தான். ராகவன் தள்ளாடியபடியே வந்து, "டாக்டர்! பையனுக்கு எப்படி யிருக்கிறது?" என்று கவலை தோய்ந்த குரலில் வினவினார்.

தன் தந்தையின் குரலைக் கேட்டதும் பாலு, "அப்பா! உன்னை நாய் கடிக்க நான்தான்

காரணம். நான்தான் முனியன் நாய்க் குட்டி தர மறுத்தும் பிடிவாதமாக வாங்கி வந்தேன். என்னை நன்றாக அடித்து விடு, அப்பா!" என்று விக்கியபடியே கூறினான்.

டாக்டர், "நீ உடம்பை அலட்டிக் கொள்ளக் கூடாது. அதிகமாகப் பேசினால் ஜுரம் இன்னும் அதிகமாகி விடும்" என்றார்.

பாலு டாக்டரின் வார்த்தைகளைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல், "அப்பா! முனியன் நாய்களை ஒன்றும் செய்யச் சொல்லாதே, அப்பா! அந் நாய்களை நாய் வண்டியில் ஏற்றிச் சென்று கொன்று விடுவார்களாம். அந் நாய்கள் போய் விட்டால் முனியன் வீட்டை விட்டே ஓடிப்போய் விடுவானாம்... அப்பா! என்னை நன்றாக அடித்து விடு! அந் நாய்களை முனியனிடமே விட்டு விடச் சொல்லு, அப்பா!" என்று கெஞ்சினான். பாலுவின் உணர்ச்சி மிகுந்த சொற்களைக் கேட்டு ராகவன் திகைத்துப் போய் நின்றார். அவ்வார்த்தைகள் அவருடைய இதயத்தின் அடித்தளத்தைப் போய்த் தாக்கின.

கிணற்றிலிருந்து வரும் குரலில், "நான் அந்த நாய்க் குட்டியுடன் விளையாடுகையில் என்னை அந்த நாய் ஒன்றும் செய்யவில்லையே? அப்பாவை மட்டும் அந்த நாய் தாக்கக் காரணம்...?" என்று முனகினான் பாலு.

பாலுவின் கேள்விக்கு ராகவனின் உள் மனம் சரியான பதிலளித்து விட்டது. 'ஆம்! நீ அன்று அந்த வாயில்லா ஜீவனைக் கொடுமைப் படுத்தினாய்! அக்கொடுமையை அந்த நாய் மறக்கவில்லை. உன் கையிலேயே தன் குட்டியைக் கண்டதும் அதையும் கொடுமைப் படுத்தி விடுவாயோ என்கிற எண்ணத்தில் உன்மீது பாய்ந்துவிட்டது. வெறுப்பும் துவேஷமும் காட்டி விட்டுப் பின் அன்பை அதனிடம் நீ எதிர்பார்ப்பது மதியீனமல்லவா?'...

பங்களா வாசலில் கார் வந்து நிற்பதற்கு அறிகுறியாக ஹாரன் சத்தம் கேட்டது. வேலைக்கார வேலு, "ஐயா! நாய்களை அழைத்துச் செல்ல வண்டி வந்து விட்டது. அவைகளை ஏற்றி அனுப்பிவிட்டு வந்து விடுகிறேன்" என்றபடியே ஓட யத்தனித்தான்.


ராகவன், "இந்தா, வேலு! அந்த நாய் வண்டியை அப்படியே திருப்பி அனுப்பிவிடு. நாய்கள் இங்கேயே இருக்கட்டும்" என்றார்.

வேலு ராகவனின் திடீர் மாற்றத்தைக் கண்டு திகைப்புற்று நின்றான். பாலுவின் வாடிய முகத்தில் புன்முறுவல் தெளித்தது. தன் அருமை நாய்களுக்கு ஆபத்து வராததைக் கண்டு முனியன் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான். அவன் கண்கள் கண்ணீரைப் பெருக்கிப் பாலுவுக்கு நன்றி தெரிவித்தன.

புயலும் உதவியும்



புயலுக்குப் பின் கஷ்ட நிவாரண உதவியும் ஒரு புயலாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



நினைவுச் சுழல்

சௌம்யா

டிக் டிக்...டிக் டிக்...என்று அந்த நிசப்தத்தில் சுவரில் மாட்டி யிருந்த கடிகாரம் ஓடிக் கொண்டிருந்தது. அப்போது எல்லோரும் அயர்ந்து தூங்கி விட்டார்கள்.

நானும் தூங்க முயன்றேன். புரண்டு புரண்டு படுத்தேன். வெளியிலிருந்து காற்றடிக்காததினால் அறையில் புழுக்கமா யிருந்தது. உடம்பெல்லாம் கசகச வென்று வியர்த்தது. அந்த அறையில் தூக்கம் வராது போலத் தோன்றியது.

படுக்கையைச் சுருட்டிக் கொண்டு தாழ்வாரத்துக்குச் சென்றேன். அங்கு இறுக்கமா யில்லாதிருந்தாலும் காற்று வீசவில்லை. படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டுத் தரையில் படுத்துக் கொண்டேன். உடம்புதான் சில்லென்றிருந்ததே தவிர உள்ளம் வெந்து கொண்டிருந்தது.

பழைய ஞாபகங்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சிந்தனையில் புரண்டன. இந்தச் சமயத்தில்தானா இந்த ஞாபகங்களெல்லாம் வந்து தொலைய வேண்டும்! ஆனாலும் அந்த நாட்களை எவ்வாறு மறப்பது!

என் மெல்லிய இருதயத்தில் உண்டாகிய அந்த ஆழமான வடு எப்படி மாறும்! என் ஆயுளிருக்கு மட்டும் அந்தச் சம்பவத்தை மறக்க முடியாதே!

எளிய கஷ்டத்தோடு ஆரம்பித்த என் வாழ்க்கை அந்த இரண்டு ஆண்டுகள் ஆனந்தத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்துப் பிறகு தடாலென்று அதல பாதாளத்தில் சரிந்து விழுந்தது.

அந்தக் குதூகல வாழ்வின் ஞாபகத்தை என் மனத்திலிருந்து எப்படித்தான் அகற்ற முடியும்! மீண்டும் இந்தக் கதியை அடைந்துவிட்ட பிறகு நமக்கேன் அவ்வளவு இன்பங்கள் உண்டாயின என்றுதான் தோன்றுகிறது.

டிங் டிங்......மணி பதினொன்றடித்தது.

என் கண் கொட்டவில்லை. தூங்க வேண்டுமென்று கண்களை இறுக்க மூடிக் கொண்டேன். ஆனால்......

மீண்டும் என் சிந்தனை அலைகள் பொங்கி எழுந்து சிதறின. நான் குடும்ப வாழ்க்கை நடத்தியது மீண்டும் என் மனத் திரையில் தோன்றியது. அதை நினைக்க நினைக்க என் மனம் குமுறியது.

சீ, இதென்ன! தூக்கம் வரவில்லையே என்று என் மனத்தை அந்த ஞாபகத்தினின்றும் திருப்ப முயன்றேன்.

அன்னுவின் குறட்டைச் சத்தம் நன்றாகக் கேட்டது. நாளைக்குச் சனிக்கிழமையா...என்ன டிபன் செய்வது!......வீட்டில் ரவைதா னிருக்கிறது. உப்புமா செய்யலாமா......தினம்தான் உப்புமா... கேஸரி பண்ணுவோம்......முந்திரிப் பருப்பு ஆகி விட்டது போலிருக்கிறதே......

முந்திரிப் பருப்பு அவர் ஒரு டின் நிறைய வாங்கிக் கொண்டு வந்திருந்தார். அவருக்கு அது ரொம்பப் பிடிக்குமாம். நிறைய வறுத்துக் கொண்டு போய்க் கொடுத்தேன். என்ன ஆனந்தமாகச் சாப்பிட்டார்! அவர் என்னை அப்பொழுது பார்க்கும்பொழுது என்ன அன்பு தோன்றியது! என் முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு நோக்கினார். அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நானும் முந்திரிப் பருப்பை வாயில் போட்டுக் கொண்டிருந்தேன். அந்தச்சமயம் மாமியார் அங்கு வரவே நான் சமையலறைக்குச் சென்று விட்டேன். இந்த வயதானவர்களுக்கே சமய சந்தர்ப்பம் தெரிவதில்லை......

சீ! இதென்னடாது, மறுபடியும் அந்த ஞாபகமா!...எழுந்து உட்கார்ந்தேன். என் தலையில் என்னவோ பாரம். என் கையினால் தலையைத் தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

இலேசாகக் காற்று வீசியது. முற்றத்தில் போட்டிருந்த அவரைக் கொடிகள் அக் காற்றில் அசைந்தசைந்து ஆடின. தென்னை மரத்திலிருந்து சலசல வென்று சத்தம் வந்தது. கொல்லைப்புறப் புளிய மரத்திலிருந்தோ என்னவோ ஆந்தையின் அலறல் காதைப் பிளந்தது.

அம்மா புரண்டு படுத்தாள். பிறகு தனக் குள்ளேயே என்னவோ முனகினாள்.

"என்னடி, ரேணு! நீதானா!......இன்னும் தூங்கவில்லையா! படுத்துக்கொள், நாழியாச்சு!" என்று என்னைப் பார்த்துச் சொன்னாள் அம்மா. பிறகு சில நிமிஷங்களில் அம்மாவின் குறட்டையும் அண்ணாவின் குறட்டையோடு போட்டி போட ஆரம்பித்தது.

இவர்களுக்கு எப்படித்தான் தூக்கம் வருகிறதோ! என் மனம் உறங்கினாலல்லவோ, என் கண்கள் அயர! இன்று இந்த ஞாபகம் வரக் காரணம்!·ஆம், அந்த முரளிதான்!

அவருக்கு என்னைக் கொடுப்பதாகப் பேச்சு நடந்தது. அவருக்கும் என்னை மணம் செய்து கொள்ள இஷ்டமென்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கடைசியில் ஏதோ காரணத்தினால் கல்யாணப் பேச்சு நின்று விட்டது. என் தலை யெழுத்து இப்படி யிருக்கும் பொழுது எனக்கு எங்கே கலீர்தம்!

அந்த நாட்களை நினைத்தால்......

எனக்கு நினைவு தெரிந்தது முதல் அப்பாவைப் பார்த்ததில்லை. அவர் காலமாகும் பொழுது எனக்கு வயது இரண்டு.

என் சிநேகிதிகள் வீட்டிற்கு விளையாடச் செல்வேன். அவர்களெல்லாம் தங்கள் தகப்பனாரைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்வது என்னவோ போல் இருக்கும். எனக்கும் அம்மாதிரிக் கேட்டதை வாங்கிக் கொடுக்க அப்பா இல்லையே என்று நான் வருத்தப்படுவதுண்டு.

அண்ணாதான் என்னைப் படிக்க வைத்தான். நான் நன்றாகப் படித்துத் தேர்ச்சி பெற்றதைக் கண்டு சந்தோஷமடைந்தான்.

அந்தக் காலத்தில் என்னைப் பிடிக்காதவர்கள் ஒருவரும் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். என்னை அழைக்காத வீடில்லை. எனக்கு எவ்வளவு தோழிகள்! என்ன விளையாட்டு......!

அந்த அம்புஜா மாமியையும், மாமாவையும் மறக்க முடியாது. அவர்களுக்கு என்னைக் கண்டால் உயிரென்றுதான் சொல்ல வேண்டும்.

எனக்கு வயதாகிக் கொண்டிருந்தது. பருவக் காற்றும் என் மீது வீச ஆரம்பித்து, அறியாச் சின்னங்களை உண்டாக்கி விட்டுச் சென்றது. நாளாக நாளாக ஒரு தனி வளர்ச்சி. அக்குறுகிய காலத்தில் ஏற்பட்ட அவ்வளவு பெரிய மாறுதல் எனக்கே வியப்பை யளித்தது.

என் தேகத்தில் ஒரு புது ரத்தவோட்டம் கிளம்பியதுபோலத் தோன்றியது. சொல்ல முடியாத ஒரு உவகை. என் தோற்றத்தில் ஒரு வனப்பு. முகத்தில் ஒரு தனிக் களை. என் நடையில் ஒரு வேகம். என் மனசில் ஒருவிதப் பரபரப்பு. எனக்கு அமைந்த ஒரு பொலிவு என்னை ஒத்தவர்களுக்கு இல்லை என்று கூறும்படி யிருந்தது. இந்த எழிலை யடைந்த என் மனத்தில் என்னை யறியாமல் ஒரு பெருமை வளர்ந்தது.

ஆனால் அண்ணாவின் நெற்றியில் சுருக்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. சதா அம்மாவிடம் பேசிக்கொண்டே யிருந்தான். சனி, ஞாயிற்றுக் கிழமைகள் வந்து விட்டால் வேளா வேளைக்கு அவனுக்குச் சோறு கிடையாது. எங்கெல்லாமோ சுற்றியலைந்து எனக்கு வரன் தேடுவதில் தீவிரமாக முனைந்தான்.

எவ்வளவோ ஜாதகங்கள் வந்தன. பணக்காரன், ஏழை, படித்தவன், படிக்காதவன், உத்தியோகத்தி லிருப்பவன், உத்தியோகத்தி லில்லாதவன்,—இப்படியாகப் பல வரன்களை அலசிப் பார்த்தான். ஒன்றாவது முடியவில்லை. சில வரன்கள் எனக்குப் பிடிக்கவில்லை. இரண்டு பேருக்கும் பிடித்த இடத்தில் பணத் தகராறினால் நின்றது.

அதன் பிறகு அந்த முரளீதரனின் ஜாதகமும் கிடைத்தது. அவனை ஒரு நாள் பார்த்திருக்கிறேன். அன்று வீட்டில் ஏதோ விசேஷம். ஸில்க் புடவையைக் கட்டிக் கொண்டு, வாசலில் பூக்காரன் வருகிறானா வென்று பார்க்கச் சென்றேன். அப்பொழுது தற்செயலாக வந்த அவன் ஒரு க்ஷணம் என்னைப் பார்த்துவிட்டு நின்றுவிட்டான். அவன் பார்த்த பார்வை......!

நான் உள்ளே வந்து விட்டேன். ஏன் என்னை அந்த மாதிரியாகப் பார்த்தான்! என் கால்கள் என்னைக் கண்ணாடியின் முன்கொண்டு நிறுத்தின. என்னைக் கண்டு நானே ஆச்சரியப்பட்டேன். அந்தப் புடவை நன்றாக எனக்கு அமைந்திருந்தது.

முரளியின் ஜாதகம் சரியாக இருந்தது. ஆனால் அவன் தகப்பனார் ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு வரதக்ஷிணை கேட்டார். அண்ணாவுக்கு அந்த வரனையும் விடவேண்டிய தாயிற்று.

நாளாகிக் கொண்டிருந்தது. அண்ணாவுக்கும், அம்மாவுக்கும் உண்டாகிய வருத்தம் கொஞ்ச நஞ்சமல்ல. இரண்டு வருஷங்கள் சென்றன.

அண்ணாவின் கவலை என்னையும் பாதித்தது. என் மனத்திலும் நாளடைவில் ஏக்கம் குடிகொண்டது.

அண்ணாவின் குழந்தை மோகன் வீலென்று கத்தினான்......என் சிந்தனை யோட்டம் தடைப்பட்டது. இன்னும் அப்படியே அதே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

கிர்ர்ர்......டிங் என்று கடிகாரத்தில் மணியடித்தது......டிக் டிக்......டிக் டிக்......என்னைப் பார்த்துப் பரிகசிப்பதைப் போலத் தோன்றிற்று.

ஏதேது இன்று சிவராத்திரிதான் போலிருக்கிறது. மனத்தில் ஒன்றுமே நினைக்கக்கூடாது என்று ஆனமட்டும் முயன்று பார்த்தேன். முடியவில்லை. ஏதாவது ஒரு ஞாபகம் மனசில் முளைத்துக் கொண்டே யிருந்தது. ஒரு விநாடியாவது மனம் வெறிச்சென்றிருக்காதா என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். எனக்குத்தான் இப்படியா! அல்லது எல்லோருக்குமே இப்படித்தானா! யாரைப் போய்க் கேட்பது! கேட்டு ஆகவேண்டிய காரியம்!

வள், வள், என்ற தூரத்தில் ஒரு நாய் குரைத்தது. அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று நாய்கள் குரைக்கும் சப்தம். நாழிகையாக நாழிகையாக சப்தம் பலமாகச் சமீபத்தில் கேட்டது. ரோட்டில் யாரோ ஓடுவதுபோலத் தோன்றியது. மனம் திக் திக் கென்று அடித்துக் கொண்டது. வாசற் கதவு தாழ்ப்பாள் போட்டிருந்தது. ஒரு வேளை கதவு திறந்து இருந்து திருடன் உள்ளே புகுந்து விட்டால்! எழுந்து போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று நினைத்து எழுந்தேன். கால்கள் மரத்துக் கிடந்தன. உடம்பெல்லாம் வியர்வை.

வாசற்கதவு தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. திரும்பினேன். ரேழி அறையில் குழந்தை

மோகன் தரையில் கிடந்தான். காதில் எறும்பு புகுந்து விட்டால்! அண்ணா படுத்திருக்கும் அறையில் போக மனம் கூசியது. அம்மாவிடம் வந்தேன்.

"அம்மா, மோகன் தரையில் கிடக்கிறான்!"

"ஏண்டி, நீதான் படுக்கையில் எடுத்து விட்டு விட்டு வரக்கூடாதோ!" என்று சொல்லிவிட்டு அம்மா உள்ளே போய்க் குழந்தையைப் படுக்கையில் விட்டு விட்டு வந்தாள்.

"இன்னுமா தூங்கவில்லை. ரேணு! என்ன யோசனை பண்ணி எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறாயோ! யார் செய்த பாவமோ! உன் தலையிலே இப்படி எழுதியிருக்கிறது!"

"என் தலையெழுத்தென்ன! நீங்கள் செய்த காரியம்தானே!" என்று கூறவேண்டும்போலிருந்தது. இல்லா விட்டால் இரண்டாம் தாரமாக, நாற்பது வயதான அவருக்கு என்னைக் கொடுக்க மனம் வருமா! காணும்மூடியா தென்று சொல்லியிருப்பேன். ஆனால், அன்று அண்ணா சொல்லியது என் மனசை அப்படியே உருக்கிவிட்டது.

"அம்மா, இதென்னம்மா! ஒரு இடமும் அமைய வில்லையே! எல்லாம் தட்டிக்கொண்டே வருகிறதே!" என்றான் அண்ணா.

"என்னவோ அப்பா! இன்னும் வேளையும் போதும் வரவில்லைபோ லிருக்கிறது!"

"அந்த நரஸிம்மாச்சாரி பெண் செம்பாவுக்கு நல்ல இடம் கிடைத்து விட்டதம்மா! பையன் டெல்லியில் ஆபீஸராம். ஆயிரம் ரூபாய் சம்பளமாம். இத்தனைக்கும் அந்தப் பெண் லக்ஷணமாகக்கூட இருக்காது. ஆனால் பணமும், அந்தஸ்தும் தானே அம்மா எடுப்பா யிருக்கிறது! கையிலே பத்தாயிரம் ரூபாய் கொடுக்கிறாராம். வேறு என்ன வேண்டும்! நம்ம ரேணு அவளைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அழகு என்று சொல்ல வேண்டும். இந்த அழகு போதாதாம். எல்லாம் பணம்தானம்மா இந்தக் காலத்திலே! அழகெல்லாம் அடுத்த படிதான். நம்ம ரேணுவுக்கு நல்ல இடமாக அமைந்து விட்டால் திருப்தியா யிருக்கும். அவள் அதிருஷ்டம் எப்படி யிருக்கோ!"

இந்தச் சம்பாஷணை என் மனசை உருக்கியது. அழுகை கூட வந்து விட்டது. என்னால் இவர்களுக்கு இவ்வளவு பாரமும் கவலையுமா! கடவுளே, எப்படியாவது கூடிய சீக்கிரத்தில் என் கல்யாணத்தை நடக்கும்படி செய். அண்ணாவுக்கு மேலும் தொந்தரவு கொடுக்காமல் கூடிய விரைவில் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். ஆகவே, அந்த மாயவரம் வரனுக்கு இரண்டாந் தாரமாக வாழ்க்கைப் படுவதற்காக நான் ஆட்சேபிக்கவில்லை. கல்யாணம் நடந்தது. இக் கல்யாணத்தைப் பற்றி ஜனங்கள் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டார்களாம்.

என் இல்வாழ்க்கை, நாகபுரியில் ஆரம்பமாகியது. நான் நினைத்ததற்கு முற்றிலும் எதிராக, அவர் காட்டிய பிரியம் கொஞ்ச நஞ்சமன்று. இன்பக் கடலில் நீந்திக் கொண்டிருந்தேன்.

அவர் ஒரு மருந்துக் கம்பெனியின் ஜில்லாப் பிரதிநிதியாக வேலை பார்த்து வந்தார். மாதத்திற்கு முக்கால்வாசி நாட்கள் வெளியூர்களில் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் நான் சென்றதும் என்னையும் அழைத்துக் கொண்டு பல ஊர்களுக்குச் சென்றார். பெரிய நகரங்கள், க்ஷேத்திரங்கள் புண்ணிய தீர்த்தங்கள் எங்கெல்லாமோ சுற்றினோம். எவ்வளவோ ஹோட்டல்களில் தங்கினோம். பலவித சாப்பாடுகளையும் தின் பண்டங்களையும் உண்டு களித்தேன். நான் கேட்பதற்கு முன் அவரே எனக்கு வேண்டிய தெல்லாம் வாங்கி நிரப்பினார். வயதுதான் அவருக்கு ஆகியிருந்ததே தவிர, என்மீதுள்ள பிரியம் அவருக்குக் கங்கு கரை யின்றி யிருந்தது.

"ரேணு, இங்கே வா!" என்று ஒரு நாள் அழைத்தார். ஒரு அட்டைப் பெட்டியைத் திறந்து, அழகான சிறந்த வேலைப்பாடமைந்த பெனாரஸ் ஸில்க் புடவையை எடுத்து என்னை உடுத்திக் கொள்ளும்படி சொன்னார். அதை உடுத்திக் கொண்டு கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். என் கண்களையே நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன். இவ்வளவு ரூபவதியாகத் தோன்றுவது இந்த ரேணுவா......சீ இதென்ன தற்புகழ்ச்சி......என் பின்னால் அவர் உருவம் தெரிந்தது. மெதுவாக என் பின்னால் நின்றார்.

"ரேணு!" என்று என் தோள் பட்டைகளைப் பிடித்துத் தம்மீது சாத்திக் கொண்டார். அவர்





"பாடச் சொல்கிறீர்களே! மூன்று நாட்களாகத் தொண்டை சரியா யில்லையே, ஐயா!"

"பரவா யில்லை, பாடுங்கள் ஸார்! என் காதும் சரியாக இல்லை!"

கண்களினின்று இரண்டு முத்துக்கள் என் ரவிக்கையில் பாய்ந்து மறைந்தன. நானும் அவர் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதேன். ஏன், எதற்காக அழுதேனென்பது எனக்கும் புரியவில்லை. அவரும் கேட்கவில்லை......

* * *

அந்த வருஷம் தீபாவளிக்கு அவருக்கு லீவு கிடைக்கவில்லை ஆகவே நாங்கள் ஊருக்கு வர முடியவில்லை.

அண்ணா நூறு ரூபாய் அனுப்பினான். அதற்கு மேல் செய்ய அவனுக்குச் சக்தி! உடலை ஒடித்து, மனசைப் பிழிந்து அவன் வேலை செய்வதற்கு வருமானம் மாதம் ரூபாய் அறுபது. இதற்குமேல் தாலூகா ஆபீஸில் என்னத்தைக் கொடுப்பார்கள்! எப்படித்தான் முடிந்ததோ, எங்கு கடன் வாங்கினானோ. அந்தத் தீபாவளிக்கு நூறு ரூபாய் அனுப்பி யிருந்தான்.

அந்த நூறு ரூபாயையும் அவர் என் கையிலேயே கொடுத்து விட்டார். என் கை நடுங்கியது. என் மனம் பதறியது. ஏன் என்னிடம் கொடுத்து விட்டார்! இது போதவில்லை என்ற எண்ணமா அவருக்கு......!!

அவர் முகத்தை நோக்கினேன். புகையிலையை அரிந்து அப்பொழுதுதான் வாயில் போட்டுக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் ஒருவித மாறுதலும் இல்லை. ஏமாற்றமும் இல்லை, கோபமும் இல்லை. அதிருப்தியுமில்லை, வருத்தமும் இல்லை. வழக்கம்போலவே யிருந்தது. ஆனால் எந்தக் காரணத்திற்காக அந்தப் பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்! அவரைக் கேட்க என் மனம் கூசியது. ஆகவே சிறிது நேரம் மௌனமாயிருந்தேன். அவர் ஏதோ ஒரு ஜாப்தா தயார் செய்து கொண்டிருந்தார். என் கண்களில் தோன்றிய மெல்லிய திரையால் அதைக் கவனிக்க முடியவில்லை.

மறு நாள் விடியற் காலம் தீபாவளி. அவர் சாயங்காலம் ஐந்தரை மணிக்கே புறப்பட்டுச் சென்று விட்டார். என் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின.

இரவு ஒன்பது மணிக்குத்தான் திரும்பி வந்தார். கையில் இரண்டு மூன்று பொட்டலங்கள். ஒரு பெரிய பொட்டலத்தில் கையகலம் ஜரிகை போட்ட பட்டுப் புடவை, ரவிக்கைத் துணி, மற்றொன்றில் அவருக்கு ஏதோ வேஷ்டி. ஒரு பெட்டி ஒன்றில் நிறையப் பட்டாசு, வெடிகள்.

பையிலிருந்து ஒரு சிறு பெட்டியை எடுத்தார். என் கவனம் அப் பெட்டியிடம் விழுந்தது.

"ரேணு......!" அவர் முகத்தில் புன்னகை......

என் கண்கள் விரிந்தன. அது என்னவென்று அறிய என் மனத்தில் தோன்றிய பரபரப்பைச் சொல்லி முடியாது.

பெட்டியைத் திறந்து உள்ளிருந்ததை எடுத்தார். பளபளவென்று மின்னியது ஒரு நெக்லேஸ். அதைக் கையிலெடுத்து என்னிடம் நீட்டினார். என் கைகள் அதை வாங்கிக் கொள்ள விரைந்தது. ஆனால் என் மனம் சற்றுத் தயங்கியது.

"ஊம்! கையில் வாங்கிப் பார்! உனக்குப் பிடித்திருக்கிறதா!"

இதென்ன கேள்வி யென்று நினைத்துக் கொண்டேன். நகை யென்றால் ஒரு பெண்ணுக்குப் பிடிக்காம லிருக்குமா! அதுவும் நெக்லேஸ் போன்ற ஒரு விலையுயர்ந்த ஆபரணத்தைப் பிடிக்கவில்லை என்று சொல்லக் கூடிய மடந்தையரும் இருப்பார்களா!

"எனக்கு இது ரொம்பப் பிடித்திருக்கிறது. எனக்காக ரொம்பச் செலவழித்து விட்டீர்கள்!" என்றேன்.

"அடி, அசடே! இதெல்லாம் என்ன பிரமாதம், ரேணு! இன்னும் கொஞ்ச நாளில் பார்! உன்னை அப்படியே வைரமய மாக்கி விடுகிறேன்!"

என் தொண்டை கம்மியது. இதென்ன வியப்பா யிருக்கிறது! இவர் இவ்வளவு தூரம் அன்பு காட்டுவதற்கு நான் அருகதை யுடையவள் தானா! அன்று ஒரு நாள் இவருக்கு என்னை நிச்சயம் செய்தவுடன் அழுதேன். என் ஜென்மம் இப்படியே அழுதவாறே கழியப் போகிறதென்று நினைத்துக் கொண்டிருந்தேன். நான் நினைத்ததென்ன, இப்பொழுது நடப்பதென்ன!

தீபாவளி ஸ்நானம் செய்து, புதுப் புடவையும் அந்த நெக்லேஸையும் அணிந்துகொண்டு பட்டாஸ் விட்டுக் கொண்டிருந்தேன். மத்தாப்பு, கம்பி வாணம், எலக்டிரிக் பட்டாஸ், பூவாணம், சிவப்பு பச்சை வாணங்கள் இன்னும் எவ்வளவோ தினுசுகள் வாங்கிக்கொண்டு வந்திருந்தார். இதெல்லாம் அண்ணாவுக்கு எழுதினால் எவ்வளவு சந்தோஷப் படுவான்! மனசில் எண்ணங்கள் குவியக் குவியப் பட்டாஸை அஜாக்கிரதையாகப் பிடித்திருந்தேன். 'புஸ்'ஸென்று என்னைத் தாக்கியது. "ஐயோ" என்று பின் வாங்கி அவர் மீது மோதிக் கொண்டேன். அவர் அப்படியே என்னை அணைத்துக் கொண்டார்.

அந்த அணைப்பின் சுகம்!......

இரண்டு மாதங்கள் கழிந்தன. மறுபடியும் கான்பூருக்குப் போய் வந்தோம். ஊர் வந்தடையும் பொழுதே அவருக்குத் தலை வலியும் ஜுரமுமாக இருந்தது. மறு தினத்திலிருந்து படுத்த படுக்கையாகி விட்டார்.

டாக்டர் சிகிச்சை செய்து கொண்டிருந்தார். தினம் இரண்டு ஊசி, என்னவெல்லாமோ மருந்துகளும் கொடுத்தார்.

என் மனம் கலங்கியது. இரவு பகலாக அவர் பக்கத்திலேயே கண் விழித்துப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். அனல் போன்று தகிக்கும் அவர் மார்பில் என் கைகளை வைத்து அழுத்திக் கொண்டே, "ஆஹா! உன் கை எவ்வளவு குளுமையாக விருக்கிறது, ரேணு!"

என் பெயரை மாத்திரம் கூப்பிட்டாரே தவிர அவர் மனத்தில் என்ன நினைத்தார் என்பதைச் சொல்லவில்லை. என் கையைப் பிடித்துக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தார்.

அவர் அப்படிச் செய்தது எனக்கும் அடங்காத துக்கத்தைக் கிளப்பியது. நானும் விக்கி விக்கி அழுதேன்.

"ரேணு! ஏன் அழறே!"

"இல்லை;......அழவில்லையே!"

"அழாதே, ரேணு!......பயப்படாதே!......"

அவர் குரலில் தெளிவில்லை. ஏதோ என்னைச் சமாதானப் படுத்துவதற்காகக் கூறப்பட்ட வார்த்தைகள் போலத் தோன்றியது. என் மனத்தில் துக்கத்தின் சாயை படர்ந்தது. நாளாக நாளாக என் இருதயத்தையே சுற்றிப் படர்ந்து என் மன நிம்மதியை விரட்டியடித்தது.

ஒரு வாரம் கழிந்தது. அவருக்குப் பிரக்ஞை தெறிவிட்டது. ஜுரம் தணிந்தபாடில்லை. நான் என்ன செய்வேன்! அழுதேன், கதறினேன், எப்படியாவது அவருக்கு உயிர்ப் பிச்சை யளித்து என் மாங்கல்யத்தைக் காப்பாற்றுமாறு கடவுளை என்னென்னவோ வேண்டிக் கொண்டேன்.

கடவுள் என்ன செய்வார்! என்னுடைய வாழ்க்கைப் பாதையில் என் கணவன் என்னை விட்டுப் பிரிந்து விடுகிறார். காலதேவன் தன் கடமையை முடிக்க வந்து விட்டான்.

பத்தாம் நாள் என் கணவர் ஈசுவர சர்மா தம் பூத உடலை நீத்துச் சென்றார்.

நான் புலம்பினேன், அழுதேன், முட்டிக்கொண்டேன். சரியான சமயத்தில் என் அண்ணா வந்திராதபோனால் தற்கொலை செய்து கொள்ள ஆயத்தம் செய்து கொண்டிருந்த என் உடலை மாத்திரம் கண்டிருப்பான்.

"நீதான்......நீதான் என் நாசத்திற்குக் காரணம். வேண்டு மென்றே என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டாய். இனிமேல் நான் உயிர் வாழ வேண்டு மென்பதில்லை. என்னைத் தடுக்காதே!" என்று அவனைக் கண்டதும் கத்தி விட்டேன்.

அண்ணா விக்கி விக்கி அழுதான். என்னை ஒருவிதமாகச் சமாதானப்படுத்தி ஊருக்கு அழைத்துக் கொண்டு வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

ஆதியில் இளந்தென்றலாக என்மீது வீசிய அந்தப் பருவக் காற்று இப்பொழுது கொடும்புயலாக மாறி, என்னை வீசி யெறிந்து என் கழுத்திலிருந்த மாங்கல்யத்தைப் பறித்துக் கொண்டு போய் விட்டது.

என் மனத்திலும் பெரிய சுழல் ஆரம்பித்து விட்டது.

எவ்விதத்திலும் அண்ணாவுக்குப் பாரமாக இருக்கக் கூடாதென்ற வைராக்கியம் மறைந்து, இப்பொழுது அவனையே அடைக்கலம் புகுந்தேன்.

ஒரு காலத்தில் என்னை எதிர்கொண்டழைத்துப் பேசிய அந்த முகங்கள் இப்பொழுது என்னைக் கண்டால் அருவருப்புடன் வேறு பக்கம் திரும்பிக் கொள்கின்றன.

நாள் கிழமைகளுக்கும், பல விசேஷங்களுக்கும் வீடு வீடாகச் சென்று வந்த நான் இப்பொழுது வெளியே சென்றால் ஒதுங்கி ஒதுங்கிச் செல்ல வேண்டியிருக்கிறது.

ஒரு காலத்தில் உற்சாகமாக என்னென்னவோ பாட்டுக்களையும் ஹாஸ்யப் பேச்சுக்களையும் சொல்லிக் கொண்டிருந்த நான் இப்பொழுது சதா ஈசுவரத் தியானத்தில் ஈடுபட்டு விட்டேன்.

என் ஜென்மம் இப்படியா ஆகவேண்டும்! மீண்டும் இந்த உலகத்தில் எம் போன்றவர்களுக்குப் பிரவேசிக்க இடமில்லையா! ஐயோ, என் உயிர் போய்விடாதா என்று தோன்றிற்று. முன்பு என்மீது பிராணனாக இருந்த அண்ணாகூடச் சமயத்தில் என் மீது சிடு சிடு வென்று விழுவது எனக்குப் பொறுக்கவில்லை. இதற்கு யார் காரணம்! நானா, அல்லது என் கணவரா, அல்லது அண்ணாவா! அல்லது அம்மாவா! இந்தக் கேள்விக்கு யாரால் எனக்குப் பதிலளிக்க முடியும்!

"டுடு, டுடு!" "டுடு, டுடு!" என்று குடுகுடுப்பைக்காரனின் உடுக்கைச் சப்தம் கேட்டது. அச் சப்தம் பலமாகிக் கொண்டே வந்தது.

ஐயோ, நம் வீட்டில் ஏதாவது கன்னா பின்னா வென்று சொல்லிவிடப் போகிறானென்று காதுகளை இறுக மூடிக் கொண்டேன். அப்பாடா! ஒரு விதமாக அந்தச் சப்தம் ஒழிந்தது.

மணி நாலு ... டிக் டிக் ... டிக் டிக்......

என் இருதயமும் அதோடு போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

கொக்கரக்கோ...கோ...என்று ஜாமக் கோழி கூவியது.

இன்னும் இரண்டு மணி நேரம்தான். இப்படியே உட்கார்ந்து கழித்து விடலாம்,

அச்சமயம் அண்ணா எதிரே வந்தான். ஏதேதோ பேசினான். "ரேணு, உபாத்தியாயர் வேலைக்குப் படிக்க உனக்கு என்ன ஆக்ஷேபனை!"


"அண்ணா, உனக்கு இடையூறில்லாமல் எந்த வேலையும் நான் செய்யத் தயார்!"

"சரி......"

ட்ரெயினிங் ஸ்கூலில் சேர்ந்து படித்தேன். ஒரு விதமாகப் படிப்பும் முடிந்தது.

வாலாந்தூர் என்ற ஊரில் உள்ள ஜில்லா போர்ட் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினி வேலை கொடுக்கப்பட்டது.

ஒரு நாள் ஒருவர் சிறு பெண்ணை அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வந்தார். அவரை



உங்கள் வோட்டு
நீண்டகாலத்திற்கு உழைக்கும்
'விஸ்டம்'
டூத் பிரஷுக்கே!
VOTE FOR 'WISDOM' – THE LONG-LASTING TOOTHBRUSH!
మీ వోటు 'విస్డమ్'కు
In any language, it's wise to ask for WISDOM — the long-lasting, correct-shape nylon toothbrush.
Wisdom REGD.
Wisdom
Wisdom

எங்கேயோ பார்த்தது போலிருந்தது. அவரும் என்னைப் பார்த்தார். நானும் பார்த்தேன், அவர் தான் அந்த முரளீதரன்!

"நீங்கள்.......!"

"நீ......ரேணுகா தானே......!"

"ஆமாம்!"

"இங்கு வந்து எவ்வளவு நாளாயிற்று!"

"போன மாதம்தான் இங்கு வேலை ஒப்புக் கொண்டேன். இந்தப் பெண் யார்!"

"இவள்தான் என் பெண் கமலா......இங்கே சேர்த்துவிடலாமென்ற நோக்கத்தில் அழைத்துக் கொண்டு வந்தேன்!"

"அதற்கென்ன, சேர்த்துக் கொள்கிறோம்...... நான் பார்த்துக் கொள்கிறேன்."

பிறகு அவரைச் சந்திக்க அடிக்கடி சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு நாள் அவர் குடும்பத்தைப் பற்றி விசாரித்தேன். பாவம்! அவர் கண்கள் கலங்கின. அவர் மனத்திலும் அதே புயல் வீசிக் கலக்கி யிருந்தது. அந்தத் துக்ககரமான சம்பவம் என் நெஞ்சையும் உருக்கி விட்டது, அவ்வளவு அன்பாயிருந்த அவர் மனைவி அவரைத் தவிக்க விட்டு மீளா யாத்திரைக்குச் சென்ற பொழுது யாருக்குத்தான் துக்கம் வராது!

அவர்மீது எனக்கு அனுதாபம் ஏற்பட்டது. அவருக்கும் அப்படியே தோன்றியிருக்க வேண்டும். பரஸ்பரம் எங்கள் கஷ்ட நஷ்டங்களைச் சொல்லிக் கொள்வது சகஜமாகப் போய்விட்டது. எப்ப டியோ இருவர் மனமும் மெதுவாக நெருங்கிக் கொண்டு வந்தன. என் உள்ளத்தின் ஆழத்தை அறிய அவர் முயன்றார். அவர் மனத்தையும் நான் ஆராய்ந்தேன். என் மனம் அவரை நாடியது. சீ......இதென்ன எண்ணம்! என் இருதயப் பிளவை இவர் அன்பினால் ஒட்டுப்போடலாமா... இதென்ன யோசனை ....! இவ் வெண்ணம் கை கூடாது.

நான் நினைத்த சமயத்தில் அவர் வந்தார். "உங்களுக்கு ஆயுள் நூறு! ஏன் உங்கள் முகம் இன்று வாடி யிருக்கிறது!" என்று கேட்டேன்.

"நான் என்னத்தைச் சொல்லுவது! அவள் போய்விட்டதிலிருந்து என் மனம் இப்படித்தான் கொந்தளிக்கிறது. ராஜலக்ஷ்மி இல்லாத வீடு எப்படி யிருக்கும்! மனைவியின் ஆதரவு இல்லாத ஒரு புருஷனின் மனம் எப்படி யிருக்கும்! என் லக்ஷ்மி மறைந்து விட்டாள். என் இருண்ட மனத்தில் மீண்டும் ஒளியை உண்டாக்கு வதற்கு......யார்தான் முன் வருகிறார்கள்......! எனக்கு வயதாகி விட்டதாம்..............அவர்களைச் சொல்லி என்ன பயன்!" இப்படிச் சொன்ன போது நாத் தழுதழுத்தது.

என் மனதில் எண்ணங்கள் சுழன்று சுழன்று எழுந்தன. நேரம் ஆக ஆக, என் மனம் அச்சுழலின் வேகத்தைத் தாங்க முடியாது போகவே, அச்சுழல் என் தொண்டையை அடைத்தது.

அவர் என்னைப் பார்த்தார் ....

நானும் அவரைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"நான் உன்னை ஒன்று கேட்கலாமா!" என்றார்.

"என்ன ....!"

"உனக்குச் சம்மத மிருந்தால்...என்னை..."

"............!"

"என்ன, உண்டு அல்லது இல்லை. ஏதாவது சொல்லேன்!"

அவர் முகத்தில் கவலைக் குறி, மனதில் பரபரப்பு.

நான் மீண்டும் அவரை நோக்கினேன். என்ன சொல்வதென்று புரியவில்லை.

"ஆனால் இந்த உலகம்.........!"



பாடகர்:—எல்லாப் பாட்டும் பாடி விட்டேன். குழந்தை தூங்கமாட்டேன் என்கிறதே!

மனைவி:—மங்களமும் பாடிவிடுங்களேன்! அப்புறம் பாடமாட்டீர்கள் என்று தெரிந்து கொண்டு குழந்தை தூங்கி விடுவான்!

"நாசமாய்ப் போகட்டும். ஓட ஓட அது நம்மை விரட்டும். எதிர்த்து நின்றால் சிதறி ஓடும்...இதற்காகவா நீ பயப்படுகிறாய்!" என்றார்.

"ஆனால் அண்ணாவை ஒரு வார்த்தை கேட்காமல்......!"

"அப்படி யென்றால் நம்முடைய கட்டு முறிந்த மாதிரிதான்!"

"இல்லை, என்ன இருந்தாலும், இதுவரையில் அவன் நிழலில் தங்கி யிருந்தேன். இப்பொழுது அவனை ஒரு வார்த்தை கேட்காமல் செய்வதென்றால் மனம் கேட்கவில்லை. அவன் மறுக்க மாட்டான். எப்படியும் அவனைக் கெஞ்சியோ ...... கதறியோ......!"

"......வேண்டாம், ரேணு......!" என் கையைப் பிடித்துக் கொண்டார் முரளீதரன்.

அப்பிடியினின்று திமிறிக்கொண்டு நகர்ந்தேன்.

அவர் மீண்டும் என்னை நெருங்கினார். நான் பின் வாங்கினேன். அவர் வேகம் அதிகரித்தது. நான் ஓட ஆரம்பித்தேன். பலங் கொண்ட மட்டும் ஓடினேன்,

"ரேணு! நில்லு, நில்லு. ஒரு வார்த்தை...... இதைக் கேட்டுவிட்டுப் போ......!" என்று சொல்லிக்கொண்டே துரத்திக்கொண்டு ஓடி வந்தார்.

நான் ஓடிய வேகத்தில் கால் சறுக்கிக் கீழே விழுந்து விட்டேன்.

* * *

டிங் என்று கடிகாரம் அடித்துவிட்டு அப்பொழுதுதான் ஓய்ந்தது. மணி ஐந்தரை.

என் தூக்கம் கலைந்தது. கண்கள் திறந்து கொண்டன. அதே தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தேன். எப்படித் தூக்கம் வந்தது!

ஐயோ, சொப்பனமா கண்டேன்! என் உடம்பு மயிர்க்கூச்செடுத்தது. ஜிலு ஜிலு வென்று காற்று வீசியது.

அந்த ஜில்லிப்பு வெந்து கொண்டிருந்த என் மனத்தைக் கொஞ்சம் தணித்தது.

பசு மாடுகள், டிங் டிங் என்ற மணி ஓசையுடன் வீதியில் போக ஆரம்பித்தன. பல பல வென்று பொழுது விடிந்து கொண்டிருந்தது.

'ஊம்' என்று இருதயத்தைப் புரட்டிக் கொண்டு ஒரு பெருமூச்சுக் கிளம்பியது. என் கடமைகள் ஆரம்பமாயின......எழுந்து உள்ளே சென்றேன்.

இப்படியும் ஒரு நாள் கழிந்தது.

முப்பதும் எண்பதும்

கடகம்

அன்று காலை அந்தக் கடிதம் வந்தது. எதிர் பாராத செய்தியுடன்தான் வந்திருந்தது. கடிதத்தைப் படித்தபோது என் கண்கள் கலங்கின. என் உள்ளம் வீறிட்டழுதது.

என் ஆருயிர் நண்பன் சங்கரன் மூன்று நாட்களாக அடித்த கடும் சுரத்திற்கு இரையாகிவிட்டான் என்று அந்தக் கடிதம் இந்த ஆறாத துக்கச் செய்தியைச் சொன்னபோது, நான் ஒரே அந்தகாரத்தில் மூழ்கிப் போனேன். இந்தப் பரந்த உலகமே என் முன்னால் இருண்டு கிடந்தது.

அவன் இளம் மனைவியும், பச்சிளம் குழந்தைகளான அவன் மகனும், மகளும், அவனைக் காணாது, தவித்து, திகைத்து நிற்பார்கள். "என் குழந்தைகளின் நன்மைக்காகவே நான் நீண்ட நெடுநாள் வாழ விரும்புகிறேன். அவர்கள் வாழ்க்கையில் சுகப்படுவதையும், மேன்மையுற்று விளங்குவதையும் காணவே ஆசைப்படுகிறேன்" என்று என்னிடம் அடிக்கடி கூறிய சங்கரனுக்கா இந்தக் கதி?

என் மன வேதனைதான் அதிகமாயிற்று.

சங்கரனின் கடைசி முகத்தைக் காண முடியாதவனாய் நான் தொலை தூரத்தில் இங்கு வந்து தங்கி விட்டேன். எங்களிருவருக்கும் கடிதத் தொடர்பு மட்டும் இருந்து வந்தது. சென்ற மாதம் கூட அவனிடமிருந்து கடிதம் வந்தது. எவ்வளவு உற்சாகமாக எதை எதைப் பற்றியோ எழுதியிருந்தான். ஏதேதோ அவன் எதிர்காலத் திட்டத்தைப் பற்றி விவரித்திருந்தான்.

அத்தகைய நண்பனை; அருமைத் தோழனை இனிக் காண முடியாது.

சங்கரன் என் பால்ய சிநேகிதன். கடைசியாக, அவனை விட்டு நான் பிரியும் வரையில், நாங்கள் இணை பிரியாத தோழர்களாக இருந்தோம். மன வேற்றுமை எங்களுக்குள் ஒன்றுமே இருந்ததில்லை. கிராமத்தில், எங்களைப் பார்த்து இரட்டையர்கள் என்று கூடப் பேசிக் கொண்டார்கள்.

சங்கரன் பெரிய குடும்பத்தில் பிறந்தவன். அவனுக்கு மூன்று சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் இருக்கிறார்கள். அவன்தான் கடைக்குட்டி. சொத்துக்கும் குறைவில்லை; நல்ல செழிப்பான, சந்தோஷம் நிலவின குடும்பம்தான். அவன் நன்றாய்ப் படித்திருந்தும், உத்தியோகத்தை வெறுத்துக் கிராமத்தோடு தங்கி விட்டான். கிராமத்தைச் சீர்திருத்துவதுதான் தனது சீரிய கொள்கை என்று அதிலே ஈடுபடச் சித்தமாக இருந்தான். அதற்காகப் பாடும் பட்டான்.

என் நிலையோ அப்படியில்லை. உத்தியோகம் பார்த்தால்தான் அன்றாட ஜீவனம் நடக்கும் என்ற மோசமான நிலையிலிருந்த நான், கிடைத்த உத்தியோகத்தை விட மனமின்றி, பிறந்து பெருமை தந்த ஊரை விட்டு, நெடுந்தூரம் இங்கு வந்திருந்தேன்.

கடைசியாக அவனைப் பிரிந்த அந்த நாளை என்னால் மறக்கவே முடியாது. எங்களுக்குப் பேசவே வாய் வரவில்லை. எங்கள் கண்ணீர் பேசி விடை பெற்றுக் கொண்டது.

ஏனோ தெரியவில்லை? சங்கரன் எழுதிய அந்த நீண்ட கடிதத்தைப் படிக்க வேண்டும் போல் தோன்றுகிறது. படித்தால், இன்னும் என் மனப் புண் அதிகமாகி வேதனைப் படப் போகிறது. அது ஆறப் போவதில்லை.

சென்ற ஆண்டு அவன் தந்தை காலமான செய்தியைத் தெரிவித்திருந்தான். அதற்கு நான் ஆறுதல் கூறி, அனுதாபச் செய்தி அனுப்பி யிருந்தேன். அதைப் பார்த்ததும் அவன் என்ன நினைத்தானோ? ஒரு பெரிய கடிதமாக மீண்டும் எழுதி யிருந்தான்.

கடிதம் பூராவும் அவன் தந்தையைப் பற்றியே இருந்தது. அவர் தொண்டு கிழமாய், கடைசி நாள் வரை ஓயாமல், ஒரு நிமிஷம் கூட ஓய்ச்சல் ஒழிவின்றி, தம் மக்கள் நன்மையை உத்தேசித்து உழைத்ததையும், அவர் குடும்பத்தினரிடம் நடந்துகொண்ட விதத்தைப் பற்றியும், இன்னும் எதை எதையெல்லாம் பற்றியோ மிக உருக்கமாக எழுதியிருந்தான். அதைப் படித்தால் எந்தக் கல் மனசும் கசிந்துருகி, கண்ணீர் வடிக்கும். அவன் அனுபவித்த சொந்த உண்மை அநுபவங்கள் சொல்லில் உருவேறும்போது, அந்த கடிதத்திற்கு இந்தவலிமை இருந்ததுபோலும்.

ஆம், சங்கரன் தந்தை ஒரு லட்சிய மனிதர். அவரைக் கிராமத்தில் போற்றாதவர்கள் யாருமிருக்க மாட்டார்கள். உழைப்பை நம்பியதால்தான், அவரால் தம் மக்களுக்கு வேண்டிய சொத்துக்களை நேர்மையான வழிகளில் சம்பாதிக்க முடிந்தது. அவர் எண்பது ஆண்டுகள் வரை, தொண்டு கிழமாய் வாழ்ந்து விட்டிருந்தார். அவருக்கு வாழ்க்கையில் அலுப்பு கூடத் தட்டிப் போயிருக்கும். பழுத்த பழமாய் ஆனால் மகிழ்ச்சியாகவே அவர் காலம் முடிந்து போயிருந்தது.

இப்படி நீண்ட நெடுநாள் வாழ்ந்து விட்டுப் போன தந்தையின் ஒரு மகன் (சங்கரன்) அற்ப ஆயுளில் போனதுதான் எனக்குப் புரியாத புதிராக யிருந்தது. எத்தனையோ செயல்களை வாழ்க்கையில் சாதிக்க வேண்டிய சங்கரன், மின்னலெனத் தோன்றி மறைந்ததுதான் எனக்கு விந்தையாக யிருக்கிறது.

ஒருவர் எண்பது ஆண்டுகள் இருந்து விட்டுப் போனார். அதே கொடியில் முளைத்த இன்னொருவன் எண்ணி முப்பதே ஆண்டுகள் வாழ்ந்து மறைந்து விட்டான்.

"ஏன், ஏன், ஏன்?"—என்னையே கேட்டுக் கொண்டேன். விடைதான் கிடைக்கவில்லை.



அயர்ந்து சுகமாகத் தூங்குங்கள்!

நம் தேகத்திற்கு அயர்ந்த தூக்கம் மிகவும் முக்கியம். ஏனெனில் தூக்கத்தின் போது இயற்கையானது உடலுக்கும் மூளைக்கும் சக்தியை ஊட்டுகிறது. படுக்கப் போகுமுன் ஒரு கப் ருசி மிகுந்த 'ஓவல்டின்' இயற்கைக்கு இரு விதங்களில் உதவுகிறது. புத்துணர்வைத் தரும்; அயர்ந்த தூக்கத்தைத் தரும். அத்துடன் செலவாகும் சக்தியை சேகரிக்க உதவுகிறது. ஓவல்டின் எல்லா விதங்களிலும் சிறந்தது. அதில் பழுத்த பார்லி மால்ட், ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பால், சிறந்த கொக்கோ, பாஸ்பேட்டுகள், பி&டி விடமின்களும் இருக்கின்றன. உங்கள் கடையில் இந்த ருசி மிகுந்த உணவு பானத்தைக் கேட்டு வாங்குங்கள்; நினைவிருக்கட்டும். அது ஓவல்டின் தானா என்று கவனியுங்கள்!



விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

ஓவல்டின்

உலகில் சிறந்த ஆரோக்கிய பானம்

OV.396



"எட்டு மாதங்களாக எனது கீழ் முதுகுப் பாகத்தில் பொறுக்க முடியாத வலி யிருந்தது. சில சமயங்களில் வலியின் கொடுமையால் என்னால் ஒன்றும் முடியாமலும், மிகுந்த க்ஷீணமாயும் இருந்தது. பிறகு "க்ருஷன்" உபயோகித்துப் பார்த்தேன். இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நான் ஒரு வேற்று மனிதனா யிருக்கிறேன். எனது வலி முழுதுமே விட்டொழிந்து விட்டது.—H.W.S.

மூத்திரக் காய்கள் சரிவரக் கழிவு பதார்த்தங்களை வெளியேற்றாவிடில், ரத்தக் குழாய்களில் விஷச் சத்துக்களில் சேமிக்கப்பட்டு அவை முதுகு வலியை உண்டாக்குகின்றன. "க்ருஷ"னின் ஆறுவித உப்புக்கள் மந்தித்துப் போன மூத்திரக் காய்களை மெதுவாகத் தூண்டி அவற்றைச் சரிவர இயக்கி ரத்தக் குழாய்களை சுத்தமாக்கச் செய்விக்கின்றன. தினந்தோறும் ஒரு சிறு அளவு "க்ருஷன்" உட்கொள்வது உங்களை முதுகு வலியினின்றும் விடுவிக்கும்.

"க்ருஷன்" உங்கள் ஆரோக்யத்திற்கும் ஆனந்தத்திற்கும் உற்ற உதவி

KSM - 6

நிருபர் நித்தியானந்தம்

அக்ஷயம்



நிருபர் நித்தியானந்தத்தைத் தெரியாதவர்கள் இந்தப் பூலோகத்திலேயே யாரும் இருக்க முடியாது. அவர் அவ்வளவு பிரசித்தி வாய்ந்தவர். அசகாய சூரர். அவர் நினைத்தால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை. அவர் மட்டும் என்ன! பொதுவாகப் பத்திரிகை நிருபர்கள் என்னும் பிரகிருதிகளே அவர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தானே!

உங்களுக்கு என்ன காரியம் ஆக வேண்டும்! வில்லை வானமாக விரிக்க வேண்டுமா! வானத்தை வில்லாக வளைக்க வேண்டுமா! மணலைக் கயிறுகத் திரிக்க வேண்டுமா! அல்லது திரித்த கயிற்றை மணலாக்க வேண்டுமா! இதெல்லாம் அவர்களுக்கு மிக மிக இலேசான வேலை. இதைக் காட்டிலும் பலே பேஷான வேலைகளை யெல்லாம் செய்து காட்டும் திறமை வாய்ந்தவர்கள் இந்தப் பத்திரிகைப் பிரதிநிதிகள். பத்திரிகைப் பிரதிநிதிகளின் வர்க்கத்தைச் சிருஷ்டிக்கும் பொழுது பகவான் பரந்தாமனே பரம சிரமப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் இவர்களுக்கு மட்டும் இவ்வளவு சலுகைகளும் உரிமைகளும் அவர் அளித்திருக்கக் காரணம் என்ன!

புகை புகாத இடத்திலும் புகுந்து புறப்படும் திறன் வாய்ந்தவர்கள் இந்தப் பத்திரிகைப் பிரதிநிதிகள். கவர்னர் வீட்டு விருந்தா! அங்கே பத்திரிகை நிருபர்களைப் பார்க்கலாம். மாபெரும் தேசத் தலைவர்கள் யாராவது விமான நிலையத்தில் வந்து இறங்குகிறார்களா! அங்கேயும் இந்தப் பத்திரிகை நிருபர்கள் இருப்பார்கள். இவர்கள் மட்டும் இல்லாவிட்டால் தலைவர் வந்து போகும் விஷயம் யாருக்குமே தெரிய நியாயம் இல்லை அல்லவா! தலைவர்களைத் தலைவர்களாக்கும் தேசப் பணியை இவர்கள்தான் செய்கிறார்கள் என்றால், இவர்களைத் தலைவர்களுக்கெல்லாம் தலைவர் என்று சொல்வதுதானே சாலப் பொருந்தும்! சர்வாந்தர்யாமியான பகவானைக்கூடச் சர்வ வியாபியாகச் செய்யும் இருப்பணி இவர்கள் கையில்தான் அடங்கி இருக்கிறது என்றால் அதிகம் சொல்லுவானேன்!

எங்கேயாவது போகும்பொழுது யாராவது இவர்களைத் தடுத்து நிறுத்தினால் பையிலிருந்து எதையோ எடுத்து நீட்டுவார்கள். அதைக் கண்ட மறு கணமே, தடுத்து நிறுத்தியவர்கள் இவர்களை ராஜாங்க மரியாதையுடன் உள்ளே அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர வைத்து அருகில் அனுமனை நிற்பார்கள்.

நம் பாரதத்தின் பிரதம மந்திரி சென்னைக்கு விஜயம் செய்கிறார் என்றால், அவருடைய முக தரிசனத்துக்காக நாம் காலை எட்டு மணி முதல் மாலை ஆறு மணி வரை தவம் கிடக்கிறோம். வெய்யிலில் காய்கிறோம். மழையில் நனைகிறோம். குளிரில் கஷ்டப்படுகிறோம். அவர் வரும்பொழுது நம்மைக் கூட்டம் நெறித்துத் தள்ளி எங்கேயாவது ஒரு மூலையில் கொண்டு போய்விட்டால், நமக்கு அவருடைய முகதரிசனமேகூடக் கிடைக்காமற் போய் விடுகிறது. அப்பொழுது பிரதம மந்திரிக்குப் பின்னால் பத்திரிகைப் பிரதிநிதிகள் ஜாம் ஜாம் என்று நடை போட்டுக் கொண்டு நடந்து போவதைக் காணும்பொழுது, நாமும் பத்திரிகைப் பிரதிநிதியாகப் பிறக்காமல் போய்விட்டோமே என்றுதான் அங்கலாய்க்கத் தோன்றுகிறது. அதற்கு என்ன செய்வது! அவர் அவர்கள் வந்த வழி அப்படி. பத்திரிகை நிருபராகப் பிறப்பதற்குப் பூர்வ ஜன்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அரச பதவிக்கும் மேலான அந்தப் பதவி இலேசில் கிட்டிவிடக் கூடியதா!

ஆனைப்பட்ட அந்தப் பிரதம மந்திரி பண்டித நேருவே பத்திரிகை நிருபர்களை அழைத்து விருந்து வைத்து அவர்களிடம் அளவளாவுகின்றார். அவர்களுடைய அபிப்பிராயத்துக்குச் செவிமடுத்துப் பெருமதிப்பு கொடுக்கிறார் என்றால், அவர்களிடம் நம்மிடம் இல்லாத ஏதோ ஒரு விசேஷ சக்தி இருக்க வேண்டும் என்றுதானே ஆகிறது!

விட்டெறிந்தாற் போல வெகு அகம்பாவமாகப் பேசும் நட்சத்திர நடிகைகளைக் காண இந்த உலகத்தில் எத்தனை பேர் ஒற்றைக் காலால் நின்று தவம் கிடக்கவில்லை! தவங்கிடந்தால் ஆயிற்று! அவர்கள் விஷயத்தில், 'காலேஜ் படித்



தும் பயனில்லை. கையில் காசு இருந்தும் பயனில்லை' என்றுதானே பாடவேண்டி யிருக்கிறது! ஆனால் தங்களைப் பேட்டி காண இந்தப் பத்திரிகை நிருபர்கள் வரமாட்டார்களா என்று அந்த நக்ஷத்திர நடிகைகள் ஏங்கி நீண்ட மூச்சு, குறு மூச்சு, பெருமூச்சு, சிறு மூச்சு விடுவதெல்லாம் அந்த ஆண்டவனுக்கல்லவா தெரியும்! ஆண்டவனுக்கே தெரியுமோ, தெரியாதோ! அந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு மட்டும் கட்டாயம் தெரியும்.

இதற்கெல்லாம் காரணம் என்ன! இந்தப் பத்திரிகை நிருபர்களிடம் ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டிருப்பதுதான். பெரிய தலைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களுக் கெல்லாம்கூட இந்த நிருபர்களைக் கண்டால் கொஞ்சம் கிலிதான்; அஸ்தியில் ஜுரம்தான். ஏனெனில் அவர்களுடைய அட்டூழியங்களையும் வண்டவாளங்களையும் தோண்டிவிட்டு அதள பாதாளத்தில் அழுத்தி ஆள் இருக்கும் இடமே தெரியாமல் அடித்து அமுக்கிவிடும் சக்தி அவர்களிடம் தானே இருக்கிறது! அதேபோல ஒரு ஆள் முன்னுக்கு வரக்கூடியவர், மக்களின் நலத்திலேயே நாட்டங் கொண்டவர் என்று தெரிந்துவிட்டால், அவர்களை வானவெளிக்கே இட்டுச் சென்று இந்திர சந்திர பதவி அளித்துத் தட்டிக்கொடுத்து ஆளை முன்னுக்குக் கொண்டுவரும் பொறுப்பை



ஏற்றுக் கொள்கிறவர்கள் யார்! இந்த நிருபர்கள் தானே! அநியாய வழியில் செல்ல நினைக்கும் ஆளை ஒரு சொடுக்குச் சொடுக்கி இழுத்து நேர் வழியில் செல்லுமாறு செய்வதும் நியாய வழியில் செல்பவர்களை நேர்மையான பாதையில் நல்ல நோக்கத்துடன் முன்னேறத் தூண்டுவதும் யார் என்கிறீர்கள்! இந்த நிருபர்கள் தான்!

ஒன்றுக்கும் உருப்படாத விஷயத்துக்கு ஒன்பது 'காலம்' தலைப்புக் கொடுத்துத் தமுக்கு அடிக்கும் சில பத்திரிகைகளை நாம் பார்க்கவில்லையா! மிக மிக முக்கியமான விஷயங்களுக்கு ஒரு மூலையில் இடம் கொடுத்துக் கண்களுக்குப் பூதக் கண்ணாடி போட்டுக் கொண்டு தேடும்படி செய்து விடுவதும் இந்தப் பத்திரிகை நிருபர்களின் கையில் தானே இருக்கிறது! இந்தச் செய்கைக்காக நாம் நிருபர்களைக் குறை கூறுவதற்கில்லை. ஏனெனில் இவர்கள் பத்திரிகை முதலாளிகளின் சொல்லுக்குத் தகுந்தபடி ஆடவேண்டி யிருப்பதுதான் அதற்குக் காரணமா யிருக்க வேண்டும். ஆனால் நல்ல இடத்தில் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்து விட்டால், தங்கள் மேதையை உபயோகித்து மிக மிக முன்னுக்கு வந்துவிடும் அபாரத் திறன் குடத்துள் குத்து விளக்காக இவர்களிடம் அடங்கி யிருக்கத்தான் செய்கிறது.

நடன அரங்கேற்றமா! நிருபர்களை அங்கே காணலாம். நாடகமா! நிருபர்களில்லாத நாடகம் பருப்பில்லாத கல்யாணம்தான். சங்கீதக் கச்சேரியா! நிருபர்களை அங்கேயும் பார்த்துக் கொள்ளலாம். மல் யுத்தமா! முதல் வரிசையில் இந்த நிருபர்கள் நிற்பார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன! நிருபர்கள் சகல கலா வல்லவர்களாகவும் சிறந்த ரசிகர்களாகவும் இருப்பதுதான். அது மட்டும் அல்ல; எந்த விஷயத்தையும் கலைக் கண் கொண்டு கண்டு ரசித்துப் பூவைப் பொன்னாக்கிப் பொன்னிலே மணம் ஏற்றும் திறமை பெற்றிருப்பதுதான்.

எதிர் வீட்டு எருமைக் கிடாரி பசுங்கன்று ஈன்ற நிகழ்ச்சி நேத்திரங்களில் •பட்டுவிட்டால், 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!' என்னும் எண்ணத்துடன் பத்திரிகையில் பெட்டிகட்டிச் செய்தியாகப் பிரசுரித்து ரசிக நேயர்களுடன் பங்கெடுத்துக் கொண்டு ரசிப்பவர்கள் யார் என்கிறீர்கள்! இந்தப் பத்திரிகை நிருபர்கள்தானே!

அப்படிப்பட்ட நிருபர் குழாத்திலே சிரோ பூஷணமாக விளங்கியவர் நித்தியானந்தம். அவர் செய்தியைக் கொடுக்கும் விதமே அலாதி. ஒரு சமயம் நாலரை வயதுப் பத்மாவின் நடன அரங்கேற்றம் நடந்தது. அதற்கு நானும் போயிருந்தேன். நித்தியானந்தமும் வந்திருந்தார்.

'தகக், திதக்' என்று நண்டாகக் குதித்த அந்தக் குழந்தையின் நடனம் லய பாவங்களுடன் அதி அற்புதமாக இருந்ததாக மறு நாள் பத்திரிகையில் செய்தி வெளியாகி யிருந்தது. அதைக் கண்ட எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'இதென்ன ஐயா! கேலிக் கூத்தாக இருக்கிறது. உங்கள் பத்திரிகைக் காரர்களுக்குப் பொய்யும் புனை சுருட்டையும் தவிர வேறு ஒன்றுமே தெரியாதோ!' என்று நித்தியானந்தத்தைக் கண்டு கடிந்து கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் உடனே மேல் துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டேன்.

நித்தியானந்தத்தைக் கண்டு கேட்ட பொழுது அவர் அதற்கு என்ன பதில் சொன்னார், தெரியுமா! "பாவம், குழந்தைக்கு என்ன ஐயா தெரியும்! குழந்தைகள் எதையும் அப்படியே இமி

டேட்' செய்யும் திறன் வாய்ந்ததை. பெரிய பெரிய நடன ராணிகள் ஆடும் ஆட்டத்தையும், சொல்லிக் கொடுத்தவர்களின் முறையையும் கண்ட அது அப்படியே காப்பி அடித்திருக்கிறது. அதை இப்பொழுதே மட்டம் தட்டினால் அப்புறம் அது முன்னுக்கு வருவது ஏது! எதற்கும் 'என்கரேஜ்மெண்ட்' கொடுக்க வேண்டும், அப்பா!'' என்றார். அது மட்டும் அல்ல; ''பத்மா ஒரு நாள் நடனத்தில் பெரும் புகழும் பெறுவாள். நான் சொல்கிறது, பலிக்கிறதா, இல்லையா, பார்!'' என்று வேறு சொன்னார்.

அவர் சொன்னது அப்படியே எழுத்துக்கு எழுத்து பலித்து விட்டது. நிருபர் நித்தியானந்தத்தின் தீர்க்க தரிசனத்தை என்னவென்று சொல்வது! எப்படிப் புகழ்வது!

ஓரே வசை புராணமாக இருக்கும் நாடகம் நிருபரின் விமர்சனத்தில் சிக்கியபின் நல்ல உயர்தர சீர்திருத்த நாடகமாக மாறிவிடும். காரணம் என்ன! நிருபர்களின் கையில் இரும்பைப் பொன்னாக்கும் ஏதோ மாய சக்தி இருப்பதுதான்!

கர்த்தப கானம் செய்த காயகர் காயக விவேக சூடாமணியாகப் பட்டம் பெற்று விடுவார், நிருபரின் மேதையின் பலத்தைக் கொண்டு. அப்புறம் ஒன்று அவர் பாடுவதையே நிறுத்தித் தன் பட்டப் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வார். இல்லாவிட்டால் அசுர சாதகம் செய்து நிஜமாகவே அந்தப் பட்டத்துக்குத் தம்மை அருகதை யாக்கிக் கொண்டு விடுவார்.

ஏதாவது ஒரு கூட்டத்துக்கு எண்ணி மூன்று பேர் வந்திருப்பார்கள். அதில் நீங்களே ஒருவராகக் கூட இருந்திருப்பீர்கள். ஆனால் மறுநாள் பத்திரிகையைப் பிரித்தால் இரண்டாயிரம் அல்ல, இந்தியாவின் ஜனத் தொகையைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகவே கூடியிருந்ததாகச் செய்தி வெளியாயிருக்கும். இது யாருடைய கைங்கரியமாயிருக்கும் என்று உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

அதே போலத் தலைமை வகித்த பெரியார் பேச்சை ஆரம்பிப்பது எப்படி என்று புரியாமல் 'காமா சோமா' வென்று இரண்டு வார்த்தைகள் உளறி விட்டு உட்கார்ந்திருப்பார். அதே செய்தி மறுநாள் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் அழகைக் கவனித்தால் நீங்கள் அயர்ந்து போய் உட்கார்ந்து விடுவீர்கள்.

'தலைவர் மேலும் கூறியதாவது' என்று ஆரம்பித்து முன்னமேயே அவர்கள் எத்தனையோ விஷயங்களைப் பேசிவிட்டது போலும் இடம் இல்லாமை காரணமாகச் சுருக்கி வெளியிட்டிருப்பது போலும் பிரமை உண்டாகும் வகையில் செய்திகளை ஜோடித்துக் கொடுத்திருப்பார்கள்.

ஒரு தடவை நிருபர் நித்தியானந்தமே இப்படித் தகவல் அளித்தபொழுது நான் நித்தியானந்தத்தைப் பேட்டி கண்டேன். ''இதற்காகவா இவ்வளவு தூரம் ஓடி வந்தாய்! உன் மூளையை என்னவென்பது! நிருபர் நித்தியானந்தம் ஒரு தகவலைக் கொடுப்பது, அது பொய்ப்பதா! ஒருநாளும் இல்லை. நான் கொடுக்கும் செய்தியை இந்தியாவின் ஜனத்தொகையைக் காட்டிலும் இரண்டு மடங்குக்கு அதிகமான ஜனங்களே படிக்கிறார்கள். அவ்வளவு பேரும் ஒரு இடத்தில் வந்து கூடுவதென்றால் எவ்வளவு தொல்லை! எவ்வளவு கால விரயம்! போலீஸுக்கு வேறு வேலை! இதையெல்லாம் இல்லாமற் செய்த என்னைப் பொய்யன் என்று சொல்ல வந்து விட்டாயோ!'' என்றார்.

''நீங்கள் சொல்வது நியாயந்தான். ஆனால் தலைமை வகித்த பெரியார்...'' என்று ஆரம்பித்தேன். அதற்குள்ளாக அவரே குறுக்கிட்டு, ''அப்பொழுது அவர் பேசியது என்னவோ குறைவு தான். பேச முடியாமல் தவித்ததும் உண்மை தான். ஆனால் அந்த நேரத்தில் அவர் முகத்தில் தோன்றிய பாவங்களை நீ கவனித்திருந்தாயானால், அவர் இதுவும் சொல்லியிருப்பார், இன்னமும் சொல்லி யிருப்பார் என்பதை உணர்வாய். ஆனால் நீதான் பத்திரிகை நிருபராகப் பிறக்கவில்லையே! என்ன செய்வது! பத்திரிகை நிருபராகப் பிறந்தால் அல்லவா உள்ளத்து உணர்ச்சிகளைப் படித்து உணர முடியும்!'' என்றார்.



அதைக் கேட்ட பின் நான் மட்டும் என்ன, யாருமே அவருடைய கற்பனா சக்திக்கும் மேதைக்கும் அடி பணிந்துதானே ஆகவேண்டும்!

அப்பேர்ப்பட்ட நித்தியானந்தம் ஒருவர் வீட்டுக் கல்யாணத்துக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். தலைக்குத் தலை நித்தியானந்தத்தைக் கவனிக்கத் தலைப்பட்டு விடுவார்கள். மாப்பிள்ளையைக் கவனிக்க ஈ காக்கை இராது. மாப்பிள்ளை இருக்கும் இடத்தைக் குத்து விளக்கு ஏற்றி வைத்துத் தேடிப் பார்க்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டு விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதற்குக் காரணம் என்ன! இரண்டு வரியாவது அந்தக் கல்யாணத்தைப் பற்றிய செய்தி அவர் பத்திரிகையில் வெளி வராதா என்பதுதான். அப்படி வெளி வந்தால்தான் அவர்களுக்குத் தாம் பிறவி யெடுத்ததன் பயனைப் பெற்றுவிட்டதாகத் தோன்றும். அந்தப் பயனை பெறவேண்டி அவர்கள் நிருபர் நித்தியானந்தத்துக்கு மூச்சு முட்டிப் போகும்படி மரியாதை செய்வதில் என்ன தவறு!





"என்ன ஸார்? பம்பாய்க்குப் போயிருந்தீர்கள் என்று கேள்விப் பட்டேன்! ஹிந்தி பாஷை புரியாமல் ரொம்பக் கஷ்டப் பட்டீர்களோ?"

"ஹூ! நான் ஏன் ஸார் ஹிந்தி தெரியாமல் கஷ்டப் படறேன்! அவா தான் நான் என்ன பேசறேன்னு புரியாமல் கஷ்டப்பட்டார்கள்!"

நித்தியானந்தரும் தமக்குக் கிடைத்திருக்கும் அந்தப் பெருமையையும் மதிப்பையும் எண்ணிப் பூரிப்பு எய்தி வந்தார். அவர் எங்கே போக விரும்பினாலும் ராஜபாட்டையாக வழி திறந்து விடப்படுவதையும், அமோகமான வரவேற்பும் மரியாதையும் கிடைத்து வருவதையும் கண்ட பொழுது அவருக்கே தாம் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்று விட்டதாகத் தோன்றியது.

ஆனால் பிறவி யெடுத்ததன் பயன் இந்த வெறும் பேரும் புகழும் மட்டுந்தானா! சற்றுத் தீர உள் புகுந்து யோசித்துப் பார்த்தால் தெரியும், இல்லை யென்று! பிறவி எடுத்ததன் இறுதிப் பயன் மரணம் அல்லவா! வாழ்க்கையின் நடுவிலே நாம் அடையும் இன்ப துன்பங்கள், சுக துக்கங்கள், கீர்த்தி அபகீர்த்திகள் யாவும் இடைக் காலத்து ருசிக்கக்கூடிய பயனே யொழிய, இறுதிப் பயன் ஆகுமா! சாவாத மரணம் மட்டுமே அல்லவா இறுதிப் பயன் என்று கூறத் தகுந்தது!

ஒரு நாள் ஸ்ரீருபர் நித்தியானந்தம் அந்தப் பயனையும் அதாவது இறுதிப் பயனான மரணத்தையும் பெற்று விட்டார். காலதேவனின் கைக்குள்ளே சிக்கிய அவருடைய ஆத்மா இந்தப் பூதவுடலை விட்டுப் பிரிந்தது; புகழுடம்பை எய்தியது. பூலோகத்தில் அவருடைய உடல்தான் மரித்ததே ஒழியப் புகழ் உடல் இன்னும் பன்மடங்கு புகழ் பெற்றுப் பிரசித்தி அடைந்தது.

பூலோகத்தைப் பிரிந்து சென்ற நித்தியானந்தம் நேரே சொர்க்கத்தை அடைந்தார். வாசலில் நின்று கொண்டிருந்த காவலாளியின் வாயிலிருந்து "உள்ளே போகக் கூடாது!" என்று கண்டிப்பான குரல் வந்தது.

தம் ஆயுளிலேயே இம்மாதிரி சொல்லைக் கேள்விப்படாத நித்தியானந்தத்துக்கு ஏக அதிர்ச்சியாகி விட்டது. "நான் யார், தெரியுமா!" என்றார் சற்றுக் கண்டிப்பான குரலில்.

"யாரா யிருந்தால் என்ன! உள்ளே போகக் கூடாது என்றால் போகக் கூடாதுதான்!"

நித்தியானந்தத்தின் கை அவரை யறியாமலே தம் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துடன் சட்டைப் பையைத் துழாவியது. அப்பொழுதுதான் அவருக்கு அந்தச் சக்தியைத் தாம் இழந்துவிட்டோம் என்னும் விஷயம் புலனாகியது.

என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு அவமானப்பட்டுத் திரும்ப வேண்டிய நிலைமை தமக்கு ஏற்பட்டு விட்டதை எண்ணி மனம் புழுங்கிய அவர் தலையைச் சொரிந்துகொண்டு திரும்பினார். இருந்தாலும், "இந்தச் சொர்க்கத்தையும் சொர்க்கத்தில் உள்ளவர்களையும் ஒரு கை பார்த்து விட்டு மறு காரியம் பார்க்கிறேன்" என்று மனத்துள் கருவிக்கொண்டே அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார்.

அவருக்கு உடனே நரகத்தின் நினைவு வந்தது. 'சொர்க்கத்தில்தான் நமக்கு அநுமதி கிடைக்கவில்லை. நரகத்தில் கூடவா நம்மை அநுமதிக்க மாட்டார்கள்!' என்று எண்ணியவர் விடு விடுவென்று நரகத்தை நோக்கி நடந்தார்.

நரகத்து வாசலிலும் கட்டுக் காவல் மும்முரமாக இருந்தது. என்ன இருந்தாலும் இங்கே உள்ளே போக சிரமம் இராது என்று எண்ணியவாறு வாசலை அடைந்த அவருக்கு அங்கேயும் ஒரு ஆச்சரியம் காத்துக் கிடந்தது. நரகத்துக் காவலர்களும் அவரை உள்ளே அநுமதிக்க மறுத்தனர்.

நித்தியானந்தத்துக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இவ்வளவு நாட்களும் அவருக்கிருந்த மரியாதை என்ன, கௌரவம் என்ன! அவ்வளவும் இப்படிக் கப்பலேறி விடவே, அவர் அவ்விடத்தை விட்டுத் தள்ளாடித் தள்ளாடிக் கால் போன வழியே நடந்தார். சிறிது தூரம் சென்றதும் அவர் கண்களுக்கெதிரே நட்சத்திர லோகம் ஒன்று தென்பட்டது. அடுத்த கணமே அவர் மூளையிலும் நட்சத்திரமான யோசனை ஒன்று பளிச்சிட்டது.

உடனே அவர் நட்சத்திர லோகத்தில் சென்று குடியேறி விட்டார். சில தினங்களுக்கெல்லாம் அவர் யோசனை செயலாக உருவாகியது. 'காலகேது' என்னும் பெயரில் ஆரம்பமாகிய அவருடைய பத்திரிகை, இரண்டு இதழ்கள் வெளியாவதற்குள்ளாகவே, சொர்க்கத்திலும் நரகத்திலும் மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணிவிட்டது. 'சொர்க்கத்திலும் இரும்புத் திரை' என்ற தலைப்பில் அவர் சொர்க்க வாழ்வைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து எழுதியிருந்தார். 'நரகத்தில் நரன் படும்பாடு' என்று தலைப்புக் கொடுத்து நரக வேதனையை அப்பட்டமாக அலசி விளாசியிருந்தார்.

இந்த இரண்டு இதழ்களும் வெளியான மறு தினமே சொர்க்கத்துப் பிரதிநிதிகளும், நரகத்துப் பிரதிநிதிகளும் நட்சத்திர லோகத்தில் இருந்த அவருடைய காரியாலயத்து வாசலில் வந்து அவரைப் பேட்டி காணத் தவங் கிடந்தனர். யாரை உள்ளே விட அவர்கள் ஒரு நாள் மறுத்தார்களோ, அவரையே பேட்டி காண அரும்பாடுபட வேண்டியதாகி விட்டது. பேட்டி கண்ட பிரதிநிதிகள், தங்கள் தங்கள் லோகத்துக்கு அவசியம் விஜயம் செய்ய வேண்டும் என்று காலில் விழாத தோஷமாக மன்றாடிக் கேட்டுக் கொண்டனர்.

இந்தத் தடவைப் பத்திரிகைப் பிரதிநிதிகளின் அநுமதிச் சீட்டுக்கூட இல்லாமலே நித்தியானந்தம் சொர்க்கத்தையும் நரகத்தையும் பார்த்து வரப் புறப்பட்டார். அப்பொழுது அவர் முகத்தில் இலேசாகப் புன்னகை மலர்ந்தது. 'என்னை யார் என்று எண்ணினீர்கள்! நான் ஸ்ரீருபர் நித்தியானந்தமா, கொக்கா!' என்று சொர்க்கத்துப் பிரதிநிதிகளையும் நரகத்துப் பிரதிநிதிகளையும் பார்த்து ஏளனமாகக் கேட்பது போலிருந்தது அவர் புரிந்த அந்தப் புன்முறுவல்!


வரண்ட,
எரிச்சலுள்ள
இருமல்களுக்கு
Alembic
GLYCODIN
க்ளைகோடின்-
டெர்ப்-வசாகா

சர் ஜீவன் சிலாஜித் லேகியம்

எல்லா காலங்களிலும் பலத்தை அளிக்கிறது

இது ஹிமாலய மலைகளிலிருந்து எடுக்கப்பட்ட சிறந்த லேகியம்



இதை உபயோகிப்பதால் தேக புஷ்டியும் ரத்த விருத்தியும் ஏற்படுவதுடன், வயிற்றுவலி, பசியின்மை, க்ஷயம், இருமல், மலச்சிக்கல், வெகுமூத்திரம், வாய்வு, மூலம் முதலிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகும்.

மாணவர்கள் ஞாபக சக்தி பெற்று சுறுசுறுப்படைவார்கள். வயோதிகர்கள் பலம் பெருவார்கள். ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல ரோகங்களும் தீரும். குழந்தைகள் ஆரோக்கியமடைவார்கள்.

விலை: 44 நாட்கள் டப்பி ரூ. 5—4—0 } தபால் செலவு இனும்
22 நாட்கள் டப்பி ரூ. 3—4—0

நீலகிரி டிப்போ, அரிசி பேட்டை சவுக் :: பெங்களூர் சிடி

NILGIRI DEPOT., AKKIPET SQ., BANGALORE CITY



டன்லப்

வெகுகாலம்

உழைக்கும்





தலை வலியா?

விரைவில் 2 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் சாப்பிடவும்

ASPRO



நானா பைத்தியக்காரன்!



பரிசுக் கதை : இனேஷியோ மதாஸ் (போர்ச்சுகல்) மொழிபெயர்ப்பு : **வாஞ்சி**

நீதிபதியின் வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவர் கூறிய வார்த்தைகளை நான் சிறிதும் நம்பவில்லை.

இந்த வேடிக்கையைக் கேளுங்கள்! நான் பைத்தியக்காரனும்! எனக்குச் சித்த சுவாதீனம் இல்லை என்று நீதிபதிதான் சொன்னார்!

அவர் கூறியது உண்மையாயின், நான் யாரும் கண்டு பிடிக்க முடியாத விதத்தில் அவ்வளவு ஒழுங்காகக் காரியங்களைச் செய்திருப்பேனா? நான் உண்மையிலேயே பைத்தியக்காரனாக இருந்தால், நீதிபதியின் வார்த்தைகளைக் குறித்து இப்படியெல்லாம் என் மனத்தை அலட்டிக் கொள்வேனா?

ஒரு பைத்தியக்காரனுக்கு, தான் பைத்தியக்காரன் என்பது தெரியுமா? தனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளும் சக்தி அவனுக்கு உண்டா?

என் மனத்தில் எழும் மேற்படி கேள்விகளுக்குச் சரியான பதில் அளிக்கக் கூடிய படிப்பு எனக்கு இல்லை. எனினும், அந்தக் கேள்விக்குப் பதில் 'ஆம்' அல்லது 'இல்லை' இவ்விரண்டில் எதுவாக இருந்தால் என்ன? அதனால் என்னுடைய தற்போதைய நிலையில் எவ்வித மாறுதலும் ஏற்படப் போவதில்லை.

இருந்தாலும் என் மனத்துக்குச் சமாதானம் ஏற்பட வேண்டாமா? என்னைப் பைத்தியக்காரன் என்று கூறுவது சுத்தத் தவறு என்பதுதான் என் அபிப்பிராயம்.

யாருக்குப் பைத்தியம்? எனக்கா? ஏன் அப்படிக் கூறுகிறார்கள், தெரியுமா? நான் ஒரு மனிதனைக் கொன்று விட்டேன் என்பதற்காகத்தான். அன்று நான் இருந்த நிலைமையில் வேறு எவனாக இருந்தாலும்,-அவன் பைத்தியக்காரனாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, என்னைப் போலவேதான் நடந்து கொண்டிருப்பான்.

என்னிடம் சில விசித்திரமான குணங்கள் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன். எனக்கு இடி, மழை என்றாலே பிடிக்காது. அரட்டை அடிப்பது, வள வள என்று ஓயாமல் பேசுவது, இதெல்லாம் எனக்குப் பிடிக்காதுதான். இருண்ட, அமைதியான இடத்தையே நான் விரும்புகிறேன் என்பதும் உண்மை தான். அதற்காக எனக்குப் 'பைத்தியக்காரன்' என்ற பட்டம் சூட்டிவிடலாமா?

* * *

எங்கள் இருவரில், அவன் தான் பெரிய குற்றவாளி என்பது என் கருத்து. தன்னிடம் ஏராளமாகப் பணம் இருப்பதாக அவன் ஏன் என் எதிரில் ஜம்பம் அடித்துக் கொண்டான்? நான் அவனை ஏதாவது கேட்டேனா? இல்லவே இல்லை. தன்னிடமிருக்கும் தொகையை அவனாகத்தான் விளம்பரம் செய்து கொண்டான். "இதோ என் பையில் என் ஆஸ்தி முழுதும் இருக்கிறது" என்று அவன் என்னிடம் தன் மார்பைத் தட்டிக் காட்டினான்.

அன்று இராத்திரி யாகிவிட்டதால், அவன் அடுத்துள்ள கிராமத்துக்குப் பணத்துடன் தனியாகச் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும் தன்னிடம் பெரும் தொகை இருப்

பதை அவன் என்னிடம் சொல்லி யிருக்க வேண்டாம் அல்லவா?

அவனைக் காட்டிலும் நான் பலசாலி என் பதையும், அந்தச் சமயம் என்னுடைய ஹோட்டலில் எங்கள் இருவரைத் தவிர வேறு யாருமே இல்லை என்பதையும் அவன் கவனிக்காமலா இருந்திருப்பான்?

அவன் ஒரு துரதிர்ஷ்டசாலி. அவனது துரதிர்ஷ்டத்துக்கு நானா பொறுப்பாளி? அன்று நான் கொடுத்த இரண்டு புட்டிச் சாராயத்தையும் அவன் எதற்காகச் சாப் பிட்டான்? அவன் அதைச் சாப்பிடாமல் இருந்தால், ஒரு வேளை அவன் அந்தக் கதிக்கு ஆளாகாமல் தப்பி யிருக்கலாம்.

குடி மயக்கத்தில் அவன் தன் உடைகளைக் கழற்றி வைக்காமல் படுக்கையில் அப்படியே பொத்தென்று விழுந்து விட்டான்.

அப்போதுதான் திடீரென்று என் மனத் தில் துர் எண்ணம் வந்து புகுந்து கொண்டது.

பையில் பெருந்தொகை வைத்துக் கொண் டிருப்பவன் விளம்பரப் படுத்திக் கொள்ள லாமா? யாருக்கும் தெரியாமல் இரகசியமாக அல்லவா வைத்துக் கொண்டிருக்க வேண்டும்?

*   *   *

விதி வேலை செய்யத் தொடங்கியது. "அதோ பெருந் தொகை இருக்கிறது. அது உன்னைச் சேர வேண்டியதுதான். இந்தச் சந்தர்ப்பத்தை நீ கைவிட்டு விட்டால் உன்னைப்போல் மடையன் இந்த உலகில் யாருமே இருக்க மாட்டான்" என்று விதி என்னைத் தூண்டியது.

அவன் என் ஹோட்டலுக்குள் நுழைவதை யாராவது பார்த்திருந்தால்......? இது என்ன மடத்தனம்! குளிரும் காற்றும் கடுமையாக இருக்கும் அந்தகைய இராத்திரியில் இரண்டு மணிக்கு யார்தான் விழித்துக் கொண்டிருப்பார்கள்?

அவன் படுத்துக் கொண்டிருந்த அறையின் வாசற்படி வரையில் இரண்டு மூன்று தடவை போய்விட்டு வந்தேன். உள்ளே நுழைவதற்குத் தைரியம் ஏற்படவில்லை.

அவன் அறையின் உள்ளே தாளிட்டுக் கொண்டு படுத்திருக்கக் கூடாதா? குடி மயக் கத்தில் தாளிடக்கூட மறந்து விட்டான். எல்லாம் விதியின் செயல்தான்!

கடைசியில் துணிந்து அறைக்குள் சென் றேன். அவன் மல்லாந்து படுத்த வண்ணம், உலகத்தையே மறந்து குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

அவன் பைக்குள் இருந்த தொகை என்னைப் புன்முறுவலுடன் வரவேற்பது போலவே இருந்தது. உடனே என்னை நான் மறந்தேன்.

பணத்தின் மீதுள்ள பேராசை என் கண் களை மறைத்துவிட்டது. கட்டிலுக்குக் கீழே கிடந்த தலையணையை எடுத்து அவன் முகத் தின் மீது போட்டு என் பலம் முழுவதையும் உபயோகித்து அழுத்திப் பிடித்துக் கொண் டேன். அவன் மூச்சுத் திணறினான்.



சில நிமிஷ நேரம் அவனது கால்களும் கைகளும் வலித்துக் கொண்டன. பிறகு சிறிது சிறிதாக ஓய்ந்துவிட்டன. அதன் பின் அவன் எழுந்திருக்கவே இல்லை.

அவனது சட்டைப் பையில் இருந்த தொகையைக் கையில் எடுத்துக் கொண் டேன். அதில் கரன்ஸி நோட்டுகளைத் தவிர வேறு சில காகிதங்களும் இருந்தன. ஒரு காகிதத்துக்குள் சில மணிகள் வைக்கப்பட் டிருந்தன. அவை, அறுந்து போன ஜப மாலையின் மணிகளாக இருக்கலாம்.

கரன்ஸி நோட்டுகளைத் தவிர மற்றவை களை அவனுடைய சட்டைப் பைக்குள்ளேயே திரும்பவும் வைத்துவிட்டேன்.

அதன் பின் சவத்தைத் தூக்கிச் சென்று என் ஹோட்டல் தோட்டத்தில் உள்ள எருக் குழியில் போட்டேன். சில தினங்களுக்கு முன்தான் அது வெட்டப் பட்டிருந்தது. எனவே, மேலே நிறைய மண் குவிந்து கிடந் தது. அந்த மண்ணைச் சவத்தின் மீது தள்ளி, யாருக்கும் எவ்விதச் சந்தேகமும் ஏற்படமுடி யாத விதத்தில் குழியைப் பூமி மட்டத்துக்கு நன்றாகத் தூர்த்து விட்டேன்.

அன்று என் செய்கையைக் குறித்து எனக்கே ஆச்சரியமாக இருந்தது. யாதொரு பீதியுமின்றி எவ்வளவு சாவதானமாகக் காரி யத்தை முடித்து விட்டேன்!

யாராலும் கண்டு பிடிக்க முடியாத, ஓர் உளவும் தெரியாத குற்றம் என்று வர்ணிக்கப் படுவதை நான் கேள்விப்பட்டது உண்டு. இருந்தாலும் என்னைப் போல் அவ்வளவு



சாமர்த்தியமாக, எவராலும் கண்டு பிடிக்க முடியாத குற்றத்தைச் செய்திருக்க முடியாது.

பிறகு நான் அவன் இருந்த அறைக்குச் சென்று படுக்கை முதலியவற்றை ஒழுங்காகப் போட்டேன். அங்கு அவனது தோல் பெட்டி இருந்தது. அதைத் திறந்து பார்த்தேன்.

அந்தப் பெட்டிக்குள் விலை யுயர்ந்த சாமான் எதுவும் இல்லை. அவனது உடைகளும், அவன் சட்டைப் பையில் இருந்ததைப் போன்ற சில மணிகளும் மாத்திரம்தான் இருந்தன. அழகான புஷ்பச் செடிகள் அடங்கிய படம் ஒன்றும் அதில் இருந்தது.

அதை யெல்லாம் பெட்டிக்குள்ளேயே வைத்து மூடினேன். இராத்திரியே அந்தப் பெட்டியை எடுத்துச் சென்று அருகில் இருக்கும் ஆற்றில் வீசி எறிந்தேன்.

சிறிது நேரம் அந்தப் பெட்டி மேலே மிதந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீருக்குள் சென்று மறைந்து விட்டது.

* * *

மறு நாள் பொழுது விடிந்ததும் நான் பணத்தை எண்ணிப் பார்த்தேன். அடுத்த தெருவில் உள்ள அந்த வீட்டை விலை கொடுத்து வாங்குவதற்குப் போதிய தொகை அதில் இருந்தது. பல வருஷங்களாக மேற்படி வீட்டை வாங்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. இப்போதுதான் அதற்கு எதிர்பாராத விதத்தில் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த வீட்டை நான் வாங்க வேண்டும் என்பதற்காகவே விதி அவனை என் ஹோட்டலில் கொண்டு வந்து சேர்த்ததோ என்று எனக்குத் தோன்றியது!

ஒரு பைத்தியக்காரனால் யாருக்கும் எவ்வித உளவும் தெரியாமல் இவ்வளவு சாமர்த்தியமாகக் குற்றத்தைச் செய்ய முடியுமா? எனவே, நான் பைத்தியக்காரன் அல்ல. என்னைப் பைத்தியக்காரன் என்று நீதிபதி கூறியது பெரும் தவறாகும்.

அதோ பாருங்கள்! இந்தச் சிறைக் காவற்காரன் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு என்னிடம் பயமோ அல்லது அனுதாபமோ இருப்பதாகத் தெரியவில்லை. நான் உண்மையிலேயே பைத்தியக்காரனாக இருந்தால், அவன் என் விஷயத்தில் இப்படி அலட்சியமாக இருப்பானா?

* * *

யாதொரு அசம்பாவிதமு மின்றி நாட்கள் சென்று கொண்டிருந்தன. என் சந்தோஷத்தையும் மன அமைதியையும் கெடுக்கும் சம்பவம் எதுவும் நிகழவில்லை. வழக்கம் போல் என் ஹோட்டலுக்கு ஜனங்கள் வந்து கொண்டுதான் இருந்தார்கள். எனவே அன்றொரு நாள் இரவு நிகழ்ந்த சம்பவத்தை நான் மறக்கத் தொடங்கினேன்.

இவ்வித மிருக்கையில், திடீரென்று ஒரு நாள் மீசைக்காரர் ஒருவர் என் ஹோட்டலுக்கு வந்து என்னிடம் ஒரு 'போட்டோ' படத்தைக் காட்டினார். அந்தப் படத்தில் உள்ளவரை நான் எப்போதாவது பார்த்தது உண்டா என்று கேட்டார்.

நான் எவ்வளவு தைரியசாலி என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்! அந்தப் படத்தைப் பார்த்த என் முகத்தில் எவ்வித பீதியோ, மாறுதலோ ஏற்படவில்லை; என் ஹிருதயம் படபடவென்று அடித்துக் கொள்ளவில்லை; நாக்கு குழறவில்லை.

நான் உறுதியான குரலில், "அந்தப் படத்தில் உள்ள மனிதரை நான் பார்த்ததே இல்லை" என்று சாதித்தேன். வந்த மனிதர் இரகசிய போலீஸ் அதிகாரி என்பது பிறகுதான் எனக்குத் தெரிந்தது. அவர் சிறிது நேரம் என்னுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சென்றார். நான் கூறியதை அவர் அப்படியே நம்பி விட்டதாக எனக்குத் தோன்றியது. கடைசியாக அவர் தோட்டத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்றார். எனினும் தோட்டத்தில் உள்ள எதுவும் அவர் கவனத்தைக் கவரவில்லை.

போலீஸ் அதிகாரி வந்து போனதிலிருந்து என்னை இனம் தெரியாத பீதி ஆட்கொண்டது. அதிலிருந்து நான் தோட்டத்துக்குச் செல்லுவதையே நிறுத்தி விட்டேன். தோட்டத்துக்குள் யாரும் செல்ல முடியாதபடி கதவில் ஆணி வைத்து அடித்து விட்டேன்.

ஒரு நாள் என் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த சிலர், சமீபத்தில் உள்ள

ஆற்றி லிருந்து போலீஸாருக்கு ஒரு தோல் பெட்டி அகப்பட்டதாகக் கூறினார்கள். அவர்கள் கூறியதை நான் சிறிதும் லட்சியம் செய்யாதவன் போல் இருந்தேன்.


மறு நாள் அதே மீசைக்காரர் என் ஹோட்டலுக்கு மறுபடியும் வந்தார். முன் தடவை இருந்ததைக் காட்டிலும் இந்தத் தடவை அவரது முகம் மிகவும் கடுமையாக இருந்தது.

அவர் இந்தத் தடவை என்னை யாதொரு கேள்வியும் கேட்கவில்லை. பேசாமல் மௌனமாக என் ஹோட்டலைச் சுற்றிப் பார்த்தார். ஹோட்டலில் உள்ள அறைகளை யெல்லாம் பரிசோதனை செய்தார்.

கடைசியில் அவர் தன் சட்டைப் பையிலிருந்த ஒரு காகிதப் பொட்டணத்தை எடுத்துப் பிரித்தார். அதில் வைக்கப்பட்டிருந்த சில மணிகளை என்னிடம் காட்டி, "இவற்றை நீங்கள் இதற்கு முன் எப்போதாவது பார்த்தது உண்டா?" என்று கேட்டார்.

யாரோ சொல்லி வைத்தாற்போல் அவர் அந்தக் கேள்வி கேட்டது என்னை என்னவோ செய்தது. உடனே என் தொண்டையை யாரோ அடைப்பது போல் தோன்றியது. வாயிலிருந்து வார்த்தை வெளி வரவில்லை. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, "இல்லை" என்று துணிந்து கூறினேன். எனினும் 'இல்லை' என்று நான் கூறியது 'ஆம்' என்று கூறுவதுபோல் என் செவிகளில் விழுந்தது!

மீசைக்காரர் சில விநாடி நேரம் என்னையே ஒரு விதமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். கடைசியில் அவர் தன்னுடன் வரும்படி என்னிடம் கூறி விட்டு, நேராகத் தோட்டத்தை நோக்கிச் சென்றார்.



"என்னங்க! நம்ம சாரி 'ஸில்வர் ஜூப்லி' கொண்டாடப் போகிறார். தெரியுமா உங்களுக்கு?"

"ஏங்க! என்ன இருபத்தைந்து வருஷமாக ஒரே கம்பெனியிலே வேலை செய்தாரா, என்ன?"

"அட நீங்கள் ஒரு பக்கம்! அவரு இதோடே இருபத்தைந்து இடத்திலே வேலை பார்த்திருக்கிறாராம். அதைத்தான் கொண்டாடுகிறார்!"

தோட்டத்தின் கதவை யாரும் திறக்க முடியாமல் ஆணி போட்டு அறைந்திருந்தேன் அல்லவா? அவர் அந்தக் கதவையே சிறிது நேரம் பார்த்தார். பிறகு என்னையும் வெறிக்கப் பார்த்தார்.

பின்னர் சுத்தியலை எடுத்து வரும்படி என்னிடம் கூறினார். நான் சுத்தியலை எடுத்து வந்ததும், அவரே ஆணிகளைப் பிடுங்கி விட்டுக் கதவைத் திறந்தார்.

இருவரும் தோட்டத்துக்குள் சென்றோம். தோட்டம் இருந்த நிலைமை எனக்கே ஆச்சரியமாக இருந்தது. தோட்டத்தை நான் பார்த்து இரண்டு மாதங்களாகி விட்டன அல்லவா? தோட்டத்துக்குள் புல்லும் செடிகளும் ஏராளமாக மண்டிக் கிடந்தன.

என்னை அறியாமல் என் கண்கள் எருக் குழியை நோக்கிச் சென்றன. எருக் குழி இருந்த இடமே தெரியவில்லை. அதன் மீது செடிகள் வளர்ந்திருந்ததைக் கண்டதும், என் பீதி மறைந்தது. எருக் குழியை முற்றிலும் செடிகள் மறைத்துக் கொண்டிருந்ததால் யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லை என்று எண்ணினேன்.

திடீரென்று போலீஸ் அதிகாரி எருக் குழிக்கு அருகில் சென்றபோது, எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அப்போதுதான் என் தலையைச் சுழல வைத்த ஒரு காட்சியை நான் கண்டேன். அதாவது எருக் குழி மீது சில செடிகள் நீண்ட காம்புகளுடன் கூடிய புஷ்பங்களுடன் தனியாக நின்றன.

போலீஸ் அதிகாரி தமது பையிலிருந்த ஒரு படத்தை எடுத்தார். அந்தப் படம் ஹோட்டலில் இறந்தவரின் பெட்டியில் இருந்த புஷ்பச் செடியின் படம்தான். எருக் குழியில் வளர்ந்திருந்த செடிகளில் இருந்த புஷ்பங்கள் அந்தப் படத்தில் உள்ளவற்றைப் போலவே தத்ரூபமாக இருந்தன.

நான் ஏதோ ஜபமாலையில் உள்ள மணிகள் என்று நினைத்தேன் அல்லவா? அது மணிகள் அல்ல, மேற்படி புஷ்பச் செடிகளின் விதைகள்தான். எருக் குழியில் புதையுண்டவனின் சட்டைப் பையில் இருந்த விதைகள் அப்படி முளைத்திருந்தன. அவனது கைப் பெட்டியில் இருந்தவை அதே விதைகளும் மேற்படி புஷ்பச் செடிகளின் படமும்தான். அவற்றை அவன் சொந்த உபயோகத்துக்கு எங்கிருந்தோ வாங்கிச் சென்றான் போலும்.

பிறகு காரியம் வெகு வேகமாக நடந்தது. போலீஸ் அதிகாரி என்னைக் கொண்டே அந்த இடத்தைத் தோண்டச் செய்தார். மாண்டவனின் சவம் அதிலிருந்து அகப்பட்டது.

மாண்டவன் என்மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டான்! பூமியில் புதையுண்ட அவன் புஷ்பச் செடி உருவமாக முளைத்து வந்து, "என்னைக் கொன்றவன் இவன்தான்!" என்று என்னைப் போலீஸ் அதிகாரிக்குக் காட்டிக் கொடுத்து விட்டான்!

மறு நாள் காலையில் கோவிந்தன் கொலையுண்ட செய்தி ஊர் முழுவதும் பரவியது. கோவிந்தனின் தகப்பனர் நடேச உடையாரும் மற்ற சுற்றத்தார்களும் கோவிந்தன் கொலையுண்டு கிடந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டனர். குன்னத்தூர் பட்டக்காரர் திருவேங்கட உடையாரும் தன் பேத்தி மாதவியுடன் அந்த இடத்திற்கு வந்தார். தாத்தாவிற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மாதவிக்குக் கோவிந்தன் கொலையுண்டு கிடந்த கோரக் காட்சி பயங்கரமானதாய்த் தானிருந்தது. அவள் சிலைபோல் அசையாது நின்று விட்டாள்.

"இது ரொம்பக் கோரம், நடேசா! மகாக் கொடூரம்! வர வர உலகமே கெட்டுப் போச்சு. இதை யெல்லாம் போலீஸ்காரர்கள் அடக்காமல் எப்படி விட்டு வைத்திருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. என் பேத்தி மாதவிக்கு இந்த மாதிரி தன் அத்தான் இறந்து போனதில் எவ்வளவு துக்கம் இருக்கும் என்று சொல்ல முடியாது. அவளும் அவனும் அவ்வளவு சிநேகிதம்" என்றார் பட்டக்காரர் துயரத்துடன்.

அங்கு நின்று கொண்டிருந்த ஆனந்தன் மாதவியின் வெளுப்படைந்த முகத்தைப் பார்த்தான். அவள்கண்களில் எல்லையற்ற துயரச் சாயல் வீசியதைக் கவனித்தான். முதல் நாள் இரவு அந்தக் கொலையை அவள்தான் செய்திருக்க வேண்டும் என்று எண்ணியது தவறு என்று எண்ணித் தனக்குள் வருந்தினன். உண்மையாக அவள் அந்தத் துணிகரமான காரியத்தைச் செய்திருப்பாளாயின், அவளுடைய நிலை அப்பொழுது அப்படி இருக்குமா! சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஐந்தாறு ஜவான்கள் புடை சூழ அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். இன்ஸ்பெக்டர் பெருமிதத்துடன் பட்டக்காரரையும் நடேச உடையாரையும் பார்த்து, தான் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடித்து விட்டதாகவும், முதல் நாள் காலை சந்தை கூடும் இடத்தில் கோவிந்தனுக்கும் இன்னொரு நாடோடி வாலிபனுக்கும் சண்டை ஏற்பட்டு அவன் கோவிந்தனைத் தாக்கியதாகவும், அவனேதான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டு மென்றும் அவனைக் கைது செய்யப் போலீஸாரை அனுப்பி இருப்பதாகவும் சொன்னர்.

இதைக் கேட்டதும் பட்டக்காரர், "அப்படியா......!" என்றார்.


"ஆமாம். அவனைப் போலீஸ் கொட்டடியில் அடைத்து வைத்து ஒரு நிமிஷத்தில் உண்மையைக் கக்க வைக்கிறேன், பாருங்கள்!" என்றார் இன்ஸ்பெக்டர் தற்பெருமையோடு.

"ஏரிக்கரையில் குடிசை போட்டிருக்கிறார்களே, அவர்களில் ஒருவனா......? அவன் பெயர் என்ன?" என்று கேட்டார் பட்டக்காரர்.

"அவன் பெயர் சிங்காரமாம். தடிப்பயல்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

பட்டக்காரரும் மற்றவர்களும் இதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது, "ஹா! என்ன? சிங்காரமா......!" என்று அலறும் குரல் கேட்டு எல்லோரும் பிரமித்தனர். அப்பொழுது மாதவியின் வெளுப்படைந்த முகத்திலும் கண்களிலும் ஒரு பயங்கரம் சூழ்ந்தது. "இது பொய்; நிஜமில்லை. சிங்காரம் இதைச் செய்திருக்கவே மாட்டான். அவன் செய்திருப்பான் என்று நினைத்து அவனை இம்சிக்க வேண்டாம். அவன் ஒருநாளும் அத்தானைக் கொன்றிருக்க மாட்டான். இதற்காக அவனை ஜெயிலில் அடைத்து இம்சித்துத் தூக்கு மேடைக்கு அனுப்பினல் அது இந்தக் கொலையை விடப் பயங்கரம். அத்தானுக்கு ஏது கிடைக்க வேணுமோ, அது கிடைத்தது. இதற்குச் சிங்காரம் பொறுப்பாளியல்ல. அவன் நல்லவன்" என்று கதறினள் மாதவி.

"மாதவி, ஏதாவது உளறாதே!" என்று அதட்டினர் பட்டக்காரர். அவருக்கும் நடேச உடையாருக்கும் மாதவியின் நிலையைக் கண்டு திகைப்பு ஏற்பட்டது. அவளுடைய எல்லை மீறிய உணர்ச்சியும், துயரம் நிறைந்த கதறலும் பட்டக்காரரின் இருதயத்தில் அருவருப்பான வேதனையைக் கொடுத்தன. ஆனந்தனின் மூளையே அப்பொழுது குழம்பியது. அப்பொழுது அங்கு நடப்பவை எல்லாம் உண்மைதான என்பதே அவனுக்குச் சந்தேகமாய் இருந்தது. அவனுடைய முதல் அபிப்பிராயம் மாதவி உண்மையாகவும் திடமாகவுமே சிங்காரம் குற்றவாளியல்ல என்று மறுக்கிறள் என்பதுதான். ஆனல் இந்தக் கொலையைச் செய்தவர் யார்! மாதவியாகவே இருக்குமோ? அதையெல்லாம் நினைத்த அவனது மனம் குழம்பித் தவித்தது.



18. காதலியின் குமுறல்

"இந்தப் பெண்ணுக்கு இந்த நாடோடிகளெல்லாம் எந்தப் பாதகமும் செய்ய அஞ்சமாட்டார்களென்று தெரியாது, சார்! இந்தப் பெண் ஏதோ கொஞ்சம் பச்சாத்தாபத்தினலே அவனைக் குற்றவாளி இல்லை என்று சொன்னல் நாங்கள் நம்பி அவனை விட்டு விடுவோமா!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"சிங்காரம் இதைச் செய்யவில்லை. இதை நான் சத்தியம் செய்து கூடச் சொல்லுவேன். இந்தப் போலீஸ்காரர்களைவிட எனக்கு அவனிடம் நல்ல பழக்கம் உண்டு. நீங்கள் மாத்திரம் அவனைச் சிறையிலே வைத்தால் நான் அவனைக் காப்பாற்றுவதற்காக என் உயிரையே கொடுக்கத் தயார்" என்று ஆவேசத்துடன் கூறினள் மாதவி.

"மாதவி, பேசாமலிரு..." என்று பட்டக்காரர் கோபத்துடன் சொன்னர். அவருடைய உக்கிரமான பார்வை அவளுடைய உள்ளத்தை நடுங்கச் செய்தது. அவள் ஒன்றும் பேசாமல் கண்களில் நீர் வழிய நின்று கொண்டிருந்தாள். பட்டக்காரர் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "இவள் தவருகப் பேசியதை யெல்லாம் மறந்து விடுங்கள். சரி, உங்கள் வேலையை மேலே கவனிக்கலாம்" என்றார். அப்பொழுது அவருடைய



கடுமையான முகத்தில் எழுந்த கோப உணர்ச்சி பயங்கரமா யிருந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்த இடத்தை விட்டுச் சென்றார். போலீஸ் இன்ஸ்பெக்டர் அப்பால் செல்லவும் பட்டக்காரர் அடக்கி வைத்திருந்த கோபம் முழுவதையும் தன் பேத்தியிடம் காட்டத் தொடங்கினார். "இப்படி நீ இந்தச் சமயத்தில் ஏதாவது பிதற்றினால் என்ன அர்த்தம்! நீ எதற்காக அந்த நாடோடித் திருட்டுப் போக்கிரிக்குப் பரிந்து பேசணும்! உனக்கு அந்தச் சிங்காரம் என்ற முரட்டுப் பயலைப் பற்றி என்ன தெரியும்...!" என்றார் மிகவும் கடுமையாக.

அப்பொழுது அவள் நாக்கிலிருந்து 'நான் சிங்காரத்தைக் காதலிக்கிறேன். அவனுக்காக நான் இந்த உலகத்தில் எதுவும் செய்யத் தயார்' என்ற வார்த்தைகள் துள்ளி வரும் போலிருந்தன. ஆனால் அது பயத்தினால் நெஞ்சிலேயே சுழன்று கொண்டிருந்தது.

"ஹூம் - உன்மேல் பிசகில்லை. உன்னை வளர்த்தானே நாடோடி வள்ளி, அவளைச் சொல்ல வேண்டும். அவன்தான் உன்னை இப்படியாக்கி வைத்திருக்கிறான். அவன் உன்னை இந்தத் திருடர்களோடும் போக்கிரிகளோடும் பழகும்படி செய்திருக்கிறாள்..." என்றார் பட்டக்காரர்.

"இல்லை. வள்ளி என்னை அவர்கள் சமீபத்தில் நெருங்க விடுவதேயில்லை. அவர்களெல்லாம் அவளுடைய சொந்தக்காரர்களாக இருந்தாலும் அவர்களைக் கண்டாலே அவள் வெறுக்கிறாள். எனக்குத் தெரியும், சிங்காரம் நம்மனிதர்களையெல்லாம்விட ரொம்ப நல்லவன்" என்றாள் மாதவி.

"இதென்ன துணிச்சலான பேச்சு! நம் மனிதர்களைக் காட்டிலும் அவன் நல்லவனா! நீ பேசுவதைப் பார்த்தால் நீயும் அவர்களைச் சேர்ந்தவள் மாதிரியல்லவா தோன்றுகிறது! மாதவி! நீ இந்தப் பட்டக்காரன் குடும்பத்துக்கு ஏதாவது இழுக்கு நேரிடும்படி நடந்து கொண்டால் அது கடைசியிலே உனக்குப் பெரிய ஆபத்தாக முடியும். ஆமாம், சொல்லி விட்டேன். உன்னை நான் உன் இஷ்டப்படி விட்டதற்கு இதுதானா நீ எனக்கு உலகத்திலே வாங்கிக் கொடுக்கிற கௌரவம்! ஆனால் இனிமேல் நான் பேசாமலிருக்க மாட்டேன். எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது. உனக்கு ஏதாவதொரு ஏற்பாடு செய்தாகணும். உன்னை மதுரையிலிருக்கும் என் தங்கையிடம் அனுப்பி விடுகிறேன். உனக்கு ஒழுங்காக எப்படி நடந்துகொள்ள வேணும் என்கிற புத்தி வருகிறவரையிலே அங்கேயே இரு" என்றார் பட்டக்காரர்.

மாதவி ஒன்றுமே பேசவில்லை. துயரம் தோய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தாள். பட்டக்காரர் நடேச உடையாரைப் பார்த்து, "இந்த மாதிரி மாதவி அசம்பாவிதமாகப் பேசினதற்காக வருத்தப்படுகிறேன், நடேசா! இதெல்லாம் இவளுக்கு ஏற்பட்ட தகாத பழக்கத்தினால் வந்த விபரீதம். இந்த அசம்பாவிதமான பேச்சை நீ தயவுசெய்து மறந்துவிடு" என்று சொல்லி விட்டுத் திரும்பிக் கண்ணும் கண்ணீருமாக நிற்கும் மாதவியைப் பார்த்து, "ஹூம். நட, வீட்டுக்கு!" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

அவர் வீட்டிற்கு வந்ததும் வராததுமாக, மனம் நொந்திருந்த மாதவியை ஒரு தனி அறையில் தள்ளிப் பூட்டினார். போலீஸ் கொட்டடியில் அப்பொழுது சிங்காரத்தை எப்படித் தள்ளிப் பூட்டி வைத்திருந்தார்களோ, அப்படி!

ஆனந்தனால் அப்பொழுது செய்யக் கூடியது ஒன்றுமே இல்லை. அவனுடைய சம்சயமெல்லாம் அப்பொழுது மாதவியையே சூழ்ந்திருந்தது. இந்தக் கோரமான கொலைக்கு மாதவிதான் பொறுப்பாளியாக இருப்பாளோ! அவனால் நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்! ஆனால்



அவன் மேல் அவனுக்குள்ள பரிவினாலும் பாசத்தாலும் முதல் நாள் இரவு அவன் கண்டெடுத்த ரத்தம் தோய்ந்த கத்தியைப் பற்றியே பேசக் கூடாது என்று திடமாகத் தீர்மானம் செய்தான்.

போலீஸ்காரர்கள் அந்த நாடோடிகள் வசித்து வரும் ஏரிக்கரை மைதானத்திற்கு வந்து சிங்காரத்தைத் தேடிப் பிடித்துக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார்கள்.

அவர்களுக்குத் தலைவனாக விளங்கிய பெத்தண்ணன் தன் கூட்டத்ினரை அழைத்துக் கூட்டம் போட்டு உடனடியாக இதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பது பற்றி ஆலோசிக்கலானான். அந்தக் கூட்டத்தில் ஒவ்வொருவருடைய முகத்திலும் சோக இருள் சூழ்ந்தது. வயதானவர்களும் இளைஞர்களும் பெத்தண்ணன் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். "நம்ம சிங்காரத்தைப் போலீஸ்காரங்க பிடிச்சுக்கிட்டுப் போனது உங்களுக்கெல்லாம் தெரியும். அவன் மேலே அவங்க சாட்டுகிற குற்றம் பயங்கரமாக இருக்குது. சிங்காரம் யாரையோ கொலை செய்துவிட்டான் என்று சொல்லுகிறாங்க. ஆனால் சிங்காரமோ ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொல்லுகிறான். அவன் சத்தியம்கூடச் செய்கிறான். அதை நாம் ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது" என்றான் பெத்தண்ணன்.

"என் பேரன் இந்தக் குற்றம் செய்திருப்பான் என்று யாரால்தான் சொல்ல முடியும்!" என்றாள் வீரம்மா அழுது கொண்டே.

"அவன் நிச்சயம் இதைச் செய்திருக்க மாட்டான். நான் போய் ஒரு வக்கீல் ஐயாவிடம் இதைப் பற்றிப் பேசினேன். அவர் சிங்காரத்துக்காக வாதாடத் தயாராய் இருக்கிறார். முதலில் அவன் பேரிலே இருக்கிற கெட்ட அபிப்பிராயம் மாறி நல்ல அபிப்பிராயம் ஏற்படும்படியாய் ஒரு சரியான சாட்சியை நாம் தயார் செய்யவேணும் என்று சொல்கிறார். அவருடைய யோசனை ரொம்ப நல்ல யோசனைதான். அந்தக் கொலை நடந்த அன்று ராத்திரி அவன் வேறு ஒருவரோடு வேறு எங்கோ தங்கி இருந்தான் என்று நிரூபிக்க வேணும் என்று அவர் சொன்னார். உண்மையாக நேற்று ராத்திரி சிங்காரத்தோடு யார் இருந்தார்கள்!" என்று கேட்ட பெத்தண்ணன் பேச்சை நிறுத்தினான்.

அப்பொழுது எல்லோருடைய முகமும் அவர்களுடைய ராணியாகிய தங்கத்தை நோக்கித் திரும்பின. தங்கம் இரண்டு நாளாகச் சிங்காரத்தோடு அதிக நேசம் பாராட்டி இரவு வேளையில் அவனோடு எங்கோ சென்றதை அந்தக் கூட்டத்தில் உள்ள எல்லோருமே பார்த்திருக்கிறார்கள்.

"நீ நேற்று ராத்திரி சிங்காரத்தோடு வெளியே போனாய் அல்லவா, தங்கம்! ஆனால் நீங்கள் எப்போது திரும்பி வந்தீர்கள் என்று எனக்குத் தெரியாது. ரொம்ப நேரம் கழிச்சுத்தான் வந்திருப்பீங்க...!" என்றான் பெத்தண்ணன் தங்கத்தைப் பார்த்து.

"ஆமாம்......! ஆனால்......" என்று சொல்லித் தயங்கினாள் தங்கம்.

"எனக்குத் தெரியும் தங்கம், நீ என்ன சொல்ல நினைக்கிறாய் என்று! இந்தச் சமயத்திலே எதைச் சொல்லவும் வெட்கப்படக் கூடாது. சிங்காரம் உன்னைக் குடிசையிலே கொண்டு வந்து விட்ட பிறகு திரும்பிச் சென்று அந்த மனிதனைக் கொன்றிருக்கலாம் என்று நினைக்க ஆதாரமிருக்கிறது. நீ அப்படியெல்லாம் எண்ணம் ஏற்படும்படி சொல்லக் கூடாது, விசாரணையின் போது. கோவிந்தன் சுமார் பதினொரு மணிக்குக் கொல்லப்பட்டிருக்கணும் என்று சொல்லுகிறார்கள். சிங்காரம் அந்த நேரத்தில் உன்னோடு வேறொரு இடத்திலிருந்தான் என்று நீ சொல்லணும். உன்னுடைய வார்த்தையிலேதான் எல்லாம் இருக்கிறது. இந்த வாதத்தைப் போலீஸ்காரங்களாலே அசைக்க முடியாது. இதுதான் சிங்காரத்தை மீட்க ஒரே ஒரு வழி......"

தங்கத்திற்கு இதைப் பற்றி யோசித்து முடிவு சொல்ல சிறிது நேரம் வேண்டியிருந்தது. பெத்தண்ணன் சொல்லியபடி நீதிஸ்தலத்தில் வாக்குமூலம் கொடுத்தால் ஆனந்தன் அவளைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வான்? அந்தரங்கத்தோடு அவளை நேசிக்கும் அவனுக்குச் சந்தேகம் ஏற்படாதா? அதனால் பிற்கால வாழ்க்கையைப் பற்றி அவர்கள் போட்டிருந்த திட்டமெல்லாம்



"மைசூர்ப்பாகை உடைக்க முடியவில்லை என்றுதானே கோபிக்கிறீர்! முதலாளி உடைப்பதற்குத் தனக்குப் பிரத்தியேகமாக ஒரு சுத்தி வைத்திருக்கிறார். அவர் அப்புறம் போகட்டும். அவருக்குத் தெரியாமல் உமக்குக் கொண்டு வந்து தருகிறேன்."

என்னவாகும்! இதை நினைக்கவே அவளுக்குக் கலக்கமாகவும் பயமாகவும் இருந்தது. ஆகவே, "முடியாது. நான் அப்படிச் சொல்லமாட்டேன்" என்று கதறினாள் தங்கம்.

தங்கத்தின் இணக்கமற்ற பேச்சு அந்தக் கூட்டத்தினரைத் திகைக்க வைத்தது. அப்பொழுது ஒவ்வொருவருடைய மனத்திலும் ஏற்பட்ட புகைச்சலும் ஆத்திரமும் ஒரு சில வினாடிகள் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தின. ஒவ்வொருவர் வாயிலிருந்தும் ஆத்திரமும் கோபமும் கொண்ட வார்த்தைகள் துள்ளி வந்தன. தங்கள் கூட்டத்தில் திலகம் போல் விளங்கிய ஒருவனுடைய உயிரைக் காப்பாற்ற அவள் சம்மதிக்காதது அவர்களுக்கு அளவிட முடியாத ஆத்திரத்தை உண்டாக்கியது.

"இவள் தன்னோடு சிங்காரம் இருந்தானென்று கண்டிப்பாகச் சொல்லித்தானாக வேண்டும்......" என்று கண்டிப்பான குரலில் கூறினாள் வீரம்மா. அப்பொழுது அந்தக் கூட்டத்தினருக்கு இருந்த கோபமும் வேகமும் தங்கத்துக்குப் பெரிய ஆபத்தை உண்டாக்கி விடும்போலிருந்தது.


"கொஞ்ச நேரம் பேசாதிருங்க" என்று சொல்லிப் பெத்தண்ணன் கலவரத்தை அடக்கி விட்டு, "கொஞ்சம் என் வார்த்தையைக் கேள், தங்கம்! இந்தப் பொறுப்பு உன்னைச் சேர்ந்ததுதான். நீ எங்கள் ராணி. நீயே உன் மனிதர்களைக் கை விடலாமா! நீ சாட்சி சொல்ல இணங்கா விட்டால் சிங்காரத்தை நாம் மறுபடியும் உயிரோடு பார்க்கவே முடியாது. அவனுடைய வாழ்க்கையே பாழாகிவிடும். இதைக் கொஞ்சம் யோசனை செய்து பாரு. இந்த ஒரு வார்த்தை சொல்லுவது உனக்குப் பெரிதல்ல. ஆனால் இதனால் ஏற்படக் கூடிய நன்மை எவ்வளவு பெரிது என்று எண்ணிப் பாரு......இதை யோசித்து முடிவாகச் சொல்லு" என்றான். அவனுடைய வார்த்தை இதமானதாகவும் அடக்கத்தோடு கூடியதாகவும் இருந்தது.

அவள் சிறிது நேரம் யோசித்தாள். அவள் அப்பொழுது அவர்களுடைய வார்த்தைகளுக்கு இணங்கித்தானாக வேண்டும். இல்லாவிட்டால் வெறி பிடித்தவர்கள் போலிருக்கும் தன் கூட்டத்தினர் எதைச் செய்யவும் தயங்கமாட்டார்கள் என்று அவளுக்குத் தோன்றியது. "சரி! உங்கள் அபிப்பிராயப்படியே சொல்லி விடுகிறேன்" என்றாள் மெதுவாகவும் அமைதியாகவும்.

இதைக் கேட்டதும் அந்தக் கூட்டத்தில் பெருத்த சந்தோஷ ஆரவாரமேற்பட்டது. பெத்தண்ணன் தங்கத்தைத் தனியாக அழைத்துக் கொண்டு போய்ச் சிங்காரத்துக்காக வாதாடத் தயாராயிருக்கும் வக்கீல் தன்னிடம் சொல்லியவைகளை யெல்லாம் அவளிடம் சொல்லி அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதையும் தெளிவாக எடுத்துச் சொன்னான். பெத்தண்ணன் திருப்பித் திருப்பி எச்சரிக்கை செய்து சொன்ன வார்த்தைகளை யெல்லாம் பொறுமையோடு தங்கம் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் அவளுக்குச் சொல்லிக் கொடுத்த வார்த்தைகள் அவள் வாழ்க்கைக் கனவையும் ஆசைகளையும் சிதைப்பதாக இருந்தன. உண்மையிலேயே நடக்காத விஷயங்களைச் சொல்ல அவளுக்கு அருவருப்பாகத் தான் இருந்தது. ஆனால் அவளால் என்ன செய்ய முடியும்! தன்னால் சிங்காரம் காப்பாற்றப்படுவானானால் அதற்காக அவள் எதைச் சொல்லவும் தயாராய் இருந்தாள். உண்மையாகவே அவனோடு பழகியதினால் ஏற்பட்ட சிநேகித வாஞ்சை இப்பொழுது தான் அவள் மனத்தில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. அதனால் அவள் ஏமாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாரானாள்.

தங்கம் நீதி ஸ்தலத்தில் ஆஜராக வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. அவளுடைய பெயர் கூப்பிடப்பட்டது. அவள் அந்த அறைக்குள் ஏதோ யந்திரப் பொம்மை நடந்து வருவது போலத் தலைகுனிந்த வண்ணம் சென்றாள். அவளுக்குத் தலையை நிமிர்த்திச் சுற்றிலும் பார்க்கவே பயமாய் இருந்தது. சம்பிரதாயமாகச் சொல்லப்படும் மனப்பூர்வமான ஆணைகளை ஒருவர் சொல்ல அவள் நடுங்கும் குரலில் திருப்பிச் சொன்னாள். பயத்தாலும் பதட்டத்தாலும் அப்பொழுது அவள் மனம் குழம்பியிருந்தது. சிங்காரத்தின் மீது தகாத பழி ஒன்று சுமத்தப்பட்டு குற்றவாளியாகி யிருக்கிறான் என்பது அவளுக்குத் தெரியும். அவன் குற்றவாளி யல்லவென்று நிரூபிப்பதற்காகத்தான் அவள் முக்கியமான சாட்சியாகக் கூண்டில் நிறுத்தப் பட்டிருக்கிறாள் என்பதும் தெரியும். அவளுக்கு அந்த வழக்கைப் பற்றிய விருத்தாந்தமும் நிலைமையும் மேலெழுந்தவாரியாக ஓரளவு தெரியுமே ஒழிய விவரமாகத் தெரியாது.

எதிரில் கைதிக்கூண்டில் கைவிலங்குடன் நிற்கும் சிங்காரத்தின்மீது அவள் பார்வை சென்றது. அவன் தலை நிமிர்ந்து திடமாக எதையும் மறுக்கக் கூடிய நிலைமையிலிருப்பவன் போல்தானிருந்தான். போலீஸார் அவனைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தார்களே தவிர, அவனிடமிருந்து கொலை செய்ததற்கு ஆதாரமான ஆயுதங்களையோ, வேறு எவ்விதமான அடையாளங்களையோ கண்டு பிடிக்கவில்லை. முதல் நாள் சந்தைக் கூட்டத்தில் கோவிந்தனுக்கும் அவனுக்



கும் நடந்த தகராறு, கோவிந்தனை வலுவில் இழுத்த வம்பு என்று சில சாட்சிகள் மூலம் தெளிவாக விளங்கியது.

தங்கம் சிங்காரத்தின் முகத்தைப் பார்த்த பொழுது அவன் குற்றவாளியல்ல என்ற திடமான அபிப்பிராயம் அவள் மனத்தில் விழுந்தது. அவள் பார்வை வேறொரு திசையில் சென்றபோது அவள் முகத்தையே துடிப்போடு பார்த்துக் கொண்டிருக்கும் ஆனந்தனின் முகத்தைக் கண்டாள்.

அவள் நடுக்கமும், அடக்கமும் நிறைந்த குரலில் எதிர் தரப்பாரின் சரமாரியான கேள்விகளுக்கெல்லாம் தடங்கலில்லாமல் பதில் சொல்லிக் கொண்டு வந்தாள். அவள் ஒவ்வொரு கேள்விக்கும் நேர்மையாகப் பதில் சொல்லிக்கொண்டு வந்தது அங்கு கூடியிருந்த எல்லோர் மனத்திலுமே அவள்மீது ஒரு நம்பிக்கை ஏற்படும்படி செய்தது.

"நீ எப்போதும் சிங்காரத்தோடு தான் இருப்பாயா......?"

"எப்போதும் அவரோடு இருப்பதில்லை. பகல் வேளையில் அவரைப் பார்க்கவே முடியாது. இரவு நேரங்களில்தான் சந்திப்பேன்."

"சரி. கொலை நடந்த அன்று இரவு நீ அவனைச் சந்தித்தாயா?"

"சந்தித்தேன்."

"எத்தனை மணிக்கு?"

"இரவு எட்டு மணிக்கு. அவர் தன் வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு வந்த பிறகு......"

"இது எல்லோருக்கும் தெரியுமா?"

"எல்லோருக்கும் தெரியும்."

"அவனை நீ எங்கே சந்தித்தாய்? சந்தித்த பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"அவர் என்னை என் குடிசையில் வந்து பார்த்தார். கொஞ்ச நேரத்தில் நானும் அவரும் மைதானத்தைத் தாண்டி ஏரிக் கரைக்குச் சென்றோம்."

"இந்த இடத்தில் நீங்களிருவரும் எங்கே போனீர்கள் என்பதைத்தான் ஒளிவு மறைவின்றி உண்மையாகச் சொல்ல வேண்டும்."

"உண்மையில் நாங்கள் ஏரிக் கரையிலுள்ள மரத்தடிக்குச் சென்றோம். அந்த இடத்தில் தான் நாங்கள் நெடுநேரம் வரையில் பொழுது போக்குவது வழக்கம்......"

"நீங்கள் ஏன் அங்கு போகவேண்டும்......?"

"அந்த இடம்தான் எங்களுக்குப் பிடித்திருந்தது......"

"நெடுநாட்களாகவே உங்களுக்குள் இத்தகைய காதல் தொடர்பு உண்டா?"

"உண்டு."

"நீ அவனைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லையே! நீ அவனுக்கு மனைவி இல்லையே?"

"இல்லை."

"அப்படி இருக்கும்போது உனக்கு எதற்காக அவனோடு இந்தத் தகாத நட்பு......"

"நான் அவரோடு இப்படிப் பழகுவதை எங்கள் கூட்டத்திலுள்ள பெரியவர்களெல்லாம் தவறாகக் கருதவே இல்லை. அதை எல்லோரும் மனப்பூர்வமாக விரும்பினார்கள். எனக்கும் அவருக்கும் கல்யாணம் செய்யப் போவதாக எல்லோரும் நிச்சயம் செய்திருந்தார்கள். இதனால் நாங்கள் தாராளமாகப் பழகுவதை ஒருவரும் கெடுதலாக நினைக்கவில்லை."

"சரி! நீங்கள் அந்த இடத்திலிருந்து திரும்பும் போது எத்தனை மணி இருக்கும்?"

"இரவு பன்னிரண்டு மணிக்கு மேலிருக்கும்."

"சரி. அதற்கப்புறமும் சிங்காரம் உன்னோடு இருந்தானா, அல்லது வேறு எங்காவது போனானா?"



தாத்தா :—என் மேலே இந்தப் பசங்களுக்கு நம்பிக்கையே இல்லையே! 'அசோகா' பாக்குத் தூளை என்னிடம் கொடுத்து பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு, என்னுடைய 'பொய்ப் பல் செட்டை' எடுத்துக் கொண்டு போய் விட்டார்களே!

பையன்கள் :—தாத்தா! நீங்க தின்ன மாட்டீர்கள் என்று பூரண நம்பிக்கை எங்களுக்கு இருக்கு. ஆனால், நீங்கள் ஏன் பல்லைத் தேடுகிறீர்கள்!......ஹ......ஹ......ஹா!

ADVT.

"அவரும் இரவு முழுதும் என் குடிசையிலேயே இருந்தார். காலையில்தான் எழுந்து போனார்."

நீதிபதி இதற்குமேல் தங்கத்தை நிறுத்தி வைத்து விசாரணை செய்ய விரும்பவில்லை. ஆகவே, "போதும். நீ இனி கூண்டிலிருந்து இறங்கலாம்" என்று உத்தர விட்டார்.

தங்கம் சாட்சிக் கூண்டிலிருந்து கீழே இறங்கும் போது கைதிக் கூண்டிலிருந்த சிங்காரத்தின் முகத்தை ஒரு முறை பார்த்தாள். அவனுடைய முகம் முன்னைவிட மிகவும் தெளிவடைந்திருந்தது. சட்டென்று அவனுடைய பார்வை ஆனந்தனிருக்கும் இடத்திற்குத் திரும்பியது. அவனுடைய முகம் கருத்துக் கவலை நிறைந்ததாய் இருப்பதைக் கண்டு அவள் இருதயம் நடுநடுங்கியது.

அன்று நீதிஸ்தலத்தில் சிங்காரத்தின் தலைவிதி எப்படி முடியப் போகிறதோ என்று கலங்கிக் கொண்டிருந்தாள் மாதவி. இன்னும் அவள் அந்த வீட்டில் தனி அறையில் அடைத்து வைக்கப் பட்டுத்தா னிருந்தாள். தன்னுடைய தாத்தா விசாரணையைப் பார்க்க நீதி ஸ்தலத்திற்குச் சென்றிருக்கிறார் என்று அவளுக்குத் தெரியும். அவர் வரும்போது எத்தகைய செய்தியுடன் வருவார் என்பது குறித்து அவள் மனத்துள் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தாள்.

பட்டக்காரர் வீட்டிலுள்ளவர்களிடம் மாதவியைப் பத்திரமாகப் பாதுகாக்கும்படி எச்சரிக்கை செய்து விட்டுப் போயிருந்தார். அவளை மதுரைக்கு அனுப்பப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர, எப்பொழுது அனுப்பப் போகிறார் என்பது மாத்திரம் ஒருவருக்குமே தெரியாது.

அன்று மாலை அவர் வீடு திரும்பியதும் வள்ளியைக் கூப்பிட்டு மாதவியை அழைத்துக் கொண்டு மதுரைக்குப் பிரயாணப் படும்படி துரிதப் படுத்தினார். ரயில் புறப்படுவதற்கு இன்னும் ஒரு மணி நேரமே இருப்பதாகவும் சீக்கிரமே புறப்படும்படியும் உத்தர விட்டார். (தொடரும்)



இளம் கனவான்

பகீரதன்

காலை வேளை. கீழ்வானத்தில் செக்கச் செவேலென்று வட்ட வடிவமாக அப்பொழுதுதான் சூரியன் உதயமாகி யிருந்தான். அவனுடைய பொன் கதிர்கள் பட்டுப் பூமிதேவி அற்புதமாகக் காட்சி தந்தாள். மரங்களின் இலைகள், பச்சைப் பசேலென்ற புல்வெளியில் உள்ள புற்களின் நுனிகளில் எல்லாம் பனித்துளிகள் முத்து முத்தாகப் பளபளத்துக் கொண்டிருந்தன.

சாலை ஓரத்தில் உள்ள சுமைதாங்கி மேடை மீது கருவண்டுபோல் சுருண்டிருந்த ஒரு வாலிபச் சிறுவன் அப்பொழுதுதான் தூங்கி எழுந்து உட்கார்ந்திருந்தான். ஆண்மையும் அன்பையும் சித்திரித்துக் காட்டியது அவன் களங்கமற்ற முகம். எவ்வளவு அதிகமாக மதித்தாலும் அவனுக்குப் பதின்மூன்று வயதுதான் மதிக்கலாம். உடல் வாட்ட சாட்டமாய் ஓடி ஆடி வேலை செய்யக்கூடியவன் போல் இருந்தது. அவன் பரந்த தோளில் கட்டம் போட்ட துண்டு ஒன்று கிடந்தது. வெய்யிலாலும் புழுதியாலும் அவன் கறுத்த மேனி மேலும் கறுத்துக் காணப்பட்டது. இடையில் ஒரு அரைக்கால் சட்டை அணிந்திருந்தான். அதுவும் அழுக்கேறி இருந்தது. கால் சட்டையின் ஓரத்தில் மடித்துத் தைத்திருந்த இடங்களில் தையல் பிரிந்து தொங்கிக் கொண்டிருந்தன. அந்தக் கிழிசல்கூட அவன் உருவத்துக்கு ஒரு அழகைக் கொடுத்தது.

சுமைதாங்கி மேடைமீது கையை ஊன்றிய வண்ணம் எழுந்தான். நிதானமாகக் கீழே இறங்கினான்.

உதய சூரியனைப் பார்த்து உற்சாகமாகச் சிரித்துக் கொண்டே மெதுவாகத் தலையை அசைத்தான். அவன் கரிய பெரிய கண்கள் மினுமினுத்தன. தன் கையை உயரத் தூக்கி ஒரு தரம் சோம்பல் முறித்தான். அவன் வாய் ஏதோ ஒரு இசையை இனிமையாக முணுமுணுத்தது. அடுத்த கணம் கணீரென்ற குரலில் கம்பீரமாகப் பாட ஆரம்பித்து விட்டான்:

"என் அருமை நாடே!
இனிய தமிழ் நாடே!
உன் அருமை சொல்ல
உலகில் இணை ஏது?"

என்று பாடினான். மீண்டும் மீண்டும் அதையே தொடர்ந்து பாடினான். அதற்கு அடுத்த அடியை மறந்து விட்டவன்போல் சற்று நேரம் கடைசி அடியை மட்டும் கொஞ்சம் நீட்டிப் பாடிக் கொண்டே ராகம் இழுத்தான். சட்டென்று,

"பொன்னி நதி பாயும்
செந்நெல் விளை நாடே!"

என்று கும்மாளம் போட்டுக்கொண்டு மேலே பாடினான். அடாடா! அவன் குரல்தான் எவ்வளவு இனிமையாக இருந்தது! பிசிர் இல்லாமல் வெண்கல நாதம்போல் ஒலித்த அவன் சாரீரத்தை வார்த்தைகளால் விளக்க முடியுமா! வீணையில் வேண்டுமானால் மீட்டிக் காண்பிக்கலாம்.

இப்படித்தான் அவன் நாள் முழுவதும் எதையாவது பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருப்பான். உற்சாகமாக எதையாவது சொல்லி வேடிக்கை பண்ணிக் கொண்டிருப்பான்.

ஓயாது அலைக்கும் கடல், பலப்பல வர்ணங்களாலான மலர் குலுங்கும் புஷ்பச் செடிகள், அதன் மத்தியில் ரீங்கார நாதத்துடன் தேன் குடிக்கும் வண்டுகள், கண்ணையும் கருத்தையும் கவரும் அழகிய மாடி வீடுகள், அதன் முன்புறத்தில் சிரத்தையுடன் வெட்டி விட்டிருக்கும் ஒன்றுக்கும் உபயோகமில்லாத சிங்காரச் செடிகள், நகரில் உள்ள விசாலமான வீதிகள், அதில் நவநவமான ஆடை அலங்காரங்களுடன் நடந்து


செல்லும் மனிதர்கள், மோட்டார் வாகனங்கள், அதற்குள் அமர்ந்திருக்கும் பெரிய தனக்காரர்கள், இன்னும் வகுப்பு வாதிகள், குழப்ப வாதிகள், இனத் துவேஷிகள், தேச பக்தர்கள், தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் எல்லாரும் எல்லாருமே அவனுக்கு ஒன்றுதான்.

அவனுக்கென்று வீடுவாசல் கிடையாது. தாய் தகப்பன் கிடையாது. அண்ணன் தம்பிகள், அக்காள் தங்கைகள், உற்றார் உறவினர்கள் யாருமே கிடையாது. அவன் ஒரு அனாதைச் சிறுவன். சின்னஞ்சிறு வயதில் யாராவது அவனைப் பார்த்துச் சின்னசாமி என்று கூப்பிட்டிருக்க வேண்டும். இல்லை, வேறு எப்படியோ அவனுக்கு அந்தப் பெயர் கிடைத்திருக்க வேண்டும். அது அவனுக்கு யார் சூட்டிய பெயரோ, அவனுக்கே தெரியாது. ஆனால் அவனுக்கென்று இருந்ததெல்லாம் அந்தப் பெயர் ஒன்றுதான்.

சின்னசாமி என்று யார் கூப்பிட்டாலும் சிரித்துக் கொண்டு ஓடி வருவான். சொன்ன வேலையைத் தட்டாமல் கேட்பான். கொடுத்த கூலியை முகம் கோணாமல் வாங்கிக் கொள்ளுவான். பசி எடுக்கும்போது சாப்பிடுவான். தூக்கம் வந்தால் எந்த இடத்திலும் படுத்துத் தூங்கி விடுவான்.

படுத்து உறங்கப் பட்டுப் பாயோ, இலவம் பஞ்சு அடைத்த தலையணைகளோ அவனுக்கு வேண்டியதில்லை. கரடு முரடான கட்டாந் தரைதான் அவனுக்குக் கட்டிலும் மெத்தையும். அவனுடைய இளம் கரங்கள்தான் வெல்வெட் தலையணைகள். கொட்டும் மழையும் நடுங்கும் குளிரும், கொடிய வெய்யிலும் தாங்க முடியாத புழுக்கமும் அவனுக்கு ஒன்றுதான்.

வேடிக்கையும் கேலியும் நிறைந்த பேச்சில் அவன் சமர்த்தன். சாலையில் நடக்கும் ஜனங்களைப் பார்த்துத் தன் தோழர்களிடம் தோன்றியதைச் சொல்லிக் கொண்டிருப்பான். தலை சிறுத்து உடல் பெருத்து யாராவது போனால் "கண்டைக்காய் தலையார் போகிறார்" என்பான். நாகரிகமாக யாராவது சூட், கோட் முதலியவைகள் போட்டுக் கொண்டு அடிக்கடி காரியமில்லாமல் அலைவதைப் பார்த்தால் "அதோ பார், பிக்கெட்!" என்பான்.



குரங்கும் கோட்டானும் ஆந்தையும் அச்சடித்த அநாகரிகமான துணியில் புஷ்கோட் தைத்துப் போட்ட பெரிய மனிதன் போனால் "பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்து விட்டார்" என்று சொல்லிச் சிரிப்பான். உடல்பெருத்துத் தொந்தி சரிந்து தள்ளாடித் தள்ளாடி காரிலிருந்து இறங்கித் தளர் நடை போடும் பணக்காரர்களைப் பார்த்து "தஞ்சாவூர் பொம்மை ஆடி ஆடிப் போகிறது" என்று சொல்லிக் கல கலவென்று கைகொட்டிச் சிரிப்பான். இப்படி அவனுக்கென்று பலப் பலவிதமான மனிதர்கள் கிடைப்பார்கள்.

சின்னசாமிக்குப் பிடிக்காத சில விஷயங்களும் இருக்கின்றன. பிச்சை எடுப்பவர்களை அவனுக்குப் பிடிக்காது. நல்ல உடம்பை வைத்துக் கொண்டு உழைக்காமல் நடுத் தெருவில் அலைந்து திரியும் நாடோடிகளையும் பிடிக்காது. பணத்தை வைத்துக்கொண்டு பாமரர்களை ஏமாற்றி வாழும் சோம்பேறிப் பணக்காரர்களையும் பிடிக்காது.

அவன் நகரத்துக்குள் போகாத இடமில்லை. பழகாத மனிதர்களும் இல்லை.

கடற்கரை, கடைத்தெரு, விளையாட்டு மைதானம், வேடிக்கைக் காட்டும் இடம், திருவிழாக் கூட்டங்கள், தெருக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், வசைக் கூட்டங்கள், பொது வாசகசாலையில் பத்திரிகையைப் படித்துவிட்டு அரசியலை அலசிப் பிழியும் வம்புச் சாவடிகள், இலக்கியத்தையும் இதிகாசத்தையும் படித்து அறியாமலேயே அதைத் தூற்றித் திரியும் வீணர்களின் வெறும் கூட்டங்கள் எல்லாவற்றிலும் அவன் கலந்து கொள்வான். அங்கெல்லாம் தனக்குத் தோன்றியதைத் தோன்றியபடி தன் அருகில் உள்ளவர்களிடம் சொல்லிவிட்டு வருவான். இதைக் கேட்டு வியப்பவர்களும் இருந்தார்கள், விரட்டி அடித்தவர்களும் இருந்தார்கள். சின்னசாமி இரண்டையும் சமமாகவேதான் பாவித்தான்.

அவன் எப்படித்தான் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டானோ தெரியவில்லை. அவனைப் பார்த்தால் சேர்ந்தாற்போல் ஒரு இடத்தில் நாலு மணி நேரம் இருப்பான் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் எப்படியோ எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டிருந்தான். தெரு மூலைகளில் கிழிந்து கிடக்கும் துண்டுப் பத்திரிகைகளை எடுத்து வைத்துக் கொண்டு கவனமாகப் படிப்பான், பரீட்சைக்குப் படிக்கும் கல்லூரி மாணவனைப் போல. அவனுக்கும் தாய் தந்தையர் இருந்து பள்ளிக்கூடப் படிப்புக்கு வேண்டிய பணமும் இருந்திருந்தால் இந்த வயதில் பள்ளிக்கூடம் போக வேண்டியவன்தானே!

இவ்வாறு சின்னசாமியைப் பற்றி எவ்வளவோ சொல்லிக் கொண்டிருக்கலாம். அவனுடைய ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் ஒவ்வொரு அழகிய சிறு கதைதான். கற்பனைக்கு எட்டாத காவியம்தான்.

** ** **

நாற்சந்தி கூடும் கடை வீதியில் எங்கேயோ பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான் சின்னசாமி. யாரோ தோளில் கை வைப்பதை உணர்ந்து திரும்பினான். தன்னைப் போன்ற நிலையில் இருந்த தன் தோழன், ஆனால் புதிய உருவத்தில் நின்று கொண் டிருந்ததை வியப்போடு பார்த்தான். "என்ன சின்னசாமி இங்கே நின்று கொண்டிருக்கிறாய்!" என்று அன்போடு கேட்டான் அந்தத் தோழன்.

"யார் இட்ட சாபமோ. யாருக்கு என்ன செய்தேனோ! 'நீ சந்தியிலே நிற்க!' என்று சபித்திருப்பார்கள். அதன் பலனை அனுபவித்துக் கொண்டு இந்த நாற்சந்தி மூலையிலே நிற்கிறேன்" என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தான் சின்னசாமி. கூடவே "என்ன கோவிந்தா!—(இது அவன் தோழனின் திருநாமம்) ஆள் அடையாளமே தெரியாமல் உரு மாறிவிட்டாயே!" என்று கேட்டான்.

கோவிந்தன் அழகாகத் தலை வாரிச் சீவிக்கொண்டிருந்தான். வெள்ளை வெளேரென்று ஆடைகள் அணிந்திருந்தான். மூன்று வேளையும் வயிறாரச் சாப்பிடுவதால் அவன் மேனி பள பளத்தது! அவன் கன்னங்கள் சற்று உப்பி யிருந்தன. காய்ந்த பயிரில் தண்ணீர் விட்டவுடன் ஒரு தளதளப்பு இருக்குமே, அப்படி இருந்தான் அவன்.

அவன் சின்ன சாமியின் கேள்விக்கு உடனே பதில் சொல்லவில்லை. சின்ன சாமியைக் காலில் இருந்து தலைவரை கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சிரித்த முகத்தைப் பார்த்தான். அவன் அழகிய தோளைப் பார்த்தான். அதில் கிடந்த கட்டம் போட்ட துண்டைப் பார்த்தான். அரைக்கால் சட்டையையும் அதில் இருந்த அழுக்குக் கறைகளையும் பார்த்தான். அவன் பரட்டைத் தலையையும், அதில் சுருண்டு சுருண்டு சுதந்திரமாக நின்ற தலை மயிரையும் பார்த்தான். மின்னும் விழிகளைப் பார்த்தான். பிறகு சொன்னான்:

"நான் இப்பொழுது ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் வேலை செய்கிறேன்."

"பெரிய பணக்காரர் என்றால் அவருக்கு நாலு வயிறு இருக்குமோ! காலையிலிருந்து மாலை வரையில் சாப்பிட்டுக் கொண்டே இருப்பாரோ!"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அவருக்கும் நம்மைப் போல ஒரே வயிறுதான். ஆனால் நாம் சாப்பிடுவது போல அவரால் சாப்பிட முடியாது. பசி எடுப்பதற்கு மருந்து சாப்பிடுவார். நல்ல பண்டங்களை வயிறாரச் சாப்பிட்டு அனுபவிக்க முடியவில்லையே என்று ஏங்குவார்."

"தங்கச் செருப்பும், சரிகை வேஷ்டியும், பட்டுச் சட்டையும் போட்டுக் கொள்ளுவாரோ! ஒரே சமயத்தில் பத்துச் சட்டைகளும், இருபது வேஷ்டிகளும், ஏழு, எட்டு செருப்புகளும் அடுக்கடுக்காக அணிந்து கொள்ளுவாரோ?"

"சாதாரணத் தோல் செருப்புத்தான், நாலு முழ நூல் வேஷ்டிதான், சொக்காய்கள் பட்டோ அல்லது பஞ்சதானோ தெரியவில்லை. ஒன்றே ஒன்றுதான் அணிந்து கொள்ளுவார். ஆனால் இரண்டு அலமாரி நிறைய வேஷ்டி சட்டை எல்லாம் புதிதாக வைத்திருக்கிறார். அவர் போட்டுக் கொள்ளுவதெல்லாம் கிழிந்துதான் இருக்கும்."

"நீ மூன்று வேளையும் சாப்பிடுகிறாயோ!"

"ஆமாம். மூன்று வேளை, நினைத்தால் நாலு வேளை கூடச் சாப்பிடுகிறேன்" என்று பெருமையோடு சொன்னான் கோவிந்தன்.

"பல்லும் கில்லும் தேய்ந்து விடப் போகிறது. வயிறு வெடித்துப் போகாமல் பார்த்துக் கொள்" என்று புத்தி சொன்னான் சின்னசாமி. பிறகு "உங்கள் முதலாளி இருக்கும் வீடு ரொம்பப் பெரிசோ!" என்று கேட்டான்.

"ரொம்பப் பெரிசு! பெரிய கோயில் மாதிரி வீடு. அதில்தான் நானும் இருக்கிறேன். அது இல்லாமல் இருநூறு வீடுகள் வேறு வாடகைக்கு விட்டு இருக்கிறார். இன்னும் என்ன என்னவோ தொழில்கள். எப்படி எப்படி எல்லாமோ பணம் சம்பாதிக்கிறார். தினம் தினம் எத்தனை கார்கள் அவரைத் தேடி வரும், தெரியுமா! யார் யாரோ யானைக்குட்டி மாதிரி வருவார்கள், போவார்கள்."

"இவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு என்ன பண்ணப் போகிறாராம்!"

"அது எனக்கும் தெரியவில்லை. ஆனால் மேலும் மேலும் பணம் சேர்க்கத்தான் என்று சொல்லுகிறார்கள் அங்கு வேலை பார்த்து வருகிறவர்கள். மனிதர் என்னவோ நிம்மதி இல்லாமல் இருக்கிறார். ஓயாமல் குட்டி போட்ட பூனைமாதிரி குறுக்கும் நெடுக்கும் அலைவார். அவர் கலகலவென்று சிரித்து நான் பார்த்ததில்லை. நிம்மதியாகத் தூங்கியும் நான் பார்த்ததில்லை. எப்பப் பார்த்தாலும் யாரையாவது திட்டிக் கொண்டிருப்பார். இல்லாவிட்டால் காரில் ஏறிக் கொண்டு எங்கேயாவது அவசரமாகப் போய் விட்டு வருவார். சதா அவருக்குப் பணந் தேவைதான். அதைப் பார்த்தால் எனக்குக் கூடப் பாவமாக இருக்கும்."

"ப்பூ! இவ்வளவுதானா! பணக்காரர் என்றால் நான் என்னவோ என்று நினைத்தேன்!" என்று தன் தோள்களை லேசாகக் குலுக்கினான் சின்ன சாமி. அவன் கண்கள் அப்படியும் இப்படியும் ஒருமுறை சுழன்றன. யாரோ ரிக்ஷாவிலிருந்து இறங்கி அவனைப் பார்த்துக் கூப்பிட்டார்.

"பிறகு பார்க்கிறேன், கோவிந்தா!" என்று சொல்லி விட்டு ஒரு குதி குதித்துக் கொண்டு சின்னசாமி அவரை நோக்கி ஓடி விட்டான்.

அவனுடைய அந்தக் கட்டம் போட்ட துண்டு, கலகலவென்ற சிரிப்பு, மின்னும் விழிகள் எல்லாம் போய் விட்டன. கோவிந்தன் சற்று நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்து விட்டு, விலகி விட்டான். மனத்துக்குள் என்ன நினைத்தானோ தெரியவில்லை! அவன் முகம் சற்று மாறி யிருந்தது!



***

மாலை நேரம். சூரியன் மேற்கே தொலை தூரத்துக்கு அப்பால் மரங்களுக்கு அடியில் மறைந்து கொண் டிருந்தான். நகருக்கு வெளியே உள்ள ஒரு மரத்தடியில் சின்னசாமி உட்கார்ந்து இருந்தான். தூரத்துப் புல் வெளியில் வெய்யில் மிருதுவாகக் காய்ந்து கொண்டிருந்தது. வயலில் வரிசை வரிசையாக இருந்த நெற்கதிர்கள் சூரிய கிரணம் பட்டுத் தங்க மயமாக மின்னின.

அங்குமிங்குமாக வளர்ந்திருந்த சிறு மரங்களின் நிழல்கள் பலப்பல உருவங்களை வரைந்தாற் போல் கீழே விழுந்து இருந்தன.

வான வெளி நிர்மலமா யிருந்தது. ஆங்காங்கு வெள்ளை மேகக் கூட்டங்களும் கறுப்பு மேகக் குவியல்களும் ஊர்ந்து சென்றன. ஓசை யில்லாமல் பறவைக் கூட்டங்கள் ஒய்யாரமாகப் பறந்து சென்றன. எங்கும் அமைதி நிலவி யிருந்தது.

அந்த அமைதிக்கு நடுவில் 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் பயங்கரமாக ஓடிக் கொண்டிருந்தது ஒரு ஆறு. இரு கரையும் தொட்டுக் கொண்டு போகும் அந்த ஆற்று வெள்ளத்தில் என்ன என்னவோ மிதந்து சென்றன.

சின்னசாமி மரத்து அடியில் அமர்ந்த வண்ணம் அந்த ஆற்றையே பார்த்துக் கொண்டிருந்தான். ஏற்றத் தாழ்வில்லாமல் இரைச்சல் போட்டுக் கொண்டு ஓடிக் கொண்டிருந்த தண்ணீரைப் பார்த்து என்ன நினைத்தானோ, தெரியவில்லை. அப்பொழுது அவன் முகத்தில் எத்தனை எத்தனையோ விதமான எண்ண அலைகள் ஓடி மறைந்தது மட்டும் நன்றாகத் தெரிந்தது.

சின்னசாமி இந்தக் காட்சிகளை யெல்லாம் கூர்ந்து கவனித்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். அப்பொழுது அவன் கண்கள் வியப்பினால் மின்னின. சட்டென்று உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தான். முதுகுக்குப் பின்னால் கையைக் கட்டிக் கொண்டு நடந்தான். அவன் வாய் ஏதோஒரு இன்னிசைப்பண்ணை முணங்கிக் கொண்டிருந்தது.



சின்ன சாமியின் உயர்வை இதுபோன்ற சமயங்களில்தான் தெரிந்து கொள்ள முடியும். இப்பொழுதுதான் அவனைக் கூர்ந்து பார்க்க வேண்டும்.

வயல் ஓரத்தில் பலப்பல நிறமுள்ள புஷ்பங்களைப் பூத்துக் குலுங்கும் மலர்ச் செடிகளைக் குனிந்து பார்த்து ஆனந்தப்பட்டான். அவன் தலையும் அந்தப் புஷ்பங்களைப் போலவே சாய்ந்து சாய்ந்து ஆடியது. திறந்த வெளியிலிருந்து அடித்த மெல்லிய காற்றால் ஆடுகின்ற புஷ்பங்களையும் நெற்கதிர்களையும் பார்த்து லேசாகச் சிரித்தான். சட்டென்று சிரிப்பை நிறுத்தினான்.

மீண்டும் முதுகுப் புறத்தில் கையைக் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டான். ஏன் அப்படி நடந்தானோ!

சொல்ல முடியாத ஒரு உணர்ச்சியில் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். ஏதோ அவன் உள்ளத்தில் வேலை செய்து கொண்டிருந்தது. சற்று நேரம் இப்படியும் அப்படியும் நடை போட்டுக் கொண்டிருந்தவன், பிறகு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த வண்ணம் உட்கார்ந்து விட்டான்.

யாரோ கலகல வென்று இனிமையாகச் சிரித்துக் கொண்டு ஓடிவரும் சத்தம் கேட்டது. சின்னசாமி திடுக்கிட்டுத் திரும்பினான்.

சின்னஞ் சிறு பெண் குழந்தை ஒரு பட்டாம் பூச்சியைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தது. இன்னும் சற்றுத் தாமதித்தால் அந்தக் குழந்தை பயங்கர ஆற்று வெள்ளத்தில் விழுந்துவிடும். சின்னசாமி ஒரே தாவாகத் தாவி ஓடினான். குழந்தையைத் தூக்கிக் கொண்டு அப்பால் போனான். அந்தக் குழந்தையைப் பார்த்தான். அவன் மார்பு படபட வென்று துடித்துக் கொண்டிருந்தது.

அவன் கண்ணுக்கு எதிரே மலர்ந்த ரோஜாவைப் போல் அழகிய குழந்தை கன்னங்குழிய சிரித்தபடி நின்று கொண்டிருந்ததை மீண்டும் பார்த்தான். அதன் மார்பில் இருந்த தங்கச் சங்கிலி மின்னிற்று. காதில் தொங்கிய வயிரத் தொங்கட்டான் மின்னிற்று. பாவாடையின் சிவப்புப் பட்டு மின்னிற்று. சிரித்த முகத்தில் சிறு முத்துக்கள்போல் தெரிந்த வெண்பற்கள் மின்னின. அதேபோல குழந்தையின் சுருள் சுருளான கறுப்பு நிறத் தலைமயிரும், கருநீல விழிகளும் மின்னின.

சின்னசாமி அந்தக் குழந்தையையே விழுங்கி விடுவது போலப் பார்த்தான். அதைப் பார்த்து அந்தக் குழந்தை புன்முறுவல் பூத்தது.

"நீ தனியாகவா வந்தாய்! உன் அம்மா, அப்பா யாரும் உன்னோடு வரவில்லையா! கொஞ்சம் தவறியிருந்தால் இந்தப் பயங்கர ஆற்று வெள்ளத்தில் விழுந்து போயிருப்பாயே!"

"அப்பா கூடவேதான் வந்தேன். பட்டுப்பூச்சி ஒன்றைப் பிடிக்கத் துரத்திக் கொண்டே வந்தேன். இப்போ அப்பாவைக் காணோம்" என்று குழந்தை தன் மழலை மொழியில் கொஞ்சிக் கொஞ்சிக் கூறியது. அதன் சின்னக் கண்கள் பட்டாம் பூச்சியின் இறக்கையைப் போல் படபட வென்று துடி துடித்தன. களங்கமில்லாமல் சின்னசாமியின் அழுக்கடைந்த காலை அணைத்துப் பிடித்துக் கொண்டு ஆனந்தமாகச் சிரித்தது.

இந்தச் சமயத்தில் "திருட்டுப் பயலே! குழந்தையை என்ன செய்து கொண்டிருக்கிறாய்!" என்ற சத்தம் கேட்டுச் சின்னசாமி திடுக்கிட்டான்.

அவன் எதிரில் நடுத்தர வயதுடைய ஒருவர் நின்று கொண்டிருந்தார். குழந்தை "அப்பா!" என்று கத்திக் கொண்டே அவரைப் போய் அணைத்துக் கொண்டது. அவர் குழந்தையைத் தாவி எடுத்துத் தூக்கி அணைத்துக் கொண்டார்.

"யாருடா நீ! இங்கே வா, உன்னைப் போலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றார். அவர் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தன. கைகள் குழந்தையின் தலையை வருடிக் கொண்டிருந்தன.

"எதற்காக என்னைப் போலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டும்!" என்று சற்று வியப்புடன் கேட்டான் சின்னசாமி.

"ஜெயிலில் அடைப்பதற்குத்தான்."

சின்னசாமிக்குச் சொல்ல முடியாத வேதனை உண்டாகி விட்டது. உண்மையில் அவன் அழத் தொடங்கி விட்டான். இருந்தாலும் அழுகையை அடக்கிக் கொண்டு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கண்யம் குன்றாமல் சொன்னான்:

"ஐயா! என்னைப் போன்ற ஏழை அனாதைகளைச் சிறைக்கு அனுப்புவது உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கலாம். அது உங்கள் சொந்த விஷயம். ஆனால் இந்தக் குழந்தை மட்டும் என்னுடையதாக இருந்து நான் மட்டும் நீங்களாக இருந்திருந்தால் ஆற்றில் விழுந்து விடாமல் குழந்தையைக் காப்பாற்றியதற்காக உங்களுக்கு ஏதாவது பரிசு அளித்துப் பாராட்டி இருப்பேன்."

குழந்தையின் தந்தை ஒரு கணம் மௌனமாக இருந்தார். சின்னசாமியின் களங்கமற்ற முகத்தைப் பார்த்தார். அவர் மனம் மாறி விட்டது. தம் சட்டைப் பையில் கையை விட்டார். ஒரு எட்டணாக் காசை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அவன் அந்தக் காசை கைநீட்டி வாங்கிக் கொண்டான். ஒருதரம் இப்படியும் அப்படியும் திருப்பிப் பார்த்தான். "இந்தக் காசு செல்லுகின்ற காசு தானே!" என்றான். அவரை நன்றியோடு பார்த்தான். குழந்தையைப் பார்த்து லேசாகச் சிரித்தான். பிறகு அங்கிருந்து கிளம்பி விட்டான்.

சின்னசாமி என்னவோ அனாதைதான். ஆனால் கண்ணியம் மிக்க இளம் கனவான். அவன் முகத்தில் தவழும் சிரிப்பு இந்த உலகத்தில் உள்ள உயர்ந்த குணம் படைத்த, பண்பு நிறைந்த மனிதர்களிடம் தவழும் தாராளமான சிரிப்பு.

அவன் துள்ளி ஓடும் அழகைப் புள்ளி மானுக்குத்தான் ஒப்பிட வேண்டும். இயந்திரம் போலச் சொன்ன வேலைகளைச் சுத்தமாகச் செய்யும் அழகை வர்ணிக்கவே முடியாது.

சின்னசாமியைப் பார்த்துச் சிலபேர் "சச்சி! இது உருப்படாது. என்றைக்காவது ஒருநாள் கம்பி எண்ணத்தான் போகிறது" என்பார்கள்.

தீர்க்கதரிசனமும் உயர்ந்த நோக்கமும் படைத்த சில பெரிய மனிதர்களுடைய அபிப்பிராயமோ அவனைப்பற்றி வேறு விதமாக இருக்கும். "இவன் வருங்காலத்துத் தலைவன்" என்று சொல்லிப் பாராட்டுவார்கள். சின்னசாமி இந்தப் பாராட்டு தலைக் கேட்பான். கன்னம் குழிய சிரிப்பான்.

ஆனால் நமது தமிழ் நாட்டின் தனிப் பெரும் தலைவர் இருக்கிறாரே, தங்கத்தால் வார்த்தெடுத்தது போன்ற தலையும், ஒருதரம் பார்த்தால் மீண்டும் மறக்க முடியாத தீட்சண்யமான மூக்கும், அறிவுக் களை வீசும் முகமும் கொண்டவர்,—எல்லாரும் போற்றிப் புகழ்ந்து வணங்கும் மேதை இந்த அனாதைப் பையனைப் பற்றித் தமக்கெனத் தனி அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்.

"இந்த அனாதைப் பையன் எல்லாருடைய நண்பன்; உண்மையிலேயே மிகுந்த ஒழுக்கமுள்ள இளம் கனவான்; உங்களையும் என்னையும் விடக் கெட்டிக்காரன்; நீங்கள் சிநேகம் செய்து கொள்ள வேண்டியவன்" என்று சொல்லுகிறார்.

உண்மையும் அதுதான். இந்த அனாதைப் பையனைப் பார்த்தால் "இளம் கனவான்" என்று அவர் சொல்லுவதை நம்பத்தான் வேண்டும்.

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

46. சந்தேக விளக்கம்

கேள்வி:—உயரமாக வளர பத்திரிகைகளில் விளம்பரமாகும் மருந்துகள் உண்மையில் பயனளிக்கக் கூடியவைதானா? இயற்கையன்னையின் கருணையின்றிச் செயற்கையாகவோ அல்லது மருந்துகளின் உதவியினாலோ வளர்ச்சியை அதிகரித்துக் கொள்ளுவது சாத்தியம்தானா? இது பயனளிக்கும் என்றால் எத்தகைய தேக நிலையுள்ளவர்களுக்குப் பயன் தரும். இவைகளின்றித் தேக வளர்ச்சி அதாவது உயரமற்ற ஒருவர் தேகவளர்ச்சியை அதிகரித்துக் கொள்ள ஏதாவது வழியுண்டா? ஆசனத்தினால் இன்னும் என்ன பலன்கள் உண்டு?

பதில்:—கேள்வியின் முற்பகுதியை அம்மாதிரி மருந்துகளை விளம்பரப் படுத்துபவர்களிடம்தான் கேட்க வேண்டும். உயரமாக வளர்வது, பிட்யூடரியின் ஹார்மோனைப் பொருத்திருந்தாலும் அது வம்ச பரம்பரையையும் பொருத்தே இருக்கும். ஆனால் ஹார்மோன் கலந்த எந்த மருந்துகளாகட்டும், விளம்பரங்களை மட்டும் கண்டு டாக்டர்களுடைய மேற்பார்வையின்றி உபயோகப்படுத்துவது அபாயம் விளைவிக்கக் கூடியது.

இம்மாதிரி மருந்துகளின்றி இயற்கை முறையில் அதுவும் பதினாறு வயதிலிருந்து இருபது வயதிற்குள் உள்ளவர்கள் மற்ற ஆசனங்களுடன் சிரசாசனமும் செய்து வந்தால் அவரவர்களின் பரம்பரையைவிட இரண்டு மூன்று அங்குலம் மட்டும் உயரமாக வளர முடியும். அதிகம் எதிர் பார்க்க முடியாது. பொதுவாகவே வாலிபப் பருவம் நெருங்கும் சமயத்தில் அதாவது பதினொன்று வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்கள் இந்திரியத்தை வீணாக்காமல் இருந்தாலே போதும். போதிய வளர்ச்சியை அடைவார்கள். சர்வாங்காசனமும், மத்ஸ்யாசனமும், சிரசாசனமும் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பும், துணையும் செய்யும். வளர்ச்சியைத் தரும்.

செங்கற்பட்டிலிருந்து ஸ்ரீ கே. சிவராமன் என்னும் நண்பர் ஆசனத்தைப் பழகி அதன் மகிமையை விளக்கி ஒரு கவிதையே இயற்றி அனுப்பி வைத்திருக்கிறார். இதைவிட ஆசனத்தின் உயர்வை நான் எப்படி விளக்கப் போகிறேன்.

1 ஆசன மாலையை ஆன்றோர் அளித்தனர்
மாசகல் நீக்கினர் மாநிலத்தில்—தேசுபெற
அங்கம் தனையடக்கி ஆணவத்தைத் நீயாக்கி
எங்கும்நிறை ஈசனையே என்னு.

2 முத்திக்கு வித்தாய மும்மலம் நீக்கிடு,
சித்தென்னும் ஞானச் சிலைதன்னை-புத்தியெனும்
தேயு விளங்கத் தினமுநினைந் தேத்திடவே
தேயும் மடமை சிதைந்து

3 எல்லா அவயவமும் சக்க உடலுழைக்கப்
பொல்லாத நோய்விட்டுப் போகுமால்-நல்லாய்
சிரசொடு யாவும் முறையோடு செய்தல்
அருமருந் தன்றே உயிர்க்கு.


4 ஆசனம் செய்குவீர்: ஆருயிர் ஓம்புவீர்:
நேசமுடை அன்பரே மேதினியில்—காசின்றி
உள்ளநோயெலாம் ஒழிக்குமோர் நன்மருந்தை
தேன்வீதின் கற்பீர் சிறந்து.

கேள்வி:—சிறு வயதில் நீரிழிவு நோய் உண்டாகுமா? அதற்கு மருந்து இல்லாமல் ஆசனத்தினால் குணமாக்க முடியுமா? சர்வாங்காசனம் மட்டும் செய்தால் போதுமா அல்லது மற்ற ஆசனங்களையும் செய்ய வேண்டுமா?

பதில்:—சிறு வயதில் நீரிழிவு நோய் உண்டாவதுண்டு. சிறு வயதில் மட்டும் என்ன! சிறு குழந்தைகளுக்குக் கூடத்தான் உண்டாகிறது. பெற்றோர்களுக்கு இந்த நோய் இருந்து அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்குமானால் அக் குழந்தைகளுக்கும் இந்த நோய் வருகிறது. பெற்றோர்களுக்குப் பாங்கிரியாஸ் எனும் இன்ஸுலினின் உற்பத்தியாகும் உறுப்பு பலவீனமாகி வேலை செய்யாத நிலைமையில் குழந்தைகள் பிறந்தால் அவைகளுக்குப் பலவீனமான பாங்கிரியாஸ் அமைந்து விடுகிறது. சில குழந்தைகளுக்கு மிகச் சிறு வயதிலேயே வெளிக்குத் தெரியும். சிலருக்குச் சற்றுப் பெரியவர்களான பிறகு தெரியும். எனவே எப்படியும், அதன் பலவீனம் தெரியத்தான் செய்யும்.


இருவித
போஷணை உங்கள்
குழந்தைக்கு உதவுகிறது
பலமாக வளருவதற்கு
உங்கள் குழந்தைக்குக் கிடைக்கும் போஷணை அதன் எலும்புகளை உறுதியாக்கி, ஆரோக்கியமான தசைகளை அளிக்கத் தக்கதாக இருக்க வேண்டும். அந்த போஷணை அவனை துரிதமாக வளர்த்து, திடமாக வைத்திருக்கவேண்டும். ஸ்காட்ஸ் எமல்ஷன் இவ்வேலைகளைச் செய்யும், ஏனெனில் அதில் எலும்பு வளர்க்கும் சத்துக்களும், வலிமையை உண்டுபண்ணும் போஷணையும் நிறைந்திருக்கிறது.
ஸ்காட்ஸ் எமல்ஷன் சுத்தமான காட்லிவர் எண்ணை-... இயற்கையின் ஒரு புஷ்டியிக்க உணவு டானிக். அதில் விடமின் D நிறைந்திருப்பதால், ஒரு தேக்கரண்டி ஸ்காட்ஸில் நான்கு டம்ளர் பாலில் உள்ள எலும்பு வளர்க்கும் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன! ஸ். அதில் உள்ள விடமின் A குழந்தைகளை வியாதிகளும் தொற்று நோய்களும் அணுகாமல் பாதுகாக்கிறது. ஸ்காட்ஸ் எமல்ஷனை விட எளிதில் ஜீரணமாகக்கூடிய காட்லிவர் எண்ணையே கிடையாது.
நோயை எதிர்க்க
ஆம், இதுவும் முக்கியமானதுதான். ஏனெனில் ஆரோக்கியமான ஒரு குழந்தை நோய்வாய்ப்பட்டால் அதன் வளர்ச்சி தடைசெய்யப்பட்டு, தேகம் பாதிக்கப்படணம். ஸ்காட்ஸ் எமல்ஷனை உங்கள் குழந்தைக்குக் கொடுத்து, நோயை எதிர்க்கும் சக்தியையும், தொற்று நோயினின்று பாதுகாப்பையும் அவனுக்கு அளியுங்கள். டாக்டர்கள் 79 வருடங்களாக ஸ்காட்ஸை சிபார்சு செய்து வருகிறார்கள்.
SCOTT'S Emulsion
ஸ்காட்ஸ் எமல்ஷன்
ஒவ்வொரு தேக்கரண்டியிலும்
ஆரோக்கியம் நிறைந்திருக்கிறது
விநியோகஸ்தர்கள் :-
இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிட்.,
கல்கத்தா-பம்பாய் மதராஸ்-கொச்சின்-புதுடெல்லி-கான்பூர்

'SCISSORS'



மூன்று தலைமுறைகளாகப் பிரசித்தி பெற்றவை

5½ அணவுக்கு 10
உள்ளூர் வரி சேர்ப்பது
தனிக் கூட்டப்பட்டது

கடுமையான ஜலதோஷமும்

விரைவில் விலகும்

இடையுறாது உள்ள சளியை நிறுத்த சிறிது கிபாக்கை உங்கள் மூக்கினுள் தடவிக் கொள்ளுங்கள். மார்பு, நெஞ்சு, முதுகு முதலிய பாகங்களில் இரவில் படுக்குமுன் நன்றாகத் தடவி தேய்த்துக்கொண்டால், ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே சுவாச அடைப்பு நீங்கி சுகமாக சுவாசிக்க இயலும்.

முற்றிலும் தீங்கற்றதும் ஆவிரூபமாக மாறக்கூடியதுமான கிபாக்கிலுள்ள எண்ணெய்ச் சத்துக்கள் சுவாச மார்க்கத்தில் ஏற்படும் அடைப்பு முதலிய தடைகளை எளிதில் நிவர்த்திக்கும்.



கிபாக்

முகரவும் தேய்க்கவும் உகந்தது.

வெஸ்ட் மின்ஸ்டர் லாபரட்டரீஸ் லிமிடெட் லண்டன், தயாரிப்பு.

ஏஜெண்டுகள் : ஓரியண்டல் மெர்க்கன்டைல் ஏஜென்ஸி,

99.A., அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.1.

SISTAS—WL—80-A TAMIL

இதை ஆசனங்களினாலும், உணவுக் கட்டுப்பாட்டினாலும் மிகச் சுலபமாய்க் குணமாக்க முடியும். ஆனால் நோயாளியின் வயது, பலம், வியாதியின் தன்மை இவைகளை அனுசரித்து ஆசனப் பயிற்சிகளுடன் மருந்துகளை உபயோகிப்பதா அல்லது வெறும் ஆசனங்கள் செய்வதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். சில நிலைமையில் முதலில் ஆசனங்களுடன் மருந்தும் உபயோகிக்க வேண்டியிருக்கும். ஆனால் இதற்கு வெறும் சர்வாங்காசனம் மட்டும் போதாது. புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், பஸ்சிமோத்தானாசனம், மயூராசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம், அர்த்த மத்ஸ்யேந்திராசனம், திரிகோணாசனம் முதல் உட்டியாணா, நௌலி வரை இதற்கு ஏற்ற ஆசனங்கள்தான். ஆப்பரேஷன் வயிற்றில் செய்திருந்தால் கட்டாயம் ஆசன நிபுணரின் ஆலோசனைப்படி நடக்க வேண்டும். மற்றவர்களும் ஆசன நிபுணர்களின் ஆலோசனையை நாடிப் பழகி வருவதுதான் நல்லது.

கேள்வி :—ஆசனங்களைச் செய்யும்போது கௌபீனம் அணிந்து கொள்ள வேண்டுமென்று சொன்னீர்கள். கௌபீனம் அணியாமல் செய்து வந்த நான், தங்கள் கட்டுரையைப் படித்தபின் கௌபீனம் அணிந்து ஆசனங்கள் செய்தேன். ஆனால் எனக்கு அது என்னவோ விலங்கு போட்டது போன்று இருக்கிறது. சில ஆசனங்கள் செய்யவும் கஷ்டமாயிருக்கிறது. கௌபீனம் கட்டாயம் அணிந்துதான் ஆகவேண்டுமா! அப்படியில்லாமல் செய்வதினால் ஏதாவது கெடுதிகள் உண்டாகுமா! கௌபீனம் கட்டிக்கொள்ளத்தான் வேண்டுமென்றால் அதனால் ஏற்படும் கஷ்டத்திற்கு என்ன பரிகாரம் செய்யலாம்!

பதில் :—சலபாசனம், தனுராசனம், மற்றும் சர்வாங்காசனம், முதலியவைகளைச் செய்யும் போது கௌபீனம் இல்லாமல் இருந்தால் நிலைமைகள் மாறுதல் அடைகின்றன. தவிர தனுராசனம் செய்யும்போது முன்னுக்கும் பின்னுக்கும் உடலை ஆட்டும் போது விரைகள் நசுங்க ஏதுவாகும். அப்படி நசுங்குவதால் வீக்கமும் வலியும் உண்டாகித் தொந்தரவு ஏற்படும். இம்மாதிரி யெல்லாம் ஏற்படாமல் இருக்கத்தான் கௌபீனம்தரித்துக்கொள்ள வேண்டுமென்பது. கௌபீனம் அணிந்து அதன்மேல் ஷட்டியையோ, அரைக்கால் நிஜாரையோ போட்டுக் கொள்ளலாம். அல்லது கௌபீனத்துக்குப் பதில் லங்கோடு உபயோகிக்கலாம்.

சிறு வயதிலிருந்து கௌபீனம் கட்டி வழக்கமாயிருக்கிறவர்களுக்கு ஆசனம் செய்யும்போது கௌபீனம் இருந்தால் கஷ்டமாய் இருக்காது. அப்படிப் பழக்கம் இல்லாதவர்களுக்குக் கஷ்டமாயிருக்கும். கௌபீனம் அணிவது நமது நாட்டுக் கலாசாரமாகும். அதை எப்படியோ இக்காலத்தில் புறக்கணித்து வருகிறீர்கள். அதை மறுபடியும் கடைப்பிடிக்க வேண்டியது நல்லது.

ஆசனம் செய்யும்போது கௌபீனம் கட்டிக் கொள்வதினால் உண்டாகும் கஷ்டத்திற்குப் பரிகாரம் அதை விடாமல் மற்ற நேரங்களிலும் கட்டிப் பழக்கப்படுத்திக் கொள்வதுதான்.



சர்வாங்காசனம்

கேள்வி :—தாங்கள் 'கல்கி'யின் மூலமாக யோகாசனங்களைப் பற்றிப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தது முதல் தமிழர்கள், உலகில் எங்கெங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஆசனப் பிரசாரம் பரவலாய்ப் பரவி அநேகர் ஆசனங்களைச் செய்து பல நன்மைகளை அடைந்து ஆரோக்கியமடைந்து வருகின்றனர். அவர்களில் நானும் ஒருவன். இவ்வளவு நன்மைகளை இந்த யோக ஆசனங்களால் அடைய முடியும் என்பதை இத்தனை நாள் அறியாது எனது வாழ்நாளில், பெரும் பகுதியை வீணாகக் கழித்து விட்டோமே என்று பச்சாதாபப் படுகிறேன். ஆயினும் என்னைப் போலவே மற்றவர்களும் இருந்து விடாமல் இருப்பதற்காக இப்பொழுதிருந்தே நாம் ஏன் முயற்சி செய்யக் கூடாது! வருங்காலப் பிரஜைகளாகிய குழந்தைகளுக்கு ஏன் இந்த யோகாசனப் பயிற்சியைப் பள்ளிக் கூடங்களிலும் கலாசாலைகளிலும் போதிக்கக் கூடாது! அப்படி போதித்தால் சிறு வயதில் ஏற்பட்ட வழக்கம் பிற்காலத்தில் அவர்களுக்கு அஸ்திவாரமாக அமையுமல்லவா! பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் அக்கறை யெடுத்துச் சொல்லித் தருவார்களானால் பெற்றோர்களுக்கு மிக்க உபகாரமாகவும் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியமாய் இருந்தால் சந்தோஷமடைவதுடன் அவர்கள் நோய்களுக்காகச் செலவிடும் பணமும் மிச்சமாகும். ஒரு குடும்பத்தில் ஐந்தாறு குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு ஒன்றுக்கு மாறி ஒன்றுக்கு ஏதாவது நோய் வந்து கொண்டே இருக்கிறது. அதன் காரணமாக வருவாயில் கால் பங்கு சில சமயம் அரை பங்குகூட செலவாகி கடனாளியாகவும் ஆக வேண்டியிருக்கிறது. அப்படி யெல்லாம் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் இந்த யோகாசனங்களைப் பள்ளிக் கூடங்களில் சொல்லித் தந்தால்தான் முடியும். இதற்கு ஏதேனும் வழி செய்ய முடியுமா!

பதில் :—அன்பரே! உங்கள் கேள்வி மிகச் சிரேஷ்டமானது. இம்மாதிரி கேள்விகளைப் பல பெற்றோர்கள் என்னிடம் நேரில் கேட்டும் இருக்கின்றனர். பள்ளிக் கூடங்களிலும் கலாசாலைகளிலும் இந்த யோகாசனங்கள் மட்டும் அல்ல, மற்றும் நாட்டுப் பயிற்சிகள் விளையாட்டுகளாகிய தண்டால், பஸ்கி, கசரத், கர்லா, பாரம் தூக்கல் முதல் மற்ற மேல் நாட்டுப் பயிற்சிகள் வரை சகலமும் சொல்லித் தரலாம் என்று சட்டமென்னமோ ஏற்கெனவே இருக்கிறது.

ஆனால் நடை முறையில் அதை அனுசரிப்பதுதான் கிடையாது. புட்பால், கிரிக்கெட், டென்னிஸ், டேபிள் டென்னிஸ், வாலிபால் முதலிய மேல்நாட்டு விளையாட்டுகளுக்குத்தான் முக்கியம் கொடுக்கிறார்கள். அதன் காரணமாக நம் நாட்டுப் பணம் ஏராளமாக வெளி நாடுகளுக்கு அனுப்புகிறோம். ஒரு காசும் செலவில்லாத யோகாசனங்களைச் சொல்லித்தரக் காணோம். அப்படிச் சொல்லித்தர வேண்டுமானால் ஆசிரியர்கள்கூட முதலில் தேவை. இப்போதிருக்கும் தேகப் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஆசனங்களைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது. அநேகருக்கு நம்பிக்கையு மில்லை. இந் நிலைமையில் சட்ட பூர்வமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால்தான் முடியும். இப்பொழுது இருக்கும் ஆசிரியர்களுக்கே ஆசனமும் சொல்லித்தர பயிற்சி பெற்று வர வேண்டும் என்று சொன்னால் எப்படியும் யோகாசன நிபுணர்களை நெருங்கி ஆசனம் பயின்று கொள்வார்கள். அல்லது ஆசனத்தேர்வுக்காக நற்சாட்சிப் பத்திரம் பெற்று வந்தால் சம்பளம் சில ரூபாய் அதிகம் தரப்படும் என்றாலும் ஆசிரியர்கள் பயின்று வருவார்கள். இதற்காகச் செலவாகும் ரூபாய் மற்ற விளையாட்டுச் சாமான்கள் வாங்கும் தொகையி லிருந்து எடுத்துக் கொள்ளலாம்.



சிரசாஸனம்

இவைகள் எல்லாம் நடைமுறையில் கொண்டு வரவேண்டுமானால் உங்களைப் போன்ற ஆசனப் பயிற்சியாளர்கள் ஆங்காங்கு ஒன்று சேர்ந்து மகாநாடுகளை நடத்திப் பல தீர்மானம் செய்து அனுப்பினால் கவனிப்பார்கள்.

கேள்வி:—அறுபது வயதானாலும் ஆசனம் செய்யலாம் என்று சொல்லுகிறீர்களே, எனக்கு வயது எழுபது ஆகிவிட்டது. நான் ஆசனம் செய்யலாமா?

பதில் :—நன்றாய்ச் செய்யலாம். முதலில் சுலபமாய்ச் செய்யக்கூடிய விபரீத கரணியைத் தலையணை உதவியுடன் ஓரிரு மாதங்கள் செய்ய வேண்டும். பின் சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம் செய்ய வேண்டும். அதன்பின் ஓரிரு மாதங்கள் கழித்துச் சிரசாசனமும் செய்யலாம்.

இதே இதழில் வெளிவந்திருக்கும் திவான் பகதூர் ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார் அவர்கள் சர்வாங்காசனமும் சிரசாசனமும் செய்வதைப் பாருங்கள். அவருக்கு வயது எழுபத்திரண்டு. அவரை அறியாதவர்கள் நமது நாட்டில் இருக்க மாட்டார்கள். இந்த முதிய வயதிலும் பல பொதுப் பணிகளை உற்சாகத்துடன் செய்து வருகிறார்கள். அவர் எழுதி யிருக்கும் கடிதத்தைக் கீழே கொடுத்திருக்கிறேன். படித்துப் பாருங்கள்.


வெகு இளம் பிராயத்திலேயே நான் குண்டாகரணம் போடுவேன். அதிலிருந்து நாளடைவில் தலைகீழாய் நிற்கும் பயிற்சி ஏற்பட்டது. ஆனால் அது ஒரு சிறந்த ஆசனம் என்று அப்பொழுது எனக்குத் தெரியாது. சுமார் 35 வருஷங்களுக்கு முன்தான் யோகாசனங்களைப் பற்றி நான் அறியலானேன். பிறகு நான்கு ஆசனங்களில் எனக்குப் பயிற்சி ஏற்பட்டது. அவை யாவன: சிரஸாசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், பத்மாசனம். இப்பொழுது எனக்கு நடக்கும் 77-வது வயதிலும் நான் கூடியவரை உடல் நலத்தோடும் சுறு சுறுப்போடு இருக்கிறேனென்றால் அதுமேற் சொன்ன ஆசனப் பயிற்சியின் உதவியால்தான் என்று நினைக்கிறேன். முக்கியமான ஆசனங்களைப் பழகச் செலவில்லை; கஷ்ட மில்லை. அவைகளைப் பழக்கிக் கொண்டு அனுஷ்டித்து உடல் நலனையும் மனோ சாந்தியையும் சுகத்தையும் பெறுவார்களாக!

இந்த மாதிரியாக எத்தனையோ வயது முதிர்ந்த பெரியோர்கள் ஆசனங்கள் பழகித் தங்கள் உடல் நோயைத் தீர்த்துக் கொண் டிருக்கிறார்கள். எழுபது பிராயம் கடந்த பிறகு ஆசனம் போட்டால் சென்று போன இளமை திரும்பி வந்து விடாது. ஆனால் ஆரோக்கியமாக இருக்கலாம்; சந்தோஷமாக இருக்கலாம்; பிறருக்கு இடைஞ்சல் இல்லாமலும் வாழ்ந்து வரலாம்.

இலங்கை, மலேயா இன்னும் கடல் கடந்து சென்று இருக்கும் தமிழர்கள் எல்லாம் தினம் தினம் பலப் பல கேள்விகள் கேட்டுக் கடிதங்கள் எழுதுகிறார்கள். அவர்கள் கேள்விகள் எல்லாவற்றுக்குமே கடிதத்தின் மூலமாகப் பதில் எழுத முடியவில்லை. சில சந்தேகங்கள் நேரில் உடலைப் பரிசோதித்துப் பார்த்துத்தான் சொல்ல முடியும். ஆகையால் நண்பர்கள் தங்கள் பக்கத்தில் உள்ள ஆசன நிபுணர்களிடம் சென்று உண்மையை மறைக்காமல் கூறித் தெரிந்து கொள்ள வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் சில தோழர்கள் தாங்கள் பழகி வரும் ஆசனங்கள் அது கல்கியில் வரும் ஆசனப்படங்கள் போல் இல்லையே என்று குறைபடுகிறார்கள். இன்னும் சில ஆசன நிபுணர்கள் 'கல்கி'யில் வரும் ஆசனப் படங்கள்கூட சரியாக இல்லை என்று குறை கூறி யிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் முந்திய கட்டுரைகளிலேயே பதில் இருக்கிறது.

முதுகு கூனலாக இருப்பவர்கள் சர்வாங்காசனம் போட்டால் அது சர்வாங்காசனப் படம் கல்கியில் வந்திருப்பது போல அவ்வளவு சரியாக இருக்காது. அதனால் முதுகு கூனலாக இருப்பவர்கள் போடும் சர்வாங்காசனம் தவறு என்று ஆகுமா? ஒருக்காலும் இல்லை. அது போல் கல்கியில் பிரசுரமாகி இருக்கும் ஆசனப் படங்களைப் பார்த்துத் தவறு என்று எந்த ஆசன நிபுணராவது சொன்னால் அவருக்குப் புகைப் படத்தைப் பற்றிய ஞானக் குறைவால் ஏற்படும் குறையே தவிர "கல்கி"யில் வெளியாகி யிருக்கும் ஆசனப் படங்களின் மீது எந்தவிதமான தவறும் இல்லை. (தொடரும்)



டிரக்குகள்
மற்றும்
பஸ்ஸுகளுக்கு
சிவப்பு வளையத்தைக் கவனித்து வாங்கவும்
சூப்பர் இந்தியா



என் சித்தி

ரோஜா

அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தேன்.

சமையற்கட்டிலிருந்து வந்த கனிணா, "பால் கொட்டிப் போய்விட்டது. சீக்கிரம் போய்ப் பால் வாங்கி வாருங்கள்!" என்றாள்.

அவள் புடவைத் தலைப்பைப் பற்றிக் கொண்டே நிழலைப்போல் தொடர்ந்து வந்த சிறுமி சாரு, "இல்லேப்பா, அம்மாதான் பாலைக் கொட்டி விட்டாள். பால் ஒன்றும் தானே கொட்டிப் போகவில்லை!" என்றாள்.

சாருவின் இந்த வார்த்தைகள் என்னை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. மழலை மாறாத குழந்தை உள்ளத்திலிருந்து அவ்வளவு அர்த்த புஷ்டியான விஷயம் எப்படி எழுந்ததோ? எனக்குத் தெரியவில்லை.

இதற்குள் மெல்லிய குரலில் என்னவோ முணு முணுத்துக் கொண்டே சமையற் கட்டை நோக்கிச் சாருவையும் இழுத்துக் கொண்டு விரைந்தாள் கனிணா.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கொல்லைப் புறத்துக் கிணற்றடிக்குச் சென்று அவசர அவசரமாகப் பல் துலக்கினேன். ஏதோ சந்தர்ப்ப வசமாய் அங்கு வந்த பால்காரனைக் கூப்பிட்டு மீண்டும் பால் கொடுக்கும்படி கூறிவிட்டு வழக்கம் போல் மாடி யறைக்குப் பத்திரிகை படிப்பதற்காகச் சென்றேன்.

சண்டித்தனம் செய்யும் வண்டிக் குதிரை மாதிரி எனது சிந்தனை சற்று நேரம் தடுமாறி விட்டுப் பின்னோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

பத்து ஆண்டுகளுக்கு முன் நான் தொழிற் கல்வி படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் முன் இரவு நேரம். மழை காலம்.

"குக்கூ...கூ...ஊ..." என்று அலறிக் கொண்டு சென்ற ரயில் வண்டி ஆராய்ச்சிப் புத்தகத்திலீடுபட்டிருந்த என்னைக் கலைத்தது. மழை நின்று விட்டதா என்று ஜன்னலைத் திறந்து பார்த்தேன். மழை சற்று விட்டிருந்தாலும் தூவானம் விடவில்லை. பிசு பிசு வென்று தூறிக் கொண்டே இருந்தது. மறுநாள் பரீட்சை எழுத வேண்டியதை நினைத்துக் கதவைத் தாழிட்டு விட்டு மீண்டும் கவனமாகப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன்.

"சித்தி! சித்தி!" என்று யாரோ மெதுவாகக் கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. புத்தகத்தை மூடி வைத்து விட்டுத் தாழ்வாரத்தின் வழியே சென்று கதவைத் திறந்தேன். வாடைக் காற்று 'விர்' என்று உள்ளே வீசியது. தூங்கி வழிந்து படித்துக் கொண்டிருந்த என் முகத்தின் மேல் பட்டவுடன் எனக்கு மெய் சிலிர்த்தது.

"குளிர் பல்லைக் கிட்டுகிறதே!" எனக் கூறிக் கொண்டே உள்ளே நுழைந்த கனிணா அப்பொழுது தான் மின்னிய மின்னலொளியில் என் முகத்தைப் பார்த்தாள். "ஆ!" என்று அலறிவிட்டாள். கையில் வைத்திருந்த வெண்கல உருளி கீழே நழுவி விழுந்து விட்டது.

இந்தச் சத்தத்தைக் கேட்டுத் தூங்கிக் கொண்டிருந்த என் சித்தி திடுக்கிட்டு எழுந்தாள். "எலி, உபத்திரவம் அதிகமாய் விட்டது. சற்றுக் கூட நிம்மதியாய்த் தூங்க முடிவதில்லை" என முணுமுணுத்துக் கொண்டே விளக்கைப் போட்டாள்.

எதிர்பாரா வண்ணம் என்னைச் சந்திக்க நேர்ந்த கனிணாவுக்கு அந்தக் குளிரிலும் 'குப்' என்று உடல் பூராவும் வியர்த்து விட்டிருந்தது. மின்சார விளக்கின் ஒளியில் அவள் முகத்தில் முத்து முத்தாய் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளில் பிரதிபலித்து அவள் அழகை மிகைப் படுத்தியது.

ஒருவாறு தன் நிலைமையைச் சமாளித்துக் கொண்ட கனிணா வெண்கல உருளியைக் குனிந்து எடுத்துக் கொண்டு என் சித்தியை நோக்கிச் சென்றாள்.

என் சிறிய தாயார் சாருமதியை ஊரில் உள்ள எல்லோருமே 'சித்தி' என்றுதான் அழைப்பது வழக்கம்.

கனிணா, "சித்தி! கொஞ்சம் பால் இருந்தால் கொடுங்களேன். அவர்கள் இந்த எட்டு மணி ரயிலில் தான் வருகிறார்களாம். பாலைப் பூனை குடித்து விட்டது" என்றாள்.

"அடடா! இப்போதானே பாலில் உறை குத்தினேன்!" என்று வருந்தினாள் சித்தி.

நளினாவின் முகத்தில் வேதனையின் சாயை படர்ந்தது. அதைப் பார்த்தவுடன் என் மனதை என்னவோ செய்தது. சட்டென்று என் அறைக்குள் சென்றேன். நான் குடிப்பதற்காக வைத்திருந்த பாலை எடுத்து வந்து அவளிடம் நீட்டினேன்.

முதலில் வேண்டாம் என்று மறுத்தாள். பிறகு என்ன நினைத்தாளோ அதைப் பெற்றுக் கொண்டாள். அவள் முகத்தில் நன்றி உணர்ச்சி பளிச்சிட்டது. என்னை ஏக்கம் நிறைந்த பார்வையோடு உற்று நோக்கி விட்டு அங்கிருந்து சென்று விட்டாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

என் சித்தியைப் பார்த்து, "அவர்கள் என்றால் யார்?" என்று கேட்டேன்.

"நாளைக்கு நிச்சயதார்த்தம். மாப்பிள்ளையோடு வரப் போகிறவர்களைத் தான் 'அவர்கள்' என்று சொன்னாள்" என்று சித்தி சொன்னாள்.

சித்தியின் வார்த்தைகள் சுத்தியால் அடிப்பதைப் போல் என்னுள்ளத்தில் தாக்கியது. கதவைத் தாழ் போட்டு வந்த சித்தி விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டாள்.

என் மனதிலும் இருள் கவிந்து கொண்டது.

* * *

ஆற்றங்கரையில் மண் வீடு கட்டி விளையாடிய வயதிலிருந்து நான் அவளை அறிவேன். பண்ணோடு இயைந்த கீதத்தைப் போல அவள் என்னுள் ஐக்கியமடைந்து இருந்தாள். என் நினைவுச் சுடர் அவள் மன விளக்கில் எப்போதும் ஒளி வீசிக் கொண்டிருந்தது. மூன்று வருஷங்களுக்கு முன் தொழிற் பயிற்சிக்காக வெளியூர் சென்றிருந்த நான் இரண்டு தினங்களுக்கு முன்புதான் பரீட்சையை முன்னிட்டு வீடு திரும்பி இருந்தேன். அல்லும் பகலும் பரீட்சைப் புத்தகத்தோடு மன்றாடிக் கொண்டிருந்த எனக்கு வெளியே கிளம்ப அவகாசமே வாய்க்கவில்லை.

தொழிற் கல்வியைப் பூர்த்தி செய்த பின் அவள் தந்தையின் மனத்தை மாற்றி அவளை மணம் முடித்துக் கொள்ளலாம் என்று மனப்பால் குடித்து வந்தேன். என் மனத்தில் கொஞ்சம் நஞ்சமிருந்த நம்பிக்கையும், இப்பொழுது அடியோடு போய் விட்டது.

மறுநாள் பரீட்சை எழுதிவிட்டு விரக்தி தோய்ந்த மனத்துடன் வீட்டிற்கு வந்தேன். என் சித்தி, அவளுக்கு முகூர்த்தம் நிச்சயமாகி விட்டதென்றும் அவளை மணக்கப் போகும் பையன் அடக்கமானவன் என்றும் நல்ல பணக்காரன் என்றும் சொன்னாள்.

பூர்ண சந்திரனின் முகப் பொலிவைக் கொண்ட அவளை அடைய அலைபாயும் என் மனம் பௌர்ணமியன்று தன் நிலவு பொழியும் பூர்ண மதியை அடைய விரும்பி, பொங்கிப் பொங்கி அல்லலுறும் நீலக் கடல் அலைகளின் தன்மையைத்தான் நினைவூட்டியது. இருந்தாலும், ஏதோ இனந் தெரியாத ஓர் உணர்ச்சி என் மனத்தை வாட்டி வதைத்தது. சித்தி கோவிலுக்குச் சென்று விட்டாள்.

வீட்டுத் தோட்டத்தில் வானத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன்.

அந்தி வேளையில் சூரியன் செய்யும் இரசவாத வித்தைகூட எப்போதும் போல் எனது கவனத்தைக் கவரவில்லை. யாரோ, தயங்கித் தயங்கி அடிவைப்பதைப் போன்ற சத்தம் கேட்டுத் திரும்பினேன். உரிமையோடு தலை நிமிர்ந்து நடமாட வேண்டிய நளினா அவ்வாறு தயங்கித் தயங்கி வருவதைக் காண என் மனம் துடி துடித்தது.


அவள் அழகிய முகம் அழுது அழுது சிவந்து இருந்தது. அந்தி நேரத்தின் சிவந்த கிரணங்கள் அந்தச் சிவப்பை இன்னும் மிகைப் படுத்தியது. அவளது விழிக் கோணங்களில் துளிர்த்த கண்ணீர் முத்துகள் அவள் சொல்லப் போகும் விஷயத்திற்குக் கட்டியம் கூறுவது போலிருந்தது.

"சித்தி கோவிலுக்குப் போயிருக்கிறாள்" என்று நானே முதலில் பேச்சை ஆரம்பித்தேன்.

"தெரிந்துதான் வந்தேன்" என்றாள் நளினா தயங்கியவாறே. அவள் குரலில் ஏன் அவ்வளவு நடுக்கம்?

"பணக்காரப் பையனுக்கு மனைவியாகப் போகும் நீ என்னைக் காணத் தனியே வரலாமா?" என்றேன்.

"ஆ! தாங்களுமா அப்படி நினைக்கிறீர்கள்! இல்லை, இல்லவே யில்லை! உங்கள் அன்பு உள்ளம் எனக்குத் தெரியாததா? தாங்கள்தான் இதற்கு வழி செய்ய வேண்டும்" என்று விம்மலுக்கு இடையே கூறினாள்.



"ஏண்டா குழந்தை! ஒரு காரணமும் இல்லாமல் கோவிச்சுக்கிட்டு இப்படி ஓயாமல் கையைக் கட்டிக் கொண்டு நிற்கிறே?"

"அக்கா வந்து நான் இப்படி கோவிச்சுக்கிட்டு கை கட்டிக்கொண்டு நின்னால் 'இரண்டுதலை மனுஷன்' வருவான்னு சொன்னாள். நானும் விடாமல் கையைக் கட்டிக் கொண்டு கோவிச்சுக்கிட்டு நின்னு பார்க்கிறேன். அவன் என்னமோ வரக்காணோமே!"

அவன் தந்தையின் மனப் போக்கை நன்கு உணர்ந்த நான், "இனி, நீ என்னை மணப்பது பற்றி மறந்து விட வேண்டும். உன் தந்தையால் நம் உடலைத்தான் பிரிக்க இயலுமே தவிர நமது அன்பை ஒருக்காலும் பிரிக்க முடியாது. நாம் மணந்தால்தான் அன்பு செலுத்த முடியுமென்று நினைக்காதே. என்னை இனி உன் உடன் பிறந்தோனைப் போல் நினைத்துக் கொள்" என்றேன். அவளுக்குச் சற்று ஆறுதலாக.

"தங்களைத்தானே நான் நம்பி யிருந்தேன்? தாங்களே இப்படி மாறிவிட்டீர்களே, மனிதன் முயன்றால் முடியாத காரியமும் உண்டா? நீங்கள் ஒரு பெண்ணாக இருந்திருந்தால் உங்களுக்கு என் வேதனை தெரிந்திருக்கும்" என்றாள்.

"ஆம்! பெண்ணுக்குத்தான் பெண்ணுள்ளம் புரியும்" என்று சொல்லிக் கொண்டே என் சித்தி அவளை அணைத்துக் கொண்டாள்.



மாமியார் :—எந்த சாமான் வேண்டுமானாலும் அடிக்கொரு தரம் வந்து என்னையே கேட்கிறாயே? நான் ஊருக்குப் போயிருந்த போது என்ன செய்தாயாம்?

மருமகள் :—நீங்கள் ஊரில் இல்லாத சமயத்தில் அந்த அந்த இடத்திலே அது அது இருக்கும்.

பிறக்கும்போதே தாயை யிழந்த நளினா, தாயின் அன்பான அரவணைப்பையே கண்டறியாத அவள், வாஞ்சை வாய்ந்த என் சித்தியின் மொழிகளைக் கேட்டு, சித்தியின் தோளில் முகம் புதைத்து உள்ளம் நெகிழ்ந்து விம்மி அழலானாள்.

அப்போதுதான் கோவிலிலிருந்து வந்த என் சித்தி உணர்ச்சியின் வேகத்தில் தன் வயமிழந்து சூழ்நிலையை அறவே மறந்திருந்த எங்கள் வாய்மொழிகளைக் கேட்கும்படி நேரிட்டு விட்டது.

இரண்டாந்தாரமாக, வயோதிகனான கணவனுக்கு மாலையிட்டு, மறுமாதமே கணவனைப் பறிகொடுத்து விட்டு, மூத்தாள் மகனான என்னைத் தாய்மை யுணர்ச்சியுடன் வளர்த்து உருவாக்கிய என் சித்தியும் ஓர் பெண்தானே!

நன்கு பண்பட்ட உள்ளம் வாய்ந்த என் சித்தி, புண்பட்ட அவள் இதயத்துக்கு ஆறுதல் அளிக்கட்டும் என எண்ணி நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, அவள் வீட்டு வண்டிக்காரனைப் பார்த்தேன். "கேட்டீங்களா சாமி கதையை, அம்மாவுக்கு இருந்தாப்பலே இருந்து புத்தி மாறிப் போய் விட்டது. அதனால் கல்யாணமே நின்று விட்டது. என் மனசே இதைப் பார்த்துச் சங்கடப்படுகிறது. எசமான் மனசு என்ன பாடுபடுதோ! பெற்ற மனசாச்சுங்களே" என்று சோகத்தோடு சொன்னான்.

இதைக் கேட்டவுடன் என் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. நான் அடுத்த கணம் நளினாவின் வீட்டை நோக்கி ஓட்டமாக ஓடினேன்.

அவள் என்னைப் பார்த்தாள். "இனிஎன்னை உன் சகோதரி போல் நினைத்துக் கொள். ஹஹ்ஹா!" என்று கத்தினாள். வாய் விட்டுச் சிரித்தாள்; இன்னும் என்ன என்னவோ உளறிக் கொண்டிருந்தாள்.

அம்மொழிகள், என்னுடைய இதயத்தைத் தீயெனத் தகித்தது. அந்த வார்த்தைகள் அன்று நான் அவளிடம் சொன்னவைகள்தான். இதை என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. இரு கைகளாலும் தலையை அமுக்கிப் பிடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தேன்.

சித்தி வீட்டில் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். என்னைப் பார்த்து மெதுவாகச் சிரித்தாள். அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்ட விஷயத்தைச் சித்தியிடம் சொன்னேன். அதைக் கேட்டு மீண்டும் சிரித்தாள். சித்திக்கும் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று நினைத்தேன்.

சித்தி பேச ஆரம்பித்தாள். "இது எங்களுடைய கூட்டு ஏற்பாடு. நானும் அவளும் சேர்ந்துதான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். சில நாட்களில் அவள் பைத்தியம் தானே தெளிந்துவிடும். ஆனால் அவள் பைத்தியம் என்று யாரும் அவளை மணக்க முன்வரமாட்டார்கள். நீ அவளை மணந்து கொள்வதில் ஒரு தடையும் இருக்காது" என்றாள்.

எனக்குச் சித்தி ஒரு தெய்வமாகவே தோன்றினாள். பெற்ற தாயைவிட பெரிய தாயாகக் காட்சி அளித்தாள். "சித்தி, நீங்கள் தான் என் தெய்வம்" என்று அவள் காலில் விழுந்தேன். கையெடுத்துக் கும்பிட்டேன்.

சித்தி என்னை அன்போடு எடுத்து அணைத்துக் கொண்டு மனதார ஆசீர்வதித்தாள்.

* * *

இரண்டு வருஷங்கள் கழிந்த பிறகு எங்கள் திருமணம் எந்தத் தடையும் இல்லாமல் ஜாம் ஜாம் என்று நடந்தது. கல்யாணப் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டு என் சித்தி சந்தோஷப் பட்டாள். எங்கள் திருமணத்தை முடித்து வைத்த என் சித்தி எங்கள் குழந்தையின் மழலை மொழியைக் கேட்கும் வரையில் இருக்கவில்லை. சித்தி நினைவாக என் குழந்தைக்குச் 'சாரு' என்று பெயர் வைத்திருக்கிறோம்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk Madras

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

